உ

கடவுள் துணை.

# சதகண்டராவணன் கதை.

இஃது-மைலம்

சுப்பிரமணியசுவாமிகளாற்

பார்வையிடப்பட்டு.

சென்னை - இட்டா

பார்த்தசாரதிநாயுடு

அவர்களது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1910.

சென்னை, ஆச்சாரப்பன் தெரு, ந:-84.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# முகவுரை.

---

## ஸ்ரீராமர் துதி.

### கலிவிருத்தம்.

அருமறைமுதல்வனை யாழிமாயனைக்
கருமுகில்வண்ணனைக் கருணைமூர்த்தியைத்
திருமகடலைவனைத் தேவதேவனை
இருபதமுளரிக ளிறைஞ்சியேத்துவாம்.

என்னுண்டவராய் விளக்கப்பட்ட வால்மீகர் சொல்லிய இராமாயணத்தில் உயுத்தகாண்டத்திற் கூறப்பட்ட இந்த சதகண்டராவணன் சரித்திரத்தை யாவராயினுஞ் சிரத்தையோடும் சத்தியோடும் கேட்பாராயின் ஸ்ரீராம மூர்த்தியினுடைய கடாட்சத்தால் அவர்கட்குச் செனனம் மரணம் பகை பயம் இடையூறு முதலிய துன்பங்களில் ஒன்றேனும் நெருங்காது, அன்றியும் சூரிய கிரகணமுஞ் சந்திர கிரகணமுமாகின்ற காலத்தில் உருத்திர பூமியிற் சென்று ஆயிரபாரம் பொன்னைப்பூமியிற் கிரமப்படி சத்பாத்திரம் அறிந்து தானஞ் செய்த பலனும் போர் முகத்தினின்றும் ஜயம்பெற்று வெற்றிமாலை சூடிவந்தவர்கள் பெறத்தக்க பலனு மடைவார்கள் வேள்வி முன்னிலையில் யானை முதலிய சகலபொருள்களையும் தட்சணையோடு தானங் கொடுத்தவர்கள் அடையும் பயன் இந்தச்சரித்திரத்தை யொருதரம் வாசிக்கின்றவர்கள் அடையும் பயனுக்குச் சரியாகாது, மேலும் இந்தச் சரித்திரத்தைத் தன்கரத்தாலெழுதினவனும் ஒருவனுக்குத் திரவியந் தந்தெழுதுவித்தவனும் கோடி கன்னிகாதானங்களையும் கோடி கோதானங்களையும் நல்லநியமத்தோடு செய்தவன் அடையும் பயன் யாதோ அதனைத் தடையின்றி யடைவான், இந்தச் சரித்திரத்தை எழுதி வைத்திருக்கின்ற வீட்டில் அஷ்டைஸ்வர்யமும் வந்து குடி கொள்ளும் அன்றியும் பூதங்கள் பேய்கள் பிரேதங்கள் பாலகிரகங்கள் நெருங்காவண்ணம் ஸ்ரீராமமூர்த்தியானவர் சதாகாலமுங் குடியிருந்து அவ்வீட்டிலுள்ளோர்கட்கெல்லாம் எத்துன்பமும் அணுகவொட்டாமற் பாதுகாத்து வருவார்.

இந்தச்சரித்திரத்தைப் பூசிக்கின்றவர்களையும் புத்தியிற் சிந்திக்கின்றவர்களையும் கண்டு தரிசித்தபேர்கள் தங்கள் குலாசாரவொழுக்கங்களில்தவறிய அசத்தர்களானாலும் உடனேசற்றபௌத்திராதி நற்கதியிற் சேருவாரென்றால் அதை நேரிற் பூசிப்பவர் முதலாயினோர் அடையும் பலனை எவ்வளவென்றுரைக்கப்படும், இந்தச் சரித்திரத்தை ஆதிதொடங்கி அந்தம் வரையில் அன்போடு படித்து அல்லது ஒருவர் படிக்கக்கேட்டுத் தானுதிகளைச் செய்தவர்கள் ஸ்ரீராமமூர்த்திக் கிருப்பிடமாகிய வைகுந்த பதத்தைப் பெறுவார்கள். இதைப் படித்தல் கேட்டல் பூசித்தல் தங்கள் கையாலெழுதல் ஒருவரை படிப்பித்தல் ஒருவரைக் கேட்பித்தல் முதலிய நற்கருமங்களைச் செய்தவர்கள் சகல புவனகர்த்தரவாகிய ஸ்ரீராமமூர்த்தியினுடைய அனுக்கிரகத்தினாலே தர்மார்த்தகாம மோட்சமென்கிற நான்கு புருஷார்த்தங்களையும் பெற்று நற்கதியடைவார்கள்.

M.SOOBARAYACHARY

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# சதகண்டராவணன்கதை.

---

## கதையாரம்பம்.

இந்தச்சதகண்டராவணனென்கிற இராட்சதனுடைய வசனரூபத்தைசிறியேனாகியயான் கதைசொல்லப்போகிறேனென்று நாரதமகாமுனிவர் கௌதம மகாரிஷிக்கிச் செந்தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கினார்.

கேளுமையாகௌதமமகாரிஷியே பூர்வகாலத்தில் ஸ்ரீராமமூர்த்தியானவர் இராவணசம்மாரஞ் செய்தபின்பு இலங்கைப்பட்டணத்தை விபீஷணருக்குப் பட்டந்தரிப்பித்துச் சீதாதேவியைச் சிறைமீட்டுக் கொண்டு இலட்சமணர் அனுமந்தன் சுக்ரீபன் நீலன் குமுதன் சாம்புவந்தன், அங்கதகுமாரன்முதலிய பதினெண்படைத்தலைவரும்எழுபத்திரண்டுவெள்ளம் வானர சேனைகளும் புறப்பட்டு அயோத்தியாபுரி பட்டணம்வந்து பட்டாபிஷேகராய்ச் சீதாசமேதராய் இராச்சியபரிபாலனம் செய்கிறகாலையில் சத்தசமுத்திரத்திற்கப்பால் சதகண்டனென்னும் இராவணன் ஒருநாள் கொலுச்சிம்மாதனத்தில் வீற்றிருக்கும்போது மந்திரி-பிரதானி-தண்டத்தலைவர்-யூதத்தலைவர்- அணித்தலைவர் - படைத்தலைவர் முதலிய சேனாசமுத்திரஞ் சூழ்ந்திருக்க நாட்டியப்பெண்களாகிய அரம்பை-மேனகை-ஊர்வசி - திலோர்த்தமை நடனமாடப்பட்டவர்கள்பாடக் கின்னரர்-கிம்புருடர்-வித்தியாதரர் கீதவிசைபாட இருபுறமும்பெண்கள் க்ஷாமரங்கள் கவரிவீசக்கட்டியக்காரர் எச்சரிக்கை செய்யத் தேவர்கள் மலர்மாரிபெய்யத் தம்பிமார் முதலிய அநேகர் வந்து கண்டுகொள்ளத் திருமூர்த்திகளுக்கும் எதிரில்லாமல் தானதிக சௌரிய பராக்கிரமனென்று மனதிலெண்ணிக்கொண்டு வெகு வேடிக்கையாய் மந்திரிபிரதானி சேனாதிபதியாயிருக்கப்பட்டவனடங்காமன் அவன் யாவருக்கும் நிகரில்லாதவன் ராட்சதக்கூட்டங்கள் அவனிருமருங்கிலுஞ் சூழ்ந்துகொண்டு நிறைந்த கொலுவிருக்கப்பட்டவன் அவன் நாமதேயம் விதுராவணனென்றும் பெயர் அவன் நூறுசிரமும் இருநூறுகரமும் படைத்தவனானபடியால் அவனுக்குச் சதகண்டனென்னும்பெயர் உண்டாயினது, மேலும் அவனுக்கு ஆயிரத்தெட்டுமாத்து அபரஞ்சி பொன்னினாலும்-பச்சை-வைடூரியம்-கோமேதகம்-புட்பராகம்-மரகதம்-மாணிக்கம்-

நீலம்-கொம்பு-வச்சிரம் இப்பேர்ப்பட்ட ஒன்பதுவகைநவரத்தினங்க
ளும் ஆணிமுத்தாலிழைத்திருக்கின்ற கிரீடங்கள் நூறுசிரசிலுந்தரித்
துக்கொண்டு இருநூறுகைகட்குஅஸ்தகடகங்களும்ஆயிரவிரலுக்கு
த்திருவாழிமோதிரங்களும் அணிந்து தோளில் கட்டுவடம்பதக்கம்-
ஒட்டியாணம் இவைகளணிந்து இருநூறு செவிக்குங் கோடிசூரியப்
பிரகாசம்போல் விளங்குகின்ற மகர குண்டல கேயூரங்களுந் தரித்
துக் காலில் தண்டை சதங்கை முதலியன அணிந்து கலீல்கலீலென
ச் சத்திக்கச் சகல ஆபரணங்களுந் தரித்திருக்கப்பட்டவன் சாட்
சாத் கடவுளாகிய பரமசிவம்-மகாவிஷ்ணு பிரமதேவன் தேவேந்திர
ன்-முப்பத்துமுக்கோடி தேவர்களிடத்திலும் வரப்பிரசாதத்தினாற்சூ
லம்-சக்கரம்-பிண்டி -பாலம்-ஈட்டி-எறியம்பு-கத்திகேடயம்-சிங்காணி
வில்லு கதைஇவ்வகைப்பட்ட பதினெண்ணாயுதங்களும் நாராயணாஸ்
திரமும்-நீலகண்டாஸ்திரமும்வச்சிராயுதம் அக்கினியாஸ்திரம்-பிர்மா
ஸ்திரம்-வருணாஸ்திரம் வாயுவாஸ்திரம் இவ்வண்ணஞ்சொல்லப்பட்
ட ஆயுதங்களும் அஸ்திரங்களும் வரப்பிரசாதத்தினால் வரம்பெற்றி
ருக்கப்பட்டவன் ஆகையால் அவனுடையசௌரியபராக்கிரமத்தைக்
கண்டு அதிகசந்தோஷம் அடைந்து தேவர்கள் யாவரும் அவனுக்கு
மூன்றுகோடி வருஷம் ஆயுள் வித்திக்கும்படி கட்டளையிட்டார்கள்
இதன்றி அவனுக்கு வேண்டிய மேளவாத்தியங்களும் பேரிகை-மத்
தளம்-எக்காளம்-ருத்திரவீணை-தவண்டை-பம்பை-முரசு-தமுக்கு த
ப்பட்டை-மல்லரி-சல்லரி முதலிய வாத்தியங்களுந் தாம்தாமென்று
முழங்கும்படியாய்ச் சகல ஆடம்பரத்துடனே நூறுயிரந் தேவிமா
ருடன் மன்மத போகபாக்கியங்களை மனமகிழும்படி அனுபவித்துக்
கொண்டிருக்கப்பட்டவன் - பிரமன் - விஷ்ணு - தேவர்கள் முத
லிய யாவரையுந் துதியாமல் மமதைகொண்டு ஈரேழு பதினாலு
லோகத்திற்குந் தானேயரசனாயிருக்கப்பட்டவன் அவனொருநாள்
கொலுச்சபாமண்டபத்தில் மந்திரிமார்கள்-சேனாதிபதிகள் சகலரும்
வந்துகொலுவிறைந்திருக்கிறசமயத்தில் சுகசாரணனென்கிறவன் ஸ்ரீ
ராமமூர்த்தி இராவணசம்மாரஞ்செய்து தம்பியாகிய விபீஷணருக்கு
ப் பட்டந்தரிப்பித்த சமாச்சாரமெல்லாமறிந்து லோகாலோகங்களை
யெல்லாஞ் சம்மாரஞ்செய்த விர்த்தாந்தமெல்லாம் சதகண்டராவண
னோடு சொல்லவேண்டுமென்றெண்ணி யோசனைபண்ணிப் பிரமாணப்
பட்டு வாயுவேகமனோவேகமாயோடிவந்து விதூராராவணனைக்கண்டு
ஆனந்தங்கொண்டு சாஷ்டாங்கமாகதெண்டனிட்டு அவனிருபாதத்தி
லுங் கைதொட்டுத்துணிந்து பணிந்து விழுந்தெழுந்து கைகட்டி
வாய்புதைத்து நடுநடுங்கிச் சொல்லுகிறான் கேளுமையா சதக
ண்டார்க்க பயிர்மதங் கொண்டிருக்குங்கால தேவர்கள் மெச்சுஞ்
சீலா யவர்கள்கத்தும்மூலா பூலோகத்திலே லங்கைதேசமென்றொரு
தேசமுண்டு அந்ததேசத்தை அரசாட்சி செய்கின்ற சூரியவம்சத்து

இராவணனுனவர் அயோத்திபாபுரி பட்டணத்தை அரசுசெலுத்தப் பட்டவர் அந்த தசரதமகாராசாவின் புத்திரர் ஸ்ரீ ராமமூர்த்தி அவர்தேவி சீதாபிராட்டியம்மன் அந்த அம்மனுந் தம்பியாகிய இலட்சுமணப்பெருமாளும் தாயாகிய கைகேசியம்மன் திருவாக்கின்படி பதினுன்கு வருஷம் காட்டில் வனவாசஞ் செய்துக்கொண்டிருந்தார்கள்.

அப்படியிருக்குங்காலையில், தென்சமுத்திரக்கரையில் இலங்காபுரியென்றொருபட்டணமுண்டு அப்பட்டணத்தையரசுசெலுத்தப்பட்டவன் நாமதேயம் சதகண்டராவணனென்றும் அவர்தம்பிகும்பகர்னன் அவர்புத்திரர் இந்திரசித்து அதிகாயனென்றுஞ் சொல்லுவார்கள் பின்னும் இராட்சதாள் இரண்டாயிரம் வெள்ளஞ் சேனையும் இரதகஜதுரங் பதாதிகளுடனும் திரிமூர்த்திகளுந் தனக்கெதிரில்லாமல் தேவலோக முதலிய அட்டதிக்குஞ் செயம்பண்ணிக்கொண்டு இலங்கை யெழுநூறு யோசனைதூரம் அகலநீளமுள்ள கோட்டையையமைத்துக்கொண்டு திருமூர்த்திவரப்பிரசாதனுயிருந்தான்.

அப்பேர்க்கொத்தஇராவணனுடைய தங்கையாகியசூர்ப்பநகையென்பவள் பஞ்சவடிதீரத்தில் பன்னகசாலை கட்டிக்கொண்டு இருக்கிற ஸ்ரீராமமூர்த்தி யருகில்வந்து தன்னைவிவாகமுடித்துக்கொள்ளும்படிக்குகேட்டாள் அப்படிக்கேட்டபடியால் அவர்தம்பியாகிய இளையபெருமாளுக்குக்கோபம்பெருகி வாளையுருவிச்சூர்ப்பனகையின் மூக்கையும் ஸ்தனத்தையும் அறுத்துவிட்டார்.

அறுபட்டுக்கொண்டு அவளண்ணனுகிய இராவணனிடம் வந்து அவன்பாதத்தில் விழுந்தெழுந்து அழுது பழுதில்லாமல் தொழுது அப்பொழுது சொல்லுகிருள் கேளும்அண்ணு என்னிருகண்ணுநான் சொல்லுவதண்ணு நீயாதொன்று மெண்ணு பூலோகத்திலிருக்குந் தசரத மகாராசன் புத்திரராகிய ஸ்ரீரகுநாயகரும் அவர்தம்பியாகிய இலட்சுமணப்பெருமாளும் சீதாதேவியம்மனும் வனத்தில் வந்திருக்கிருர்கள் நான் அவ்விடம் போயிருந்தேன் அந்தச்சீதாபிராட்டியின் சௌந்தரியமும் அவள் அவயவவடிவும் ஆயிரம்பணுமுடியையுடைய ஆதிசேடனுலும் வர்ணித்துச்சொல்லமுடியாது.

ஆகையால் அவளை யெடுத்துக்கொண்டுவந்தால் உமக்கு நல்லதென்று யோசித்தெடுக்கப்போனேன் அதைக்கண்ட இராமமூர்த்தியும் அவர்தம்பி இலட்சுமணருமறிந்தென்னுடைய மூக்கையும் ஸ்தனத்தையுமறுத்தெறிந்து விட்டாரென்று இராவணன் தங்கையாகிய சூர்ப்பனகையானவள் சொல்ல அவ்வார்த்தையை ராவணன்கேட்டு

உள்ளமுருகிக் கோபம் பெருகி வேர்த்துமமதைகொண்டு பார்த்துத்
தங்கையைப்பார்த்து இருகையாற் சேர்த்து அணைத்து இணைத்து
வசிந்து நசிந்து சபதங்கூறி அவன்புத்திமாறி இராமரைத்தூறிமனந்
தேறி மாறவேடமெடுத்து ஆடைகள் தொடுத்து ஆயுதம் விடுத்து
சீதையிடம்வந்து இராமமூர்த்தியும் இளையபெருமாளுமில்லாத சமை
யமறிந்து சீதாதேவியம்மனைத் தீண்டாவக்கினிப்போலப்பூமியைக்கீறி
அம்மனையெடுத்து இரதத்தின்மேல்விடுத்து பத்துமாதஞ் சிறைவைத்
தான்.

பின்பு இளையபெருமாள் - அனுமந்தன்-சுக்ரீபன்-அங்கதன் -நீ
லன்-குமுதன் - சாம்புவந்தன்முதலான பதினெட்டுப் படைத்தலைவ
ரையும் எழுபத்திரண்டுவெள்ளஞ்சேனைகளையும் அழைத்துக்கொண்
டு தெற்குசமுத்திரத்தில் போகவழியில்லாம லிருக்கிற தளங்கட்டித்
திருமணையின்பேரிற் நடந்து இலங்கை யருகிற் சென்று தண்டுகள்
விட்டிறங்கினார்கள் பத்துநா ளிரவும்பகலும் யுத்தஞ்செய்தபிறகு
இராவணன் - கும்பகர்னன் - இந்திரசித்து - அதிகாயன் முதலான
இரண்டாயிரத்தறுநூறுவெள்ளம் ராட்சதக்கூட்டங்களையும் சம்மா
ரஞ்செய்து இராவணன் தம்பி விபீஷணன் இராமமூர்த்திபாதாரவி
ந்த கமலங்களில் சாஷ்டாங்க தண்டன்சமர்ப்பித்துச் சரணாகதியெ
ன்று வந்தடைந்தபடியால் அவர்மனமிறங்கியந்தவிபீஷணனுக்குலங்
கைப்பட்டணத்தைப் பட்டந்தரிப்பித்து அரசாட்சி செலுத்தும்படி
யவனை யந்நகரத்திலிருக்கும்படி செலவுகொடுத்துப் பின்புதானுஞ்சீ
தாபிராட்டியும் - இலட்சுமணர்- அனுமான்-சுக்ரீபன்-அங்கதன்-நீலன்-
குமுதன்-சாம்புவந்தன்என்றுசொல்லப்பட்டபதினெண்படைத்தலை
வரும் எழுபத்திரண்டு வெள்ளம் வானரசேனைகளும் புட்பகவிமான
த்தின்பேரிலேரிக்கொண்டு அயோத்தியாபுரி பட்டணத்துக்குப் போ
ய்ப்பட்டாபிஷேகராய் இராச்சிய பரிபாலனஞ்செய்துக்கொண்டுதனக்
குயாரும் நிகரில்லையென்று சொலலத்தக்கதாய் திக்குவிசயஞ்செய்து
க்கொண்டு சகல தேசத்தரசர்களுக்குந் தானேதலைமைபெற்ற இராச
னாய் அரசாட்சி செய்கிறாரென்று இந்தவர்த்தமானமெல்லாங் கேள்
வியுற்ற சதகண்டராவணனென்போன் தனக்கு ஆப்தனாயிருக்கப்ப
ட்ட மந்திரியையழைத்து ஒருகோடி இராட்சதக்கூட்டங்களைத் தன்
னுடைய கொலுச்சபைக்கழைப்பித்துக் கோபம்பிறக்கப்பிரளய கால
ருத்திரனைப்போலக் கண்களில் நெருப்புப்பொரி பறக்க மீசைகள் து
டிக்கப் பற்களை நெறநெறவென்றுகடித்து மந்திரிமார்களைப் பார்த்து
ச் சொல்லுகின்றான்.

வாருங்கள் மந்திரிமார்களே பூலோகத்தில் தசரதமகாராசனொ
ருவனுண்டு அவன் குமாரர்கள் இராமலட்சுமணர் அவர்கள் ஒரு கு
ரங்கையழைத்துக் கொண்டுபோய் இலங்கைப் பட்டணத்தில் நம்மு
டையவம்சத்தரான இராவணன்-கும்பகர்னன்-இந்திரசித்து-அதிகா
யன் முதலான இராட்சதர்களைச்சம்மாரஞ்செய்து பின்னுமூலபலமு
தலிய அரக்கர்களையும்கொன்றுபோட்டு அந்தஇராவணன் தம்பியாகி
ய விபீஷணனுக்கு இலங்காபுரியை பட்டங்கரிப்பித்து அயோத்தியா
புரிவந்து ஈரேழுபதினாலு லோகத்திற்கும் அரசனாய்த்தங்கி யாவரும்
நிகரில்லையென்று சொல்லத்தக்கதாய்த்திக்குவிஜயஞ்செய்துகொண்டு
செயராமனென்னும் நாமதேயந்தரித்துக்கொண்டு தம்பிமாருந்தானு
மாயிருக்கிறானும் இதன்றிப் பூர்வகாலத்தில் நம்முடைய வம்சத்தில்
ஒருசம்பனென்னும் பெயருடைய இராட்சதன் அவன்மகாபராக்கிர
மசாலி தேவேந்திரன், பிரமன், உருத்திரன்முதலிய தேவர்களையுஞ்
செயித்தவன், அப்போர்க்கொத்தமகாவல்லமைசாலியைத் தசரதமகா
ராசன் சம்மாரஞ்செய்துவிட்டான் அப்படி வல்லமை பொருந்திய த
சரதமகாராசன் இலட்சுமணரைப் பிடித்துக்கொண்டுவந்து சிறைபி
லடைக்கவேண்டுமென்றுகூற அதற்கு மந்திரிமார்கள் வாருமையா சுவா
மி இது எம்மாத்திரம்காரியம் இதற்கு ஆலோசிக்கவேண்டியதென்ன
நம்முடைய வேவுகாரரையனுப்பி நாளையதினம் சூரியவுதயத்திற்குள்
இராவணனானவனுங்கள் அயோத்தியாபுரி பட்டணத்தில்வந்து போர்
புரியப்போகிறானென்று ஸ்ரீராமமூர்த்தியுடன்சொல்லிவரும்படி ஆக்
கியாபியும் நாமுமப்படியே தண்டுதளங்களைச் சேகரஞ்செய்து கொ
ண்டு யுத்தத்திற்குப்போவோமென்று மந்திரிகள்சொல்ல அப்படியே
சதகண்டனும் சம்மதித்து மனோவேகியென்றும் வாயுவேகியெ
ன்றும்பெயருடைய இராட்சதரை யழைப்பித்து அவர்களுடன்சொ
ல்லுகிறான்.

வாருங்கள் வேவுகர்களே நீங்களிருவரும் அதிசீக்கிரமாக அ
யோத்தியாபுரி பட்டணத்துக்குப்போய் அப்பட்டணத்தை யரசுசெ
லுத்துகிற இராமனைக்கண்டு நீங்களிருவருடன் சொல்லுகின்றவிபரம்
யாதென்றால் நாளையதினம் சூரியவுதயத்துக்கு இராவணனானவனுங்
கள் பேரிலே யுத்தத்திற்கு வரவேண்டுமென்றிருக்கிறார் ஆகையால் எ
ங்களை யுங்களுக்கறிக்கை செய்துவரச் சொன்னான் அக்கணமே யிவ்
விருவரும் புறப்பட்டு அயோத்தியாபுரிககு வந்தார்கள்.

அப்போது இராமமூர்த்தியானவர் ஸ்நானஞ்செய்து நேமநி
ட்டைகள் விதிப்படி முடித்துச் சாட்சாத் கடவுளை ஸ்தோத்திர

ஞ்செய்துகொண்டிருந்தார் அச்சமயத்தில் வேவுகாரர்களிருவரும்வந்
தௌதிர்நின்று சொல்லுகிறார்கள் அடாஇராமாநீயிப்படிசெய்யலாமா
நீதானா இராவணன் கும்பகர்னன் இந்திரசித்து இவர்களைக்கொன்று
விபீஷணனுக்குப் பட்டந்தரிப்பித்து இராச்சியபரிபாலனஞ்செய்வத
ற்கு ஆக்கியாபித்த புண்ணியவான் நீதானா! நல்லதாகட்டும், எங்களா
ண்டவனான சதகண்டராவண னென்பவர் உங்கள்பேரில் கோபங்
கொண்டு யுத்தத்திற்குவரவேண்டுமென்று பிரயாணப்பட்டிருக்கிறார்,
நாளையதினம் சூரியோதயத்திற்கு உன்பட்டணத்திற்குத் தண்டெள
த்தோடுவந்து இறங்குவதாகையால் நீயுத்தத்திற்கு ஆயுத்தப்பட்டுஎ
ச்சரிக்கையா யிருக்கவேண்டுமென்று எங்களாண்டவனான சதகண்ட
ன் உனக்கு அறிக்கையிட்டு வரச்சொல்லி எங்களுக்கு ஆக்கியாபித்
தார், ஆனபடியால் நாங்கள் முன்னதாகவந்து சொன்னோமென்று
வேவுகாரர்கூறஇந்தவர்த்தமானமெல்லாம் ஸ்ரீராமமூர்த்திகேள்விப்ப
ட்டுத்தனக்கு யோசனையொன்றுந் தோன்றாமல் மயங்கித் தியங்கித்து
க்க சாகரத்தி லழுந்தி அந்தப்புரம் சென்று நின்று தன்னாயகியாகிய
சீதாதேவியைப்பார்த்துச் சொல்லுகிறார்.

அடிபெண்ணே யென்னிருகண்ணே முன்னே யிராவணனெடுத்
துக்கொண்டுபோய் இலங்கைப்பட்டணத்தில்சிறைவைத்திருந்தானே
அவனைசெயிப்பதற்கு இராவணன் தம்பிவிபீஷணனுதவியினால் உன்
னையுஞ்சிறைமீட்டுக்கொண்டுவந்தோம் அப்படியிருக்கஇப்போதுசத்
தசமுத்திரத்திற்கப்பால் சதகண்டராவணனென்னுமிராட்சதன் மகா
பலவான் இராவணன் பலத்திலும் நூறுமடங்கதிகமுள்ளவனானபடி
யாலவனைசெயிக்கிறதற்கு ஒருவராலுங்கூடாது அவன்வரப்பிரசாதம்
பெற்றவன் நூறுசிரசம் இருநூறு கரமுமுடையவன் பன்னீராயிர
வெள்ளம் ரதகஜதுரகபதாதிகளையு முடையவன் திரிமூர்த்திகளையும்
ஜெயித்தவனைச் செயிப்பது அதிகப்பிரயாசையாயிருக்குமென்று இ
ராமமூர்த்தியானவர் மனக்கிலேசமாய்ச்சொல்ல அப்போது சீதாதே
வியம்மன் இவ்வார்த்தையைக்கேட்டு சுவாமிஇந்தஅற்பகாரியத்திற்கு
த் தாங்களிவ்வளவு துயரத்தைப் படவேண்டிய காரணமென்னயான்
தேவரீருக்கிதமேபேசவல்லேன் அதையே கனமாகக் கொள்ளல்வேண்டு
ம், தேவரீர் வலிமையிற்சிறந்தவர் இந்திரன்முதலிய தேவர்களையெல்
லாஞ் செயித்தவர் தீரத்திற்சிறந்த சேனைகளை யளவற்றதாக வுடைய
வர் எத்திக்கிலுஞ்சத்துருக்களில்லாதவர் சிவபிரானாற்சாகாவரம்பெற்
றவர், இப்படியெல்லாவிதத்திலும்பராக்கிரமத்தையுடையதேவரீரை
பழிக்கவல்லோர்கள் திரிலோகங்களினுமிரார்கள் தேவரீருக்கு முடிவு

நேறுமென்றெக்காலத்தும் நினைக்கவேண்டாம் தேவரீர்கொண்டிருக்
கிறசிந்தாகுலத்தைவிடுத்து இனிசதகண்டராவணனைக்கொல்வதற்கா
னஉபாயம்யாதோ அதனைவிரைவிற்றேடவேண்டும்ஆகையாலப்படியு
யரப்படவேண்டியதில்லை நான் சதகண்டனென்னு மிராட்சதனையும்
அவனது சேனசமுத்திரத்தையும் அவன் தம்பிமார்பிள்ளைகள் மந்தி
ரி பிரதானிகள் முதலிய சகலரையும்உம்முடைய கிருபாகடாட்சத்தி
னல் சங்கரிக்கிறேன் தோல்வியடையாமல் வெற்றிபெறும்படியான
வரத்தைக் கொடுக்கவேண்டுமென்று சீதாதேவியம்மன் ஸ்ரீராமமூர்த்
தியின் பாதாரவிந்தங்களில்விழுந்துசிரமேற்கரங்குவித்து அதிகவண
க்கத்துடன் சாஷ்டாங்கமாக தெண்டஞ்சமர்ப்பித்துவரங்கேட்கஅப்
போது ஸ்ரீராமமூர்த்தி சீதாதேவியைப் பார்த்து அதிக சந்தோஷத்
துடன் துக்கசாகரத்தைவிட்டு புன்னகைகொண்டு சொல்லுகிறார்.

கேளும் பெண்ணே சீதா நீஸ்திரீயானபடியால் இராட்சதாளு
டைய மாய்கை உனக்குத் தெரியவராது இதன்றி முன்னே இராவ
ணனுன்னை எடுத்துக்கொண்டுபோய் இலங்கைப்பட்டணத்தில்பத்து
மாதஞ் சிறைவைத்திருந்தானப்போதவனை யென்னசெய்தாகையாற்
பேதமையென்பது போலறியாமையை இந்தச்சதகண்டனென்னுமா
க்கனை நீயெவ்வாறு கொல்லுவாய் வெல்லுவாயென்று ஸ்ரீரகுநாயகர்
சொல்ல அப்போது சீதாதேவியம்மன் ஸ்ரீராமரைப்பார்த்துச்சொல்
லுகிறாள்வாரும் என்னுடைசக்கணவா அருமைத்துணைவா சுவாமிஅந்
த இராவணனை யெடுத்துக்கொண்டுபோய் அசோகவனத்திற் பத்து
மாதம் சிறைவைத்திருக்கும்போது அந்தராவணனுக்கு நடுங்கியொடு
ங்கி யிருக்கவில்லை தேவரீருடைய ஆக்கினைசக்கரததிற்குப் பயந்திருக்
கிறேனென்று ஞானதிருஷ்டிக்கு இராவணனென்னு மரக்கனெம்மா
த்திரம் தேவரீரடியாளுக்கு இட்சணஞ்செலவுகொடுத்தால் அந்தசத
கண்டனென்னு மரக்கனைக் கொன்று வென்றுபோடுவேனென்று சீ
தாதேவியம்மன் சொல்ல அப்போது இராமமூர்த்தியானவர் ஞான
திருஷ்டியாலறிந்து சீதையானவள் இராவணனென்னு மரக்கனைச்
செயித்து வருவாள் சேதிவந்து சொல்லுவாளென்று எண்ணி மன
திற் றீராலோசனை பண்ணித் தூதர்களிருவரை யழைத்துச் சொல்
லுகிறார் உங்களாண்டவனுன சதகண்டனென்னு மிராவணனை நாளை
யதினம் எங்கள்பேரில் யுத்தம் புரிதற்கு வருகிறனென்று யெங்களை
யெச்சரிக்கையா யிருக்கச்சொல்லென்றும் வேவுகாரரைக் கொண்டு
தெரிவித்தானல்லவா ஆகையால் எனக்குமகாசந்தோஷமாயினது அ
ந்தச்சதகண்டனென்னுமரக்க னிவ்வளவுதூரம் வரவேண்டியகாரண

மென்ன அப்படிவேண்டுவதில்லை அவனுடன்யுத்தம் புரிவதற்கு நாங்களேவருகிறோமுங்களாண்டவனுடனே யிந்தவிசேஷமெல்லாஞ்சொல்லியெச்சரிக்கையாயிருக்கும்படி அதிக விரைவிற்போ யாக்கியாயியுங்களென்று உத்தரங்கூறிவந்த தூதர்களுக்கு உடுகரைமோகனமாலைகண்டசர மின்னமனேக ஆடையபரணமுங்கொடுத்து மனமகிழும்படி திரவியமும் கொடுத்துத் தங்களிருப்பிடம் போகும்படி யுத்தரங்கூறியனுப்பினர் அட்சணமே வேவுகாரர் புறப்பட்டு வாய்வேகமனோவேகமாய்ச் சதகண்டன் கொலுவிருக்கிறசமயத்தி லவனைக்கண்டுசாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து நடந்தவர்த்தமானமெல்லாஞ்சொல்லி யெச்சரிக்கையாயிருக்கும்படி சொன்னார்களென்று கூறினார்களதைச் சதகண்டன்கேட்டு அதிகசந்தோஷமாயினதென்று சொல்லிக்கொண்டிருக்குந்தருணத்தில் சீதாதேவியம்மன் வாயுபகவான்புத்திரனை அனுமந்தனை யழைத்துச் சொல்லுகிறாள் வாரும் அனுமந்தசேயாஅமரர்க்குநேயா நான் இராமமூர்த்தியுடனொரு வாக்குதத்தஞ்செய்து கொண்டே னதுயாதென்றால்சதகண்டனென்னும் இராவணனையுமரக்கர்களையும் சேனைசமுத்திரத்தையும் நான்சங்கரிக்கிறேனென்று பிரதிக்கினைசெய்துகொண்டேன் நம்முடைய பிரதிக்கினை முடிவதற்கு உம்மாலேயாகவேண்டியிருக்கின்றது அதுயாதெனில் ராமமூர்த்தி, இலட்சுமணர், பரதர் சத்துருக்கர், மந்திரி பிரதானி சேனாபதிகளும்ரதகசதுரகபதாதிகளும், ருசு தேசத்தரசரு மவரவர்யானைசேனைபரிவாரங்களும் ஜனகமகாராஜாவும் மவருடையசேனைகளுந் திரண்டுவரும்படி வேவுகாரரையனுப்பிக்கவேண்டும் இதன் றிப்பேரிகை முதலிய பதினெட்டுமேளவாத்தியங்களும் சகலவிருதுகளுடனும இரதத்தின்பேரிலெழுந்தருளச்செய்து அந்தரதத்தை நீரேடுத்துக்கொண்டுவாருஞ்சமுத்திரமுதலியன்தாண்டி யதற்கப்புறம் திருப்பாற்கடலுக்கு அக்கரையிற் சதகண்டன் வாசலுக்கு நேராகக்கொண்டுபோய்விடவேண்டுமென்று சொன்னாள் அப்போது அனுமந்தர் சொல்லுகிறார்வாருமம்மாதாயே ஸ்ரீமகாலட்சுமியாகிய பதிவிரதா சிரோணியே யுனக்கந்த சதகண்டனென்னு மிராட்சதனெம்மாத்திர மவனுன்னை வெல்லவல்லவனு யாவருக்குநல்லவனு நல்லதாகட்டும் நான்தாங்களாக்கியாபித்தபடியே நடந்து கொள்ளுகிறேனென்று சாஷ்டாங்கதெண்டனிட்டு அம்மனதுபாதத்தில்மலர்சொரிந்துமனம்பூரித்துவிழுந்துஎழுந்துதுதித்துமதித்து அம்மன்கையிற் செலவுபெற்றுக்கொண்டுஆசாரவாசலுட்புகுந்து வேவுகாரரையழைத்துச் சொல்லுகிறார்.

வாருங்கள் வேவுகாரர்களே சதகண்டன்பேரில் நம்முடைய தாயாராகிய சீதாதேவியம்மன் அவனைச் சம்மாரஞ் செய்யப்போகி

னாள் அச்செய்தி ஜனகமகாராஜன் முதலான ஐம்பத்தாறுதேசத்தர
சர்களும் அவரவர் சேனாசமுத்திரங்களும் அழைத்துக்கொண்டு
வரத்தக்கதாக வேவுகாரரையனுப்பினார் அப்படியே காவலர்கள்சகல
இராஜர்களுக்கும் அறிக்கையிட்டார்கள் வாயுபுத்திரனான அனுமான்
அயோத்தியாபுரி பட்டணத்திலிருக்கிற மந்திரி பிரதானி சேனாபதிஇ
ரதகசதுரகபதாதியும் பிரயாணமாகி வரத்தக்கதாகஜெயபேரிகள் யா
னைபின்பேரி லேற்றியடித்தார்கள் பின்பு நாளையதினஞ் சூரியவுதயத்
துக்குள் கிழக்கு சமுத்திரக்கரையில்வந்து இறங்கவேண்டுமென்றுஅ
னுமார் பேரிகை முழக்கினார் அந்தப்படியேஸ்ரீரகுநாயகருஞ் சீதாபி
ராட்டியும் இலட்சுமணரும் பரதர் சத்துருக்கர் சுக்ரீபன்முதலிய மந்
திரிமார்களு மவரவர் இரதத்திலேறிக்கொண்டு இரதகசதுரகபதாதிக
ளும் பிரயாணப்பட்டுச் சகலமேளவாத்தியங்களுந் தாம் தாமென்
று முழங்கத்தக்கதாகப் பலவிருதுகளும் பிடித்துக்கொண்டு கிழக்
குச்சமுத்திரக்கரை யருகில்வந்து இறங்கினார்கள் அப்போது ஐம்பத்
தாறு தேசத்தரசர்களும் அவரவர் சேனைகளுங் கிழக்குச்சமுத்திரக்
கரையருகில் வந்து சேர்ந்தார்கள்.

அப்போது ஸ்ரீரகுநாயகர் அனுமாரைப்பார்த்துச் சொல்லுகின்
றார் வாரும் அனுமந்தபாலா அரக்கர்காலா நாமும்நம்முடையசேனை
களும் லவணம்தேன்கடல் தயிர்கடல்கிருதகடல் சுத்தசலக்கடல்இவ்
வாறு சமுத்திரமுங்கடந்து அப்பால் திருப்பாற்கடற்கரையில் இறங்
கவேண்டும் ஆகையா லிக்கணம் லங்காபுரிக்குப்போய் விபீஷணருட
னேயிந்த விசேஷமெல்லாந் தெரிவித்துப் புட்பகவிமானத்தைக்கொ
ண்டுவரவேண்டுமென்றுஸ்ரீரகுநாயகராக்கியாபிக்க அப்படியே க்ஷண
நேரத்திற் கொண்டுவருகிறேனென செலவுபெற்றுக்கொண்டனுமார்
விஸ்வரூபங்கொண்டு இலங்கைக்கு ஓரேபாய்ச்சலாய்ப்பாய்ந்து அந்ந
கரிலுள்ள கோட்டை வாயலிற்புகுந்து இரத்தினசிம்மாதனத்தின்பே
ரில் மந்திரி பிரதானி, தண்டத்தலைவர், யூகத்தலைவர் முதலியவர்கள்
சூழ இருபுறமும் வெண்சாமரம் கவரிவீசும்படியாய் வெகு ஆடம்ப
ரத்துடன் நிறைந்த கொலுவில் வீற்றிருக்கின்ற விபீஷணர்சபாமண்
டபத்தினருகிற்போகும்போது அனுமந்தர் வருவதைவிபீஷணர்கண்ட
வுடனே ஸ்ரீரகுநாயகரைக்கண்டால் எவ்வளவு அபேட்சை யிருக்கு
மோ அவ்வண்ணம் அனுமாரைக்கண்டவுடன் தான்இரத்தினசிம்மா
தனத்தை விட்டுத் திடுக்கென்றெழுந்திருந்து கும்பிடப்போன தெய்
வங் குறுக்கேவந்தாற்போலே எதிர்கொண்டோடிவந்து அனுமாரைக்

கட்டித்தழுவி முத்தமிட்டுஆலிங்கனஞ்செய்துகொண்டு சோடசவுப சாரமுஞ் செய்து விபீஷணர் அனுமந்தரைப்பார்த்து சொல்லுகிறார்

வாரும் அனுமாரே யாதுகாரியமாய் வந்தீரென்றுவினவ அதற்கு அனுமார் சொல்லுகிறார் ஸ்ரீரகுநாயகர் தேவியாகிய சீதாபிராட்டியம்மன் சதகண்டராவணனைச் சம்மாரஞ் செய்கிறேனென்று இராமமூர்த்தியுடன் பிரதிக்கினைபண்ணினாள் ஆகையால் சுவாமியானவர் உமதிடம் போயிருந்த விசேடமெல்லாமுமக்குத்தெரிவித்துப்புட்பகவிமானத்தை யெடுத்துக்கொண்டு வரச்சொன்னாரென்று விபீஷணர் விரைவிலெழுந்திருந்துவிமானத்தைக்கொண்டுவந்து சாஷ்டாங்கதண்டம்பண்ணினார் அப்போதுரகுநாயகர்தேவியாகியசீதாபிராட்டியம்மனுக்கும் இளையபெருமாளுக்குந் தீர்க்கதண்டமும் வேணவுபசாரமுஞ் சொல்லுமென்று அனுமந்தரை யனுப்பினார் அப்போது என்னாண்டவராகிய அனுமாரும் விமானத்துக்குப்பிரதட்சணநமஸ்காரஞ்செய்து அந்த விமானத்தைக் கையிலேந்திக்கொண்டு வாயுவேகமனோவேகத்துடன் பாய்ந்து இரகுநாயகர் அருகிலந்த விமானத்தைக் கொண்டுவந்து வைத்துச் சாஷ்டாங்கமாகத்தண்டஞ்சமர்ப்பித்தார் அப்போது இரகுநாயகர் அனுமாரைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

வாரும் அனுமந்தபுத்திரா அரக்கர்கள் சத்துருவே உன்னுடைய சவுரியத்திற்கு நானென்னசொல்வேனென்று ஆசீர்வாதஞ்செய்து பின்பு அந்தப்புட்பகவிமானத்தின்பேரில் இரகுநாயகருஞ்சீதாபிராட்டியும் இலட்சுமணப்பெருமாளும்பரதர்சத்துருக்கருஞ்சுமித்திரர்முதலியமந்திரிகளும் ஒருபுறஞ்சேனைத்தளமும் ஒருபுறம்ஐம்பத்தாறுதேசத்தரசர்களும் ஒருபுறமவரவர் சேனாசமுத்திரமும் இவ்வண்ணமந்த விமானத்தின்பேரிலேறிக்கொண்டார்அப்போதுசீதாபிராட்டி அனுமந்தரையழைத்துச்சொல்லுகிறாள் இந்தஇரதத்தையெடுத்துக்கொண்டு ஆகாயமார்க்கத்திலெழும்பி ஆறுசமுத்திரங்கடந்து அதற்கப்பால் திருப்பாற்கடற்கரையில் சதகண்டனுடைய கோட்டைவாயிலருகிற்போய் யிறங்கவேண்டுமென்று வரங்கொடுத்தாள் அப்படியேயனுமார் சுவாமிக்கும் அம்மனுக்கும் நமஸ்காரந் தண்டம்பண்ணி விஸ்வரூபங்கொண்டு அண்டபகிரண்டமளவாய் வளர்ந்தெழுந்து புட்பகவிமானத்தைக் கையிலேந்திக்கொண்டு போகும்போது சூரியகிரணங்கள்திக்குமாற தேவர்கள்பயந்தோட தெய்வலோகம் வலசைவாங்கிப்போக இப்படி நடுங்கத்தக்கதாய்ப்போவதை வடகைலாயத்திலிருக்கின்ற உருத்திரமூர்த்தியாகிய பரமசிவத்தினுடையாகிய பார்வதிகணடசனைப்பார்த்துச் சொல்லுகிறாள்.

வாருமையா சகலபுவன சராசரங்களுக்குங் கர்த்தாவாகிய பரமசிவமே ஆகாயமார்க்கத்தில் ஒரு இரதமானது வாயுவேக மனோவேகமாய் மகாவினோதமாய் அலங்காரமாகப்போகின்ற ஆச்சரியத்தை ஆயிரம்பணாமுடியையுடைய ஆதிசேடனது ஆயிரநாவாலுஞ் சொல்லமுடியாது ஆகையால் ஒருநாவையுடையயான் என்னவென்றுசொல்லப்போகிறேனென்று பார்வதிதேவிசொல்ல அப்போது நீலகண்டராச பரமசிவன்களிகூர்ந்து சொல்லுகிறார் வாரும்பெண்ணே பருவதராசன் குமாரத்தியாகிய பார்வதியே சதகண்டனென்னு மிராக்கதன் ஒருவனிருக்கிறான் அவன் மகாபலவான் திரிமூர்த்திகளையும் செயித்து அதம்படுத்தினவன் அப்படிப்பட்ட துர்மார்க்கனைத் தேவராலும் யாவராலும் செயிக்கமுடியாது அவனைசம்மாரஞ்செய்கிறதற்கு இராமமூர்த்தியினுடைய தேவியாகிய சீதாபிராட்டியம்மன் இரதத்தின் பேரில் போகிறாளென்றுசொன்னார். அந்தவிசேஷமெல்லாம் பார்வதி கேட்டுச்சொல்லுகிறாள் வாருமையா சுவாமி அப்படிப்பட்ட பலம்படைத்த சத்கண்டனைச் சீதாபிராட்டியெவ்வாறு சங்கரிப்பாளென்று கேட்க அப்போதுபரமசிவனானவர் சொல்லுகிறார் வாரும்பெண்ணே பருவதராசன் புத்திரியே அந்தச்சீதாபிராட்டி அரக்கர்களை யெல்லாம்அதஞ்செய்யும்படி யிந்தப்பூமியில்வந்து செனித்திருக்கிறாள் ஆகையாலந்த அரக்கர்களை இரகுநாயகர் தேவியாகிய சீதாபிராட்டி செயிப்பாளென்று சுவாமியானவர்சொல்ல அப்போது பார்வதிதேவிசொல்லுவான்.

வாருமையாசுவாமி சீதாபிராட்டி சதகண்டனைச்சம்மாரஞ்செய்கிறவேடிக்கையைப் பார்க்கவேண்டுமென்று சொல்லுகிறாள் அப்படியேயுன்சொற்படியே நாளையதினம்போவோமென்றுயாக்கியாபித்தார் இந்தவிசேடமெல்லாம் பிரமதேவன்தேவேந்திரன்முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிர மிருஷிகளுங்கேட்டு அவரவர்கள் பிரயாணப்பட்டார்கள் இப்படியிருக்க அனுமாரானவர் அந்தபுட்பகவிமானத்தை யெடுத்துக்கொண்டு ஆகாயமார்க்கத்திற்குப் போகும்போது ஆறுதீவு ஆறுசமுத்திரங்களுந்தாண்டி அதற்கப்புறம் முப்பதினாயிரங்கோடி யோசனை தூரமிருக்கப்பட்ட சகலதீவுகளுங் கடந்துராசான்யபக்கமாகிய திருப்பாற்கடற்கரையில் கோட்டை கட்டிக்கொண்டு அரசாட்சி செய்கின்ற சதகண்டன் கோட்டை வாசலுக்கு முன்பாக இரதத்தைக்குலுக்கி யிறக்கிவைத்து அனுமாரானவர் இராமமூர்த்திக்கும் சீதாபிராட்டிக்கும் இடம்புரி வலம்புரியாகவந்து சாஷ்டாங்கமாகச் சிறமேற்கரங்குவித்துப் பாதத்தில்விழுந்து எழுந்து நமஸ்கரித்து துதித்து மதித்துஅஞ்சலியஸ்தம்பண்ணிக் கைகட்டி வாய் புதைத்துக்கொண்டெதிரில் நின்றார்.

அப்போது சீதாபிராட்டிப்பார்த்துச் சொல்லுகிறாள் வாராயனுமாரே என்கவலைதீபாராய் உன்னுடைய சகாயத்திற்கும் சௌரிய பராக்கிரமத்திற்கும் நானென்னசொல்லப்போகிறேன் நீர்செய்தஉபகாரத்திற்கு நான்பிரதியுபகாரஞ் செய்யவேண்டியது யாதிருக்கிறதென்று ஆசீர்வாதஞ்செய்து அதிகசந்தோஷத்துடனே இரகுநாயகரும் சீதாபிராட்டியும் இனியபெருமானும் பரதர்சத்துருக்கர் முதலாகியஐம்பத்தாறுமன்னர்களும்புடைசூழ்ந்துவரசதகண்டனுடைய கோபுரவாயிலுக்கு முன்பாக இரதத்தைக்குலுங்கி இறக்கிப்பின்பு அக்கோட்டைகொத்தளமுதலிய வேடிக்கையான அதிசயங்களையும்பார்த்து அதிகசந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தார்கள் சீதாபிராட்டியம்மன் ஸ்ரீரகுநாயகரைப்பார்த்துச் சொல்லுகிறாள் வாருமையாசுவாமி இந்தசதகண்டனென்னு மரக்கனை சம்மாரஞ்செய்வதாய்த் தங்களிடம் சபதம்கூறியிருந்தேன் அச்சபதம் இடையூறுவராமல் அடியாள்பேரில் கிருபைகண்பாலித்து மூன்றுவரங் கொடுத்தருளவேண்டும் அதுயாதென்றால் தேவரீருடைய கோதண்டமும் அம்புறாப்பொதியும் பாணாஸ்திரங்கள் முதலானவைகளைக்கொடுத்து ஆசீர்வாதஞ்செய்தனுப்பவேண்டும் இதன்றித்தேவரீர் தாங்கிய இந்தசாரதியா யிருக்கவேண்டும் அச்சதகண்டனென்னும் மரக்கனைகண்டித்துச் செயம்பெறவேண்டும் ஆகையால் தாங்கள் என்பேரிற் கிருபைபுரிந்து அனுக்கிரகஞ் செய்யவேண்டும் சுவாமியென்று சீதாபிராட்டியம்மனவள் கேட்கஸ்ரீரகுநாயகர் அதிகசந்தோஷப்பட்டு கிருபை பிரந்து கற்பு நிலைமைவழுரது நடக்கும் என்னன்புள்ள சீதா உன்திருவாக்குக் கெதிராவாக்குண்டோஇரண்டோசொல் இந்தமூன்றுவரமுங் கொடுத்துவிட்டேனென்று மனது சந்தோஷமாய்க் கோதண்டத்தைக் கையிற்பிடித்துக்கொண்டு கோதண்டபாணியா யிருக்கப்பட்ட ராமகோதண்டம் இராமபாணம் அக்கினியாஸ்திரம் வாயுவாஸ்திரம் பிரம்மாஸ்திரம் பாசுபதாஸ்திரம் நீலகண்டாஸ்திர முதலிய சகலாஸ்திரங்களையும் பரிபூர்ணகடாட்சம் பொருந்த ஆசீர்வதித்து அபிமந்திரோபதேசஞ் செய்து சீதாபிராட்டி கையிற்கொடுத்து தானும்இந்தசாரதியாயிருந்தார் இலட்சுமணர் பரதர் சத்துருக்கர் முதலிய ஐம்பத்தாறு தேசத்தரசர்களையும் பார்த்துச் சீதாபிராட்டியம்மன் சொல்லுகிறாள்.

வாருங்கள் சூரியகுலத்தரசர்களே நீங்கள் எனக்கு திருவரங் கொடுக்கவேண்டும் அதுயாதென்றால் இந்தசதகண்டனென்னுமரக்கனை நானே சம்மாரஞ்செய்து தோல்விபடையாமல் வென்று விடுகிறேனென்று சுவாமி பாருடனே பிரதிக்கினை செய்திருக்கிறேன் ஆகையால் அவனுடன் போர்புரிந்த குணத்தில் நீங்

கள் யாவரும் அவரவர்கள் ஆயுதங்களும் கையிற் றொடவேண்டாம் களரியிற் படவேண்டாம் யாவரும் இந்த புட்பக விமானத்தின்மேலிலிருந்து வேடிக்கை பார்த்திருக்கவேண்டும இந்தவரம் எனக்குத் தரவேண்டுமென்று சீதாபிராட்டியம்மனானவள்கேட்க ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் எழுந்திருந்து சாஷ்டாங்கமாகத் தெண்டஞ் சமர்ப்பித்து அம்மா மகாபதிவிரதா சிரோன்மணியாகிய இலட்சுமி தேவியே கேளுந்தாயே இந்தச் சதகண்டராவணனைச் சங்கரிப்பதரிதா ஈதொரு பெரிதா ஒருநிமிஷத்தில் அந்தப் பராக்கிரமமுள்ள சதகண்டராவணனை எங்களுடைய வஸ்திரப் பிரயோகங்களினால் அவனுடைய நூறுசிரசையும் இருநூறு கரத்தையும் கண்டதுண்டமாய்ச் சங்கரிக்கின்றோம் பாரும தாயேயென்று இராஜர்கள் சொல்ல அப்படியே சீதாபிராட்டி யம்மனானவள் மனக்களிப்பையடைந்து நீங்கள் யாவரும் வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருங்கள் என்று ஆக்கியாபித்து பின்பு அநுமாரைப்பார்த்துச் சொல்லுகிறாள் வாரும்பிள்ளாய் அனுமாரே நீர்சதகண்டனுடைய கோட்டைக்குப்போய் அவனுடைய நூறுசிரசையும் அவனுடைய ரதகஜதுரகபதாதியும சங்கரிக்கத்தக்கதாக உன்னுடைய கோட்டை வாயிலண்டையில தண்டுவிட்டிறங்கியிருக்கிறார்கள் நாளையதினம சூரிய உதயத்துக்கு ரதகஜதுரக பதாதிகளையும் யுத்தத்திற்குவரச்சொல்லி ஆக்கியாபியுமென்று செலவுகொடுத்தாள் அப்படியே அம்மன்னையினாற செலவுபெறறுக்கொண்டு வெளியேபுறப்பட்டுசதகண்டன கோட்டைவடக்குவாசலுக்குள்ளேபோகும்போது அந்தவாசல் உத்தரகோபுரமானது கோடிசூரியப்பிரகாசம் போலிருந்தது இதன்றிப் பின்னும்பச்சை வைடூரியம கோமேதகம்புட்பராகம் கெம்புமரகதம் பளிங்குஇவைகளெல்லாம் பதித்து தங்கத்தினாலிழைத்திருக்கின்ற வேடிக்கையைப்பார்த்து அதிக சந்தோஷப்பட்டு அந்தகோட்டை காக்கின்றதிரிகண்டனென்னுமரக்கன இருநூறு வெள்ளஞ் சேனையும் காவலாயிருக்கிறவர்களை ஆஞ்சநேயா பார்த்துச் சொல்லுகிறார்.

அடா திரிகண்டா நான் சீதாபிராட்டியாருடைய தூதன் என் பெயர் அநுமந்தனென்று சொல்லுவார்கள் என் தாயாராகிய சீதாபிராட்டியார் உங்களாண்டவனாகிய சதகண்டனை சங்கரிப்பதற்கு கோட்டை வாசலில் எதிராகக் கோட்டைக்கட்டிக் கொண்டிருக்கிறார்கள் அந்த விசேடத்தை உங்கள் கர்த்தாவாகிய சதகண்டனுடனே சொல்லப் போகவேண்டுமென்று அநுமார்சொல்ல திரிகண்டனானவ

ன் ஆஞ்சநேயரைப் பார்த்து ஆச்சரியப்பட்டுச் சொல்லுவான் ஓஆஞ்சநேயரே எங்கள் ஆண்டவன்பேர் சொன்னால் திரிமூர்த்திகளும் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டார்கள் சந்திரசூரியர்கள் திசைமாறிப் போவார்கள் தேவர்கள்முதலிய யாவரும் நடுங்குவார்கள் அப்படிப்பட்ட சதகண்டனை அந்த சீதாபிராட்டியம்மன் எவ்வண்ணஞ் ஜெயிப்பாளென்று ஆச்சரியப்பட்டுகுஞ்சிரிப்புகொண்டு நகைத்துச்சொல்லத்தொடங்கினான் உன்னைப்பார்த்தால் காட்டிலே சஞ்சரிக்கிற குறங்கைப்போலிருக்கின்றது இந்த விசேடமெல்லாம் எங்களருகிலிருக்கின்ற காவற்காரர்கள் கேள்விப்பட்டால் உன்னைப்பிராணனோடே விடமாட்டார்கள் ஆகையாலவர்கள் அறியுமுன்னமே ஓடிப்போவென்று சொன்னான அந்த விசேஷத்தைக் கேட்டவுடனே ஆஞ்சநேயர்கோபித்துக்கொண்டு விஸ்வரூபங்கொண்டுஆகாயம் பூமியுமொன்றாய்வளர்ந்து. அந்த திரிமண்டனென்னு மரக்கனைத் தன் பலங்கொண்டவரையில் ஓங்கிஒருகுத்து விட்டார் அவர்கைகுத்தினால் அவன்மரணத்துக்குச் சமதையான மூர்ச்சையடைந்தான்.

பின்பு மூர்ச்சை தெளிந்தெழுந்திருந்து அந்த திரிகண்டனும் ஆஞ்சநேயரும் ஒருவருக்கொருவர் ஜெலிக்கவேண்டுமென்று இரண்டு நாழிகை பரியந்தம் யுத்தம்புரிந்துஆஞ்சநேயர் முனைந்து திரிகண்டனென்னும் அரக்கனைப்பிடித்து அவன்மூன்று சிரங்களையுங்கண்டித்து சமுத்திரத்திற்போய் விழத்தக்கதாக விட்டெறிந்து கோட்டைவாயல் காத்திருக்கின்ற நூறு வெள்ளஞ் சேனைகளையுமடியவடித்து அக்கோட்டைவாயில்உத்தரகோபுரமுமிடித்துஉதைத்துத்தள்ளிவிட்டு ஆகாயமார்க்கமாய்ப் பாய்ந்து நூறு பதினைந்துசுற்றுக் கோட்டையு மதிலுந்தாண்டி சதகண்டனென்னும் விதுராவணனிருக்குஞ்சபா மண்டபத்துக்கும் முத்து பவளம் கோமேதகம் புட்பராகம் பச்சை வைடூரியம் மரகதம்மாணிக்க முதலிய அலங்காரமும் அநேகவிதமான ஆடையாபரணமும் நிறைந்திருக்கின்றசபாமண்டபத்தில் இரத்தின சிம்மாதனத்தில் ஒரு கோடி மந்திரிகள் ஒரு கோடி சேனாதிபதிகளுடன் சகல ஆடம்பரத்துடனேகொலுவீற்றிருக்கிற சமயத்தில் ஆஞ்சநேயர் சதகண்டனிருக்கிற சிம்மாசனத்திற்கு முன் தனது வாலால் எதிரில் சிம்மாதனம் போட்டுக்கொண்டு சட்டதிட்டமாய் உட்கார்ந்துக்கொண்டு சதகண்டனைப்பார்த்துச் சொல்லுகிறார்.

அடா விதுர ராவணனே என் வார்த்தையைக் கேள் அயோத்தியாபுரியாளப்பட்ட தசரதமகாராஜாவினுடைய குமாரன் ஸ்ரீராம

த்தியானவர் இலங்கையி[illegible]ட்சிசெய்கின்ற இராவணன் கும்ப
கர்ணன் இந்திரஜித்து அதிகாயன் முதலிய அநேகமான ராட்சதர்க
ளும்இரண்டாயிரம்வெள்ளஞ்சேனைகளையும்சங்கரித்துஇராவணன்த
ம்பிவிபீஷணன்சரணாகதியென்று ஸ்ரீவிபீஷணனுக்குப் பட்டம்தரிப்
பித்து இலங்கையில் அரசாள வைத்தார் அப்படிப்பட்ட ஸ்ரீரகுநாய
கருடைய தேவியாகிய சீதாப்பிராட்டியம்மாள் உன்னுடனே யுத்தம்
புரியவேண்டுமென்று உன் கோட்டைவாயிலில்முன்னே வந்திரங்கியி
ருக்கிறாள், ஆகையால்நீரும் உம்முடையசேனைகளும் யுத்தத்திற்குவ
ந்தாலாச்சு இல்லாவிட்டால் உன்னுடைய கோட்டை கொத்தளமு
மிடித்து பட்டுணத்தையுங் கொள்ளையிட்டுப்போடுகிறோமென்றுஎங்
கள் தாயாகிய சீதாபிராட்டியம்மன் உன்னுடனே சொல்லும்படி எ
ன்னையனுப்பினாள் ஆகையால் நான்வந்தேன் என்பெயர் அனுமானெ
ன்றுசொல்லுவார்களென்று ஆஞ்சநேயர்சொல்ல அவ்வார்த்தையைச்
சதகண்டன்கேட்டு மகாகோபமாகிபிரளயகால உருத்திரனைப்போலக்
கண்கள் சிவக்க உருட்டி விழித்துப் பார்த்து மீசைகள் படபட வெ
ன்று துடிக்கச்சிறிக்கொண்டிருக்கிற சமயத்தில் உத்தரகோபுரத்திலி
ருந்தசுகசாரணகுணவன்அனுமந்தர் கையாலடிப்பட்ட வேவுகாரரிரு
வரும்க்ரமேற்காரம் வைத்துக்கொண்டுசதகண்டன்கொலுவிருக்கின்
ற சபாமண்டபத்துக்கு முன்னே வந்து அலறி விழுந்தெழுந்து சின
ங்கொண்டு பின்பு மனந்திடங்கொண்டு சொல்லுகிறார்.

வாருமையா சுவாமி உம்முடைய கோட்டைவாயிலில் உத்தர
கோபுரத்தில் காவலாயிருந்த திரிகண்டனும் நூறு வெள்ளம் சேனையு
ங் காவலாயிருந்தோம் அங்ஙனம் ஒருகுரங்குவந்து திரிகண்டனைஜெ
யஞ்செய்து நூறுவெள்ளஞ் சேனையு மடிய அடித்து தும்சப்படுத்தி
விட்டது அதனால் நாங்களிருவருந்தப்பித்துக்கொண்டு ஓடிவந்தோம்
ஐயாவென்று சொல்லிப் பின்னும் இந்தக் குரங்கைப்பார்த்தால் அக்
குரங்குபோலிருக்கின்றது ஆனால் முன்னே இக்குரங்கைப் பார்த்
தால் வானத்திற்கும் பூமிக்கும் ஒன்றாயிருந்தது இப்போதுஆனையா
யிருந்தது பூனைபோலிருக்கிறதென்று சொன்னார்கள்.

அதனைச் சதகண்டன் கேட்டு மெய்குலுங்க நகைத்து உள்ளம்
பதைக்கும்படியாக இருவிழிகளையும் வெருட்டி மிகுந்த வயிரமான
பதார்த்தங்களைச் சேதித்த ஓர் ஆரிதத்திற்கு இலவம்புல்லைச்சேதிப்ப

தும் அரிகோ இந்திரன் பிரமன் [illegible] ருத்திரன் முதலியவரும்
நமக்குநிகரா கமாட்டார்களே காட்டிற் சஞ்சரிக்கின்ற குரங்கும் பஞ்
சையாகிய மனிதருமே நமக்குநிகராகுவாராவென்று மந்திரிகளைப்பா
ர்த்துச் சொல்லுகிருன் கேளுங்கள் மந்திரிகளே இந்த குரங்கானது
உத்தரகோபுரத்திலிருந்த திரிகண்டனையும் நூறுவெள்ளம் இராட்ச
தர்களையும் சம்மாரஞ்செய்து கோபுரவாயிலையும் இடித்துத் தள்ளி
தும்சப்படுத்தி வந்ததென்றால் ஆச்சரிய மல்லவாவென்று மந்திரிகளை
க்கேட்க அவர்கள் சொல்லுகிறார்கள்.

வாருமையா சுவாமி நாங்கள் ஆயுள் பரியந்தம் உன்னருகில் மந்
திரியாக விருந்தோ மிதுவரையில் இப்படிப்பட்டவிசேடம் நாங்கள்
காதாரக்கேட்டதுமில்லை கண்டதுமில்லை இதுமகாஆச்சரியமாயிருக்கி
ன்றன பூலோகத்தில் இராச்சியபரிபாலனஞ் செய்கின்ற இராசனான
ஸ்ரீராமனென்கிறவன் அவன் அவனிராவணன்கும்பகர்னன் இந்திரசி
த்தையுஞ் சங்கரிக்கிறபோது நாம்அறியாமற்போனோம் இப்போஅவ
ன் தேவியாகிய சீதாபிராட்டி யென்பவள் வந்து நமதுடைய கோட்
டைவாயிலை பிடித்துக் காலாளுதைத்துத்தள்ளிதும்சப்படுத்தி திரிக
ண்டனையும் நூறுவெள்ளம் அரக்கர்களையுங் கொன்று பயம் நாணம்
அச்சமில்லாமல் உமது சிங்காதனத்திற்கெதிரில் ஓர் சிம்மாதனம்
அடைத்துக்கொண்டு உம்முடன்மறுத்து உத்தாரஞ்சொன்னால் நாம்
ஒரு பெண்பாலுக்காகப்பயந்து அசாக்கிருதையாயிருந்தால் நன்மை
யல்ல திரிமூர்த்திகள்தான் என்ன சொல்லுவார்கள் ஆகையால் எங்க
ளுக்கு உத்தரங்கொடுத்தால் இந்தக்குரங்கைப் பிடித்துக்கொண்டுஇ
னம் வரப்பட்ட குரங்குகளையும் பிடித்துவருகிறோமென்று சொன்
னார்கள் அதைக்கேட்ட சதுராவணன் சொல்லுகிறான்.

வாருங்கள் மந்திரிகளே என்னுடையமனோபாவமறிந்து நீங்கள்
சொன்னீர்களென்று அதிக சந்தோஷப்பட்டு மனம்பூரித்துச் சொல்
லுவான் நீங்கள் வருங்காலம் நிகழ்காலம் செல்காலம் இம்மூன்று கா
லமறிந்து சொல்லப்பட்டவர்களுக்கு நான் என்ன விவரித்துச்சொல்
லவல்லவன் என்று காருபாரிகளையழைத்து ஆணிப்பொன்மாலை மோ
க்னமாலை கண்டசரம் கைத்தொடர் கணையாழிமோதிரம் இன்னம் ப
ற்பல ஆடையாபரணமுங் கொண்டுவரச்சொல்லி இவர்களுக்கெல்லா
தியாகங்கொடுத்து உங்களாலோசனைப்படிக்குச் செலவுகொடுத்தோ
மென்றுசொன்னார் அப்போதுமந்திரிகள் ஒருகோடி இராக்ஷதரைய

மைத்துச் சொல்லுகிறான் ஓ அரக்கர்களே இந்தவானரத்தைப் பிடித்துக்கொண்டுபோய்ச் சிறையிற் போட்டடையுங்களென்று செலவு கொடுத்தார்கள் அப்போது ஒருகோடி இராட்சதர்களும் ஆயுதம் கத்தி கட்டாரி அம்பு சிங்காணி வில்லு வல்லயம் இப்படிச்சொல்லப்பட்ட பதினெட்டாயுதங்களுடன் அனுமாரைச்சுற்றி வளைத்துக்கொண்டார்கள் அது எப்படியிருந்ததென்றால் தேன்கூண்டில் ஈக்கள் வந்துமொய்த்துக்கொண்டிருந்தால் எவ்வண்ணமிருக்குமோ அவ்வண்ணமாயிருந்தது அப்போது ஆஞ்சநேயர் இராவணனைப்பார்த்து ஒரு வசனஞ் சொல்லுகிறார்.

அடா வீரா இராவணா நான் சொல்லுகிறேன் நீசற்று செவியுற்று கேட்பாயாக நான் ஸ்ரீரகுநாயகருடைய தூதன் எனதுநாமதேயம் அனுமந்தனென்றுசொல்லுவார்கள் லோகமாதவாகிய என்தாயார்பேர் சீதாபிராட்டியம்மன் அந்த அம்மன் அனுப்பினதூதன் நான் நீரென்னைப் பிடித்துக்கொள்வது கருமமல்லமேலும் என்னைப்பிடிக்க உம்மாலுமாகாது உம்மைப்பிறப்பித்த பிரமனாலுமாகாது ஆனால் என்னாற்கூடியவரையிற் சொல்லுகிறேன் கேளும் அதென்னவென்றால் உங்களை என் தாயாராகிய சீதாபிராட்டியம்மன் பரமபதமனுப்ப வந்திருக்கிறாள் நீர் உன்னுடைய துட்டமந்திரிகள் வார்த்தையை பிட்டமாய்க்கேட்டு கட்டமாய்ப்போகாதே நான் வெகுசட்டமாய்ச்சொன்னேன் நீவீணாய்க் கெட்டுப்போகாதே விருதாவாய்ச் சாகாதே நீ சுகப்படுவதற்கு யான் யோசனை சொல்லுகிறேன் நீயதை மறுக்காமல் என்னை வெறுக்காமற்கேளும் ஸ்ரீமகாலட்சுமியாகிய சீதாபிராட்டியம்மனுடைய பாதத்தில் சரணாகதியென்றுவந்துவிழுந்துபணிந்து மனந்துணிந்து இரக்கத்தோடு அழுது அம்மனைத்தொழுது துதித்து மதித்தால் அப்போது சீதாபிராட்டி உன்பேரில்தயைகூர்ந்து கோபமென்பதைத்தீர்ந்து உனதிடஞ்சார்ந்து ஆர்ந்து உன்னுடைய ஆயுள்பரியந்தமும் உனக்குத்தானே உன்பட்டணத்தை யரசாட்சி செய்யும்படியாய்ப் பட்டந்தரித்து வைப்பாளென்று சொன்னார்.

அந்த விசேஷத்தைச் சதகண்டன் கேட்டுச் சொல்லுகிறேன் அடாவடா அனுமந்த மூடா ஸ்திரீயானவளை ஒரு பொருளாகவெண்ணி நீயிப்படியுஞ் சொல்லலாமா வென்று பின்னுஞ் சொல்லுகிறான் அடா கிங்கிலியர்களே இவனைப் பிடித்துக்கொண்டுபோய்ச் சிறையிலடைக்கச் சொன்னால் என் விருதாவாக நிற்கிறீர்கள் இக்கணமே

கொண்டு போங்களென்று ஆக்கியாபித்தான் அப்போது காலகிங்கிலியர்கள் அநுமந்தரைக் கட்டிப் பிடித்து கயிற்றினால் இருகையுங் கட்டியிழுத்துக்கொண்டு போனார்கள்.

அப்போது அநுமந்தருக்குக் கோபமீறிச் சீறித்தூறி மனந்தேறி எழுந்திருந்து நிற்கும்போது காலகிங்கிலியர்கள் யாவரும் அநுமந்தரைச் சுற்றி வளைத்துக்கொண்டார்கள். அப்போது வாயுபகவான் குமாரராகிய அநுமந்தர் ஒருகோடி காலகிங்கிலியர்களையுஞ் சில அரக்கர் கூட்டங்களையும் பிடித்து அடித்துச் சங்கரித்துப்பின்பு அனந்தங்கோடி இராட்சதர்களையும் உதைத்து மிதித்துத்தள்ளியும் பின்னும் வனங்கள் வனாந்திரங்கள் சாலைகள் சோலைகள் இவைகளெல்லாம் பிடுங்கி எறிந்துவிட்டு ஆகாயமார்க்கங் கிளம்பிக்கோட்டை வாசலைத் தாண்டி சீதாபிராட்டியம்மன் பாதாரவிந்தத்தின் முன்வந்து சாஷ்டாங்கமாக விழுந்து சேவித்துக் கைகட்டி வாய்புதைத்துக்கொண்டு தான் இராவண சண்டைக்குப் போய்வந்த விசேடமெல்லாம் விவரமாயெடுத்துச் சொன்னார்.

அங்ஙனம் அப்படியிருக்கச் சதகண்டனென்னு மிராக்கதன் இந்த விசேடமெல்லாங்கேட்டு அநுமந்தர் செயத்தையும் பார்த்து அதிக ஆயாசங்கொண்டு மனம் விண்டு இருக்கின்ற சமயத்தில் அவனது தம்பி மகாபலவானென்கிறவன் வந்து தனது அண்ணனுடையபாதத்தில் விழுந்து சாஷ்டாங்கதெண்டன் சமர்ப்பித்து கைகட்டி வாய்புதைத்துக்கொண்டு சொல்லுவான் பாரும அண்ணாவே ஒரு ஸ்திரீயானவள் நம்முடைய கோட்டை வாயலில் புகுந்து இறங்கினதுமார்க்கமாய் ஒரு குரங்கையனுப்பி அக்குரங்கானது இவ்வளவு அவமானப்படுத்திவிட்டுப் போயினதல்லவா நல்லதாகட்டும் இனி யாதொன்றுக்கும் விசாரப்படவேண்டியகாரியமென்ன அடியேனுக்குச் செலவு கொடுத்தால் நான்போய் அந்த சீதாபிராட்டியையும் அநுமந்தனையும் இராமர் இலட்சுமணர் பரதர்சத்துருக்கர்முதலியஎண்பத்துநான்குஅக்குரோணிவானரசேனையையும் ஐம்பத்தாறு தேசத்தரசர்களையும் அவரவர்கள் இரதகஜதுரகபதாதிகளையும் ஒரு பாணாஸ்திரத்தினால் அதஞ்செய்து யமபுரத்திற்கேதுவாக்கிறேனென்று உத்தரங்கேட்டான் அப்படியே நீவிரைவில் அவர்களைக்கொன்று அதஞ்செய்து சீதையைக் கொல்லுங்களென்று விடைகொடுத்தனன் உடனே மகா லவானென்பவன் காட்டைநோக்கிச் செல்லுங் கடுங்கனலைப்போல் விழுந்து அமைச்சர்களைப்பார்த்து நமது சதுரங்க சேனைகளும் யுத்தத்திற்சாயத்தமாயிருக்கும்படி வள்ளுவனைக் சொ

டு முரசறை விக்கக் கட்டளையி...து ஆக்கியாபித்தனன் அவ்வாறே அவ்வமைச்சர்கள் வள்ளுவனைக்கொண்டு முரசறைவித்தலும் மகாபலவானுடைய அரண்மனைவாயிலுக்குமுன் அளவற்ற வீரர்கள் இரதகஜ துரக பதாதிகளோடு வந்து சேர்ந்தார்கள். அதற்குமேல் மகாபலவானனவன் ஸ்நானபான முதலியவைகளைச்செய்து ஆடையாபரணாதிகளைத் தரித்துக்கொண்டு தும்பைமாலையினைச் சூடி அரண்மனை வாயிலில்நின்றும் யுத்தசன்னாத்தனாய் வெளிக்கொண்டு தனது சேனாசமுகத்தில்வந்து அந்தந்தவீரர்களுக்குத்தக்க அளவற்றஇரதங்களையும் யானைகளையும் குதிரைகளையும் ஆயுதங்களையும் உதவிச்செய்து தனதுகுதிரைபூட்டிய தேரின்மீதாரோகணித்து வெற்றிச்சங்கம் பேரிகை முதலானவைகள் சப்திக்கவும் மங்களகீதங்கள் முழங்கவும் மகாரதர் விருதெடுத்துக் கூறவுங் குடைகொடி குஞ்சம் முதலானவைகள் இருபுறத்திலும் நெருங்கவுந் தூதர் முன்னாதாவோடவும் மகாயுகாந்த வெள்ளத்தில் எழுகின்ற வடவாமுகாக்கினியைப்போல சகல-சேனாசமுத்திரங்களுந் தன்னைப்புடைசூழ்ந்து வந்தன. அச்சேனா சமுத்திரங்களிலுண்டான வோசையானது பிரளயகாலத்திலுண்டாகும் கடலொலியினும் மிகுத்து சந்தித்து இச்சேனைகளல்லாமல் இன்னும் வேறுவேறான அளவற்ற வடிவங்களோடு அஸ்திரசஸ்திர முதலிய ஆயுதங்களைத் தாங்கியிருக்கின்ற அனேக இராட்சதர் பின்னேவர மகாமேரு வென்னப்பட்ட இரதத்தை அலங்கரிக்கச் சொல்லி இரதசாரதிக்கு உத்தரஞ்செய்தான்.

அப்போது சாரதி இரதத்தை வெளியிற் கொண்டுவந்து மேற்கவசத்தை நீக்கிச் சமல் விருதுகளுமாட்டி கொடி கொடிசீலை பூச்சக்கருடைமுதலிய வெல்லாஞ்சோடித்துப் பதினாயிரங்குதிரைகளைத்தேரிற்பூட்டி அலங்கரித்து மகாபலவானெதிரில் கொண்டுவந்து நிறுத்தினான் அப்போது மகாபலவான் என்பவன் ஐம்பத்தலைக்குங் கோடிசூரியப் பிரகாசமாயிருக்கின்ற நவரத்தின கிரீடங்கள் சூட்டி சகலாபரணமுமாட்டி மார்புக்குப் பதக்கம் கண்டசரம் மோகனமாலை அஸ்தகடகங்களையாழிமோதிரமுந்தரித்துக்கொண்டுநல்லவஸ்திரங்களுடுத்தியலங்கரித்து பதினாயிரம்புரவிபூட்டியிருக்கப்பட்ட இரதத்தின்பேரில்ஏறிக்கொண்டு இருபுறமும் வெண்சாமரம்வீசிவர நாட்டியப்பெண்கள் பரதநாட்டியஞ்செய்ய கட்டியக்காரர்கள் எச்சரிக்கைசொல்ல தோழிப்பெண்கள் ஆலாத்திகொண்டுசெல்ல மந்திரிமார்கள் புடை

சூழ தேவர்கள் முதலிய யாவரும் [illegible]னக்கு நிகரில்லாமல் மதோன்ம த்தனும் இரதத்தின்பேரில் சா[illegible]கொண்டு இரதகஜதுரகபதாதிகளு டன் கடல்முழக்கம்போல் இரண[illegible]பேரிகைஜெயபேரிகை சகலமான வாத்தியத்தொனியுடனேவீரகெர்ச்சனையுடன் புறப்பட்டுகோட்டை வாயலெல்லாங்கடந்துவெளியிலே வந்திறங்கி தன்னுடைய பாளையத் தை அணியணியாய்நிறுத்திக்கொண்டு யுத்தசன்னுத்தனுயிருந்தான்

அந்த விசேடத்தை அனுமார் அறிந்து சீதாபிராட்டியம்மனுக் குநமஸ்காரஞ்செய்து அம்மாதாயே விதுராவணனுடைய இரதகஜ துரகபதாதிகளுடன் வந்திருக்கிறுன் என்று கூற அப்போது சீதாபி ராட்டியம்மன் பாதர் சத்துருக்கர் முதலான ஐம்பத்தாறு தேசத்தர சர்களையும் புட்பக விமானத்தின் பேரிலேறி இருங்களென்றும் அர க்கர்மாய்கைகளுக்கு நீங்கள் சற்றேனும் பயப்படவேண்டாமென்று ம் செலவுகொடுத்து சீதாதேவியம்மன் ஸ்ரீரகுநாயகருடைய இரதத் தின்பேரில் ஏறிக்கொண்டு இராமபத்திரரை சாரதியாய் வைத்துக் கொண்டு அனுமாரை எச்சரிக்கையாயிருக்கச்சொல்லி தானுங்கையி ல் ஆயுதங்களையும் அஸ்திரங்களையு மெடுத்துக்கொண்டு ஆஞ்சநேய ரை யழைத்துச் சொல்லுகிறுள்

கேளும் ஆஞ்சநேயா அரிராமருடைய சகாயா அரவிந்தவாயா அருண்மிகுரூபா அகளக்கவுமார்யா அரனுடையநேயா அருணனுகி யவாயுவின்சேயா நான் சொல்லுவதைக் கேளும்பிள்ளாய் அந்த ரா க்ஷதர்கள் புஜபல பராக்கிரமமுடைய மாய்கையுள்ளவர்கள் ஆகை யால் கடிகைக்குக் கடிகை சோதனைசெய்து நடந்து வருகின்ற வி சேஷத்தை யடிக்கடி தெரியப்படுத்த வேண்டுமென்று ஆக்கியாபித் தா ளக்கணமே சீதாபிராட்டியம்மன் போர்புரிவதைப் பார்க்கவேண் டுமென்கிற முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணுயிர மிருடிகளும் கின்னரர் கருட காந்தருவர் சித்தர் வித்தியாதரர் தே வேந்திரன் முதலானவர்களும் அவர்கள் விமானங்களில் ஏறிக்கொ ண்டு சீதாபிராட்டி யம்மனுடைய யுத்தத்தைப் பார்க்கும்படியாய்ச் சகலரும் வந்தார்கள். அப்போது மகாபலவானும் அவனுடைய சேனைத் தளங்களும் வந்து சுற்றிலுஞ் சூழ்ந்து கொண்டார்கள் அது எப்படியிருந்த தென்றால் அக்கினிமலையைப் பனி வந்து சூழ் ந்தா லெவ்வண்ண மிருக்குமோ அவ்வண்ணம் இருந்தது இரா க்ஷதர்களுடைய சேனைகளும் அஸ்திரங்களைப் பிரயோகஞ்செய்

தார்கள் அவர்கள் விட்ட அஸ்திரங்களை யெல்லாஞ் சீதாபிராட்டிய
ம்மன் கண்டித்து அக்கினியாஸ்திரத்தை யெடுத்து மந்திரோர்ச்சாட
னஞ்செய்து பிரயோகித்தாள் அந்தஸ்திரமெல்லாம் வெளியே புறப்
பட்டு வாயுவேக மனோவேகமா யிடிமின்னல்களுடனே குமுறிக்
கொண்டுவருகிறதை மகாபலவான்கண்டு வருணாஸ்திரத்தை ஏவினான்
அந்தஸ்திரம் இடிமின்னல்களுடனே வந்து சீதாபிராட்டியம்மன்பிர
யோகித்த அக்கினியாஸ்திரத்தை யறுத்துவிட்டது பின்னும் அனேக
பாணங்களையெடுத்து வில்லிற்றொடுத்துக் குணத்தொனிபண்ணினான்
அப்போது சீதாபிராட்டியம்மன் மதிமண்டலமாக வில்லை வளைத்து
நாணேறிட்டுக் குணத்தொனிபண்ணி நாராயணாஸ்திரத்தையெடுத்து
அபிமந்திரித்துப் பிரயோகஞ்செய்தாள் அந்தஸ்திரமானது புறப்பட்டு
நெருப்புப்பொறிகளைக் கபகபவென்று கக்கிக்கொண்டு கோடையிடி
களைப்போலே யிரைச்சலிட்டுக்கொண்டுவந்து மகாபலவான் மார்பிற்
றைக்க அதனாலவன் தேரின்மீதில்விழுந்து சாவுக்குச்சரியான மூர்ச்
சைபடைந்தான்உடனேசாரதிகண்டு மகாபயங்கொண்டுதன்னுடைய
இரதத்தை யதிவேகமாகத்தூண்டி யொருசேனைத்தூரத்தில்கொண்டு
வந்து நிறுத்தித்தனது அரசனை தூக்கித் தேரின்மீது சாத்திக்களைதெ
ளியும்பொருட்டு மயில்விசிறிகொண்டு விசிறினான் சற்றுநேரஞ்சென்
றபின் அரசன் களைதெளிந்து கண்ணை விழித்துப்பார்த்து மானமுங்
கோபமுந்தன்னை வாட்டச் சாரதியைநோக்கி விரைவில்நமது இரதத்
தைப் போர்களத்திற்கொண்டுபோவென்று ஆக்கியாபித்தான் அதைக்
கேட்ட சாரதியானவன் அரசனை நோக்கி எமதாண்டவனே நாம்
போர்க்களஞ் சொல்ல நன்றன்று ஏனெனில் அந்த மானிட சேனைக்
குள் ஒரு பெண்ணானவள் நாம்போய்நிற்கு முன்னமே யோராஸ்திரத்
தினால் அப்போர்க்கொத்தகொடுமை விளைவித்தனள் இன்னமற்றசேனை
களும் நெருங்கி யெதிர்க்குமாயின் நமது சேனைகள் யாவும்மடிவத
ன்றி நாமும் மடியவேண்டிநேரிடும் ஆகலால் இவைகளை யெல்லாந்
தேவரீர் தீர்க்காலோசனை செய்தருளல் வேண்டுமென்று சொன்னான்
இவ்வாறுள்ளவித்தையெல்லாம் மகிமையோடு தூதுவன் சொல்லியும்
அவைகளை மகாபலவானென்பவன்சிறிதும்யோசியாது அழிவுகாலத்
துக்கேற்ற புத்தியினையே மேற்கொண்டு தனது பராக்கிரமத்தையே
பெரிதாகமதித்து ஓவித்தகனே யிதுகாலம்இந்திரன்-பிரமன்-விஷ்ணு
ருத்திரன்-முதலியயாவரும் என்னெதிரில்நின்றவரல்லவா இப்போது
பஞ்சையாகிய மானிடச் சேனைகளெல்லா நம்மைவெற்றி பெறுவார்
அவர்களை யோரக்கினியாஸ்திரத்தினால் சங்கரித்துவிடுகிறேன் பாரெ
ன்று சொல்லிக் கண்கள்சிவந்து அழலைச்சொரியும்படியான கோபத்

தோடு உலகத்தையெல்லாமெடுத்து விழுங்கிவிடுவான்போலத் துள்ளித்தனது குதிரையைவிரைவில் நடத்தும்படி ஆக்யாபித்தனன் அதற்குள் இவனுடன் முன்புசென்ற இராட்சசசேனைகளை சீதாபிராட்டியினுடைய அஸ்திரசஸ்திரங்களினு லடிப்பட்டு மெலிந்து நிர்வகிக்கமாட்டாமல் நாற்றிசையுமோடினர் அதனை மகாபலவான்கண்டு ஓடாதீர்களோடாதீர்களென்று தனது இரதத்தை விரவில் நடத்தும்படி சாரதிக்குரைத்தான் உடனே அவன் சேனைத்தலைவர்கள் எல்லா மவனைப் பணிந்தெழுந்து தமது நால்வகைச் சேனைகளோடும் முன்னே நடந்து புண்ணியத்தோடுபாவம் எதிர்த்ததுபோல ஸ்ரீராமருடைய சேனைகளோடெதிர்த்து இரதவீரர்களும் யானைவீரர்களும் குதிரைவீரர்களோடு குதிரைவீரர்களும் வாள்வீரர்களோடு வாள்வீரர்களும் கதைவீரர்களோடு கதைவீரர்களும் வில்வீரர்களோடுவில்வீரர்களும் வேல்வீரர்களோடு வேல்வீரர்களுமாக நெருங்கிப்போர் செய்தார்கள் அவர்களில் சிலவீரர்கள் பறவையையொத்த பரிகளைக் ட்டி யிருக்கின்ற தனது இரதங்களைச் சிற்றுற்றெழுந்த மலைகளைப்போலவும் உறவோடுபகைக்குங் கயவரைப்போலவும் பகைவர்களுடைய இரதங்களைப்பொருதுவித்து மண்டலமிட்டார்கள் சிலவீரர்கள் மலைமுழைகளினின்று வெளிப்பட்டபறவைகள் அங்குமிங்குமாகப் பறந்து இரைதேடுதல்போல ஒருவர்படைகள் ஒருவர்ரதத்தில் நுழையும்படியாக விடுத்து ஆர்ப்பரித்தார்கள் சிலவீரர்கள் மலையின்கணுள்ள விருக்ஷங்கள் யாவுமழையினுலிற்று வீழ்வதுபோலப் பகைவருடைய இரதங்களின்மீது தமது அஸ்திரங்களைப்பொழிந்து கொடிச்சீலை முதலிய வுறுப்புகளை நிலத்தில்வீழ்த்தினார்கள் சிலவீரர்கள் தம்மோடுபோராட வேண்டினோருடைய இரத்தத்தை நெருங்கும்பொழுது இடையிலளவற்ற பிணங்கள்வீழ்ந்து தங்கள்இரதம் இடும்படிசெய்ய மனநொந்து பின்புவேறொரு இரதவீரர்களழைக்க மகிழ்ந்து யோசனைசெய்தார்கள் சிலவீரர்களொருவரை யொருவரெதிர்த்துக் குதிரைகளையும் பாகர்களையும் ஆயுதங்களையுமிழந்து தமதுடலைத்தேரின்மீதும் உயிரைவாளின்மீதுங் கூட்டினார்கள் சிலவீரர்கள் பன்னிருகோடி சூரியர்களும் தமக்குள்பகைகொண்டு யுத்தம்செய்வதுபோலத் தமது இரதங்களை ஆகாயமார்க்கத்திற்செலுத்தி ஒருவரோடொருவர் வீராவேசத்தோடு போர்செய்வார்கள் சிலவீரர்கள் அந்தரமாகப் பறந்து யுத்தஞ்செய்து தமது வலிமையும் உயிருங்குன்றும்படியாகப் பூமியில்விழும்போது அங்குள்ளயானை முதலியவைகளையுங்கொன்று உயிர்விடுத்தார்கள் சிலவீரர்கள் தமதுதேர்கள் முறிந்து உடனே சேமத்தர்களில் சிங்கவேற்றுனைப்போலப்பாய்ந்து போராடினார்கள் சிலவீ

ரர்கள் பகைவர்கள்விடுகின்ற அஸ்திரங்களின்மீது பெருகி யோடும் படியாகக்கிடக்க அத்தேர்கட் அருவி பாய்கின்ற மலைகளைப்போலப் பிரகாசித்தன சிலவீரர்கள் செய்தேரினால்தமதுகுதிரைபூட்டியஇர தங்களில்தானேயுயிரைவிடுத்து அரம்பைமாதர்களுடைய அல்குலென் னுந்தேரிலிருந்து அவாகொங்கையாகியயானைகளை யிரண்டுகரங்களி னாலும்வளைத்தும்போர்செய்தார்கள்சிலவீரர்கள் இடியையொத்துச் சத்திக்கும் பெருங்குரலினாலும்மழையைப்போலப்பொழியும் மதத் தினாலும் மின்னலைப் போல பிரகாசிக்கும் அஸ்திரங்களினாலொத்து விளங்கு மேகங்களை தமதுயானைகள்மீது அம்மேகத்தைவாகனமாக வுடையிந்திரனைப்போலவிளங்கி யுத்தஞ்செய்தார்கள் சிலவீரர்கள் தமதுயானைகளால் பகைவருடையயானைகளை தண்டத்தாலும் சங்கிலி களினாலுமடிக்கச்செய்துநீண்டகோடுகளினா லவைகளுடலும்பிளக்கு ம்படியாகமுட்டிப் பல அஸ்திரங்களைக்கொண்டு அப்பகைவருடைய உயிரையுமாய்த்தார்கள் சிலவீரர்களோடு தமதுயானைகளையோட்டி வரைசிறகரிந்தோனாகியதேவேந்திரனைப்போல அந்தஇரதங்களைமுறி த்துச்சாடினார்கள் சிலவீரர்கள்பகைவருடைய தேரைமுட்டியெடுக்கு ம்படித்தமது யானைகளையேவ அவைகளவ்வாறேமுட்டியெடுக்கவலு வில்லாமல்முற்காலத்தில் கைலாயகிரியைஎடுத்த இராவணனைப்போல வோலமிட்டு முழங்கினகுதிரைவீரர்கள்செய்தபோரினால் தமது உயி ரையும் யானையையும் விடுத்து அரம்பையரது தனங்களாகிய இரு கோட்டு யானைகளை நித்தமு மணைந்து வாழ்ந்திருந்தார்கள் சிலவீரர் பகைவரைக் கொன்றல்லது மீளக்கூடாதென்னும் வெஞ்சினத்தை மேற்கொண்டு காற்றோடு செல்லுமக்கினியைப்போல தமதுகுதிரை களோடுஞ்சென்று கடல்போல விளங்கும் போர்களத்தை அலைபோ ல் விளங்கித்துழாவினார்கள் சிலவீரர்கள் தமதுகுதிரைகளைப்பகைவ ர் குதிரைகளின்மேரில் பாயும்படிவிடுக்க அவைகளவ்வாறேபாய்ந்து கொன்றவுடனே தமதுகாலினால்நிலத்தினின்று எழுந்து ஆகாயத்திற் சென்று சூரியனுடைய குதிரைகளோடுஞ் சமர்செய்தன சிலவீரர் கள் பகைவர்களுடைய இரதங்களையும்யானைகளையுங்குதிரைகளையும் அதஞ்செய்து அவர்கள்விடுத்தபாணங்களினால்முடிவில் நிலத்தில் வீழ்ந்து தேவமாதர் களுடையநயன மென்னும் வாளியினால்மன்மதன் செய்யுஞ் சமரைவென்றார்கள் அவ்வாறு இரதவீரர்களும் யானை வீரர்களும் - குதிரைவீரர்களும் - ஒருவரையொருவரெதிர்த்துயுத்த ஞ்செய்திருக்கப் பதாதிகளாயிருக்கின்றசேனைகளும் சிலர் இளையோர் முதியோரிடியுண்டோர் பெண்தன்மை பூண்டோரென்னும் மிவர்

களையும் யானைகுதிரை முதலியவைகளையும் எதிர்ப்படைவிட்டுத்தம்
மை ஒத்தபடைவீரரோடு யுத்தஞ்செய்தார்கள் சிலர் தமதுருவங்களை
கேடங்களினால் மறைத்துக் கரத்தில்வாளினையேந்தி யொருவரை
யொருவ ரிடசாரி வலசாரியாகச் சுழன்று முடித்தேன் மார்பு இடை
தொடைமுதலிய வுறுப்புகளைக்குறிப்பார்த்து வெட்டினார்கள் சிலர்
தமது வில்லுகளைக்குனியவளைத்து அளவற்றசரமாரிகளை யொருவர்
மீதொருவர்விடுத்து மறைந்து போர்செய்வோருடைய வில்லுகளையுந்
தூணிகளையும் கீழ்விழத்தள்ளி மலைபோன்றதோள்களையுந் தலைகளை
யுமறுத்தெறிந்தார்கள் சிலர்பகைவருடையசிரத்திலும் மார்பிலுந்தோ
ளிலும் நிணம்மூளை தசைமுதலியவைகள் சிதறும்படியாகத்தண்டாயு
தங்களைக்கொண்டு தாக்கினார்கள், சிலர் கதை தோமரம் பிண்டி பால
ம்முசலம் கப்பணம் எழு மழு சூலம் குந்தம் முதலியபடைகளை யொ
ருவர்மாறிமாறிவிடுத்துப்போர்செய்தார்கள் சிலர் வீரசொர்க்கத்தினை
யேகுகியமாகக் கோரினவர்களாய்த்தமது அஸ்திரங்கள் முழுவது
மிழந்தும்மெய்யிற்றுக்கியிருக்கின்ற அஸ்திரங்களைப்பறிந்துப் பகைவ
ர்களையோட்டினார்கள் சிலர் தகரோடுதகர்தாக்குவதுபோல முகங்களை
த்தாக்கி யொருவரையொருவரிறுகத்தழுவிநிலத்தில் விழுந்தார்கள்
சிலர் கைகளைக்கைகளினாலும் கால்களைக் கால்களினாலும் பின்னி ஒரு
வரை யொருவர் உள்ள முடலும் நடுங்கும்படியாக அதட்டினார்கள்.
சிலர் முட்டிகளில் முறைமுறையாகக் குத்திச் சயவுச்சாகத்தோடு
ஒருவர்க்கொருவர் உயிர்நிலைகூறிப் புடைத்தார்கள் சிலர் தமதுவி
ழிகளில் அனற்பொறி யெழும்புப்படி யறுத்து நோக்கித் தோள்களை
மாறிமாறித் தட்டி யொருவர்மேலொருவர் பற்களைப் பதியும்படியாக
வூன்று துணிநாவைக்கடித்து நிற்போருடைய மலைகளைதூக்கிதிலறை
ந்தார்கள் சிலர் பகைவருடைய கன்னங்களில் சிவப்பேறும்படியாகப்
புடைத்துத்தலைகளை முறுக்கியெறிந்து கால்களிலணிந்திருக்கும் வீர
கண்டாமணியைப்பறித்து வாயில்வைத்துக் கடித்தார்கள். அளவற்ற
வீரர்கள் பகைவர் விடுகின்ற வாள்களினாலும் வேல்களினாலுங் கால்
கைமுதலிய வுறுப்புகளை யிழந்து மடல்களொழிந்த மலைகள்போல
வெங்கும் நின்றார்கள். அளவற்றவீரர்கள் தமதுசிரங்களை யிழக்க
வந்தாரகியும் மானம் ஒழியாதவர்களா யாளிபோ லெதிர்த்துவருஞ்
சத்துருக்களைவாளினால்வெட்டி யெறிந்து நடனமிடுவார்கள். அளவ
ற்றவீரர்கள்முன்புதழைந்தோங்கி யிருக்குமுருக்கையும் பாலாசையு
மிலவையும்போலச்சமர்க்களத்தினின்று பின்புஅவ்விருக்ஷங்களினி
னறும் விழுகின்றபூவையும் கனிகளையும்போலவுதிரமயமானாள் இவ்
வாறு இருதிறப்படைகளும்ஒன்றோடொன்ன றெதிர்த்துகோரமானயு
த்தங்களைவிளைக்கும்போது அளவற்றபிணங்கள் அச்சமர்க்களத்திலே

மலையாகக்குவிந்துகொண்டன அம்மலைகளினின்றும் பெருகியவுதிர
வெள்ளமானது பலசுழிகளோடுந் திரைகளை வீசிக்கொண்டு சென்
றுகடலில்பாய்ந்தது அவ்வுதிர வெள்ளத்திலாழ்ந்து கிடக்கின்றஇர
தங்களெல்லாங் கப்பல்களைப் போலவும் குதிரைகளெல்லாம்நீர்நாய்
போலவும் கைகால்முதலிய வுறுப்புகளெல்லாந் தாமரைமலர்போல
வும்வெளுத்த பிணங்களெல்லாம் நுரைகளைப்போலவும் நீண்டகுடல்
கள் எல்லாம் பாசிகளைப்போலவும் விளங்கின சிலபேர்கள் அவ்வுதிர
வெள்ளத்தில் மிதக்குங் கேடயங்களைத் தெப்பமாகக் கொண்டேறி
ஈட்டிகளைக் கோல்களாகக் கொண்டு செலுத்திக் குடல்களைகாலை
யாகத்தரித்து யானையின்கோடுகளை கொட்டிக்கொண்டு விளையாடல்
செய்தார்கள் சிலபேர்கள் யானைகளினுடைய விலா வெலும்புகளை
வில்லாகவும் நரம்புகளை நாணியாகவும் வீரர்களுடைய முதுகெலும்
பினை அப்புகளாகவுங்கொண்டு ஒருவரோடொருவர் விளையாட்டாகச்
செய்தார்கள் சிலபேய்கள் முன்றிளங்கன்றறியாத முதுவைப்பேய்க
ளுக்கு முளைச்சேற்றினையு தகைமுதலிய வுபகாரணங்களையும் யானை
யின் செவிகளில் மிதக்கவைத்து அவைகளின் குடல்களினுளிருக
க்கட்டித் துதிக்கைகளில் உதிரங்களை நிரப்பித்தோளிலிட்டுக் கொ
ண்டு சென்று விருந்தாட்டின் சிலபேய்கள் பந்தலிட்டார்போலப்ப
றந்திருக்கின்றபருந்துகளுடைய நிழலில் உதிரங்களைத் தெளித்துத்
துகளடக்கி யானைகளின் சரீரங்களாமேல நாற்றிசைகளிலும் வேகோ
விப்பிரேதங்களாலாகிய தவிசுகளில் வீற்றிருக்க அவைகட்கெதிரின்
சிலபேய்கள் தோத்திரஞ் செய்துஞ் சிலபேய்கள் துணங்கையாடியும்
இருக்குஞ் சமயத்திலே ஸ்ரீராமமூர்த்தியினுடைய சேனைகள் பலவா
னுடைய சேனைகளையெல்லாம் வெருண்டோடும் படியாகச்செய்யஅத
னைக்கண்ட மகாபலவானுள் தனதுசேனைகளைக்கையமர்த்தி மல்லகதி
கயூரகதி விபாக்கரகதிவானரகதி விடபகதி யென்னுமைவகைநடை
யினையும் வாய்ந்ததனது குதிரையின் மீதுனின்றும் இடியேற்றினை
போலச் சத்தித்து உலகங்களை யழிக்கவெழுந்த வடவாமுகாக்கினி
யின்மீது நெய்க்கடல் வார்றுபோலக்கோபித்துக்கொண்டு சீறினான்
அச்சிறத்தைக் கண்டமாத்திரத்தில் சிலர் நடுங்கியுஞ்சிலர் மெய்மறந்
தும்-சிலரோடியும்-சிலருக்கமிழந்து போனார்கள்பின்பு மகாபலவான்
தன்குதிரையையிடசாரி வலசாரியாகவோட்டி ஸ்ரீராமமூர்த்தியினு
டைய சேனுசமுகங்களின்லே புகுந்து தலைகளுருளவும் உதிரம் பெரு
கவும் குடல்தலையுமாக அளவற்ற வீரர்களைச்சின்னுபின்னமாகவாட்
டிமறுபடியுஞ் சீதாபிராட்டி யெதிரில்வந்து நின்றுநாகாஸ்திரத்தை
யெடுத்துத் தனதுகுல குருவாகிய சுக்கிரனுலுபதேசிக்கப் பெற்ற

மந்திரத்தை நூற்றெட்டுருச் செபித்து அதிகவேகத்தோடு விட்டனன் அந்த அஸ்திரம்வெளிப்பட்டமாத்திரத்தில்தேவர்கள் முதலிய சகலருக்கும் விழிகள் கூசிமருண்டு விஷமுண்டவரைப்போலக் கக்கும்படி யொன்று அனந்தமாகச் சொலித்துச் சீதாபிராட்டியின் பேரில் சீறிக்கொண்டு வந்தது அதை யமதன்னையாகிய சீதாபிராட்டிக்கண்டு புன்னகைசெய்து தமது வில்லினிடத்தில் கருடஸ்திரத்தையெடுத்துத் தொடுத்து விடுத்தனள் அவைகளாயிரமாயிரமாகவுருக்கொண்டு நாகாஸ்த்திரங்களைத் தும்சப்படுத்தி இராட்சசதர்களை யெல்லாம் வளைத்து சீதாபிராட்டியின் திருக்கரத்தில் வந்தமர்ந்தது பின்பு மகாபலவான் தேவர்களுங் கண்டு நடுங்கத் தக்கதாக தண்டாயுதத்தை யெடுத்துத் தாக்கினான் அதைக்கண்டெமதென்னை இவன் வலியினெல்லையைக் காணவேணுமென்று தாமுமொரு தண்டாயுதத்தை யெடுத்துத்தாக்கி நெடுநேரமவனோடு சமராடினள் உடனே யவ்வரக்கனானவன் மெய்முழுதும் வெயர்த்து நடுக்கமடைந்து விண்டுவின் சக்கரமும் வாய்புதைத் தேவல் செய்யத்தக்க தனது சக்கராயுதத்தை விதிப்படி சோடசவுபசாரங்களுடன் பூசித்துக் கரகரவென்று சுழட்டி சீதாபிராட்டியையும் ஸ்ரீராமமூர்த்தியையுங் கண்டித்து வருவதாக வேண்டி வேகமாய்ச்செலுத்தினன் அது. அவ்வாறே நாற்றிசைகளினுஞ்சொலிப்பெய்த அளவற்ற தீப்பொறிகளை யிறைத்துப் பற்பல ஆயுதங்களைபடைச்சொல்லப்பட்டதாகவும் பாதங்களைக் காட்டிப் பிரசண்டமாருதமும் பயந்தொளிக்கும்படி வேகங்கொண்டு சீறிவர அதைச்சீதாபிராட்டி கண்டுதனது அம்புராத்தூணியிற் கரத்தைச்செலுத்தி நாராயணாஸ்திரத்தை எடுத்து அதைச் சக்ராயுதத்தை யறுத்தெரியும்படியாக மந்திரோபதேசஞ்செய்து விடுத்தனன் அவ்வஸ்திரம் வில்லினிடத்தினின்றும் வெளிப்பட்டு ஒன்றனந்தமாய்ப் பரவிச் சக்ராயுதத்தை பொருகவலமாய் முழுங்கிவிட்டது இப்பால் மகாபலவானானவன் வடவைக்கனலைத் திரட்டி வடித்து வைத்தாற்போலேவிளங்குந் தனது சத்திப்படையை விடுத்தனன் யெமதன்னையானவள்சந்திராயுதத்தை விடுத்துக்கண்டித்தனள் உடனேமகாபலவானானவன் விழிகளிலனற்பொறிபறக்கக்கோபித்துதனது அக்கினியஸ்திரத்தை அதிகவிரைவோடுஞ் செலுத்தினன் அதுகடலிலெழுதகடுவிஷத்தைப்பரவச் சீறியடைந்துவருகினுஞ் சீதாபிராட்டிதனது அக்கினியாஸ்திரத்தை விடுத்து அதனைக்கண்டித்தனள் பின்பு அரக்கன் பலதுண்டங்களாக அறுத்தெறிந்தனன் இவ்வாறு தனக்கருமையாக கிடைத்த அஸ்திரங்களெல்லாம் சீதாபிராட்டியா லழிந்துபோன

தைக்கண்ட மகாபலவான்செருக்கத்துப்பெறுமூச்செறிந்து மானமு
ங்கோபமும்மனதை வாதிக்கச்சர்பத்தைப்போலச்சீறி யினிஇந்தப்பெ
ண்ணைத் தேவாஸ்திரங்களினால் அதஞ்செய்யவேண்டுமென்று யோசி
த்தவனாய் வருணாஸ்திரத்தையெடுத்துத் தூபதீபநைவேத்தியமுத
லிய வுபசாரங்களைச்செய்து நீபோயிந்தசிறுபெண்ணையும் இவள்சே
னையையும் நாசஞ்செய்து மீளக்கடவையென்று மந்திரபூர்வமாய்
ப்பிரயோகித்தான் அந்தப்பாணமானது வெளிப்பட்டவுடன் சர்வச
ங்காரகாலத்தில் பரமசிவனுடையகடாட்சத்தால் உலகங்களை யழிக்க
சப்த சாகரங்களையு முடைத்துகொண் டெழும் பெரும்புறக் கடலை
ப்போலப்பெருக்கையுண்டாக்கி அலைகளைப் பெருக்கி யிடிகளைப்போ
லெதிர்த்துபுரண்டு அதிவேகமாய்வருவதை ஜானகியம்மன்கண்டு பி
ரளயவெள்ளத்தைச் சுவற்றத் தீட்சண்யமுள்ள அக்கினியாஸ்திரத்
தையெடுத்துவிட்டனள் அதைவிட்டமாத்திரத்தில் வானத்திலெழு
ந்து திருதிதுவென்றெறிந்து கொண்டு கொண்டல் கொண்டலாப்பு
கையைப்பெருக்கிச் சுவாலைகளை வீசிபனற்பொறிகளைக் கக்கியுலகங்
களை மூடியிருந்தசலத்தை நிமைபோதில் வறளவுண்டு விட்டது
அதைக்கண்ட மகாபலவானவன் ரௌத்ராகாரமாய்க் கோபித்து
த்துரிதமாய் வாயுவாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகித்தான் அது
வில்லிலிருந்து வெளிப்பட்டவுடன் ஊழிக்காலத்தில் பெரும் பிரச
ண்ட வாயுவைப்பெருகிச் சுழர்க்காற்றைப்போலவெங்கும்வீசி அக்கி
னியாஸ்திரத்தி னுடையவலியிணையாகிநிற்க அதைச்சீதாபிராட்டியா
ர்கண்டு விரைவில் நாகாஸ்திரத்தை யெடுத்து பிரயோகித்தனள்உ
டனேயது தேவர்கண்மயங்க உலகத்தைவிளக்குஞ்சூரியனுந்தியங்கி
வாடமேலிட்டு விசாலமாகிய படங்களை விரித்து விஷங்களைகக்கவல்
லபலகோடி சர்ப்பங்களை யுண்டாக்கி ஆலகாலவிஷமுமாகச்சீறி வாயு
வின் பெருக்கத்தையுங்கிரகத்துக்கு விஷச்சுவாலைபெருகப்பெருமூச்
செறிந்துவருவதை மகாபலவான்கண்டு கருடாஸ்திரத்தையெடுத்து
அபிமந்திரித்து அதிவேகத்தோடும் பிரயோகித்தான் அந்ததிவ்விய
பாணமானது வானத்திலெழும்பிச் சாங்கோப சாங்கமாய்க் கருடவு
ருவங்களைக்கொண்டு விசாலமாகிய சிவந்தசிறகுகளைவிரித்து ஆர்பா
டங்களைசெய்து போய்ச்சர்ப்பக்கூட்டங்களை மடக்கிகால்களிலிருக்கி
ன்ற கூரியதந்தங்களினாலேபிளந்து கொன்றும் மூக்கினாற் குத்திவா
ட்டியுஞ் சிறகடியினால் மாய்த்துத் திசையெங்கணுங்கூடியுங் கோப
மடங்காமல் புகைவரத்தமேலிட்டுவர அதை பெமதன்னை கண்டமா
த்திரத்தில்தமது ரிஷிபாத்திரத்தினை யெடுத்துப் பிரயோகித்தனடட
னே யப்பாணத்தை எடுத்துரிஞ்சின தூபதீப முதலிய சோடச வுப

சாரங்களையும்பக்திபூர்வமாகத்துதித்துவில்லிற்வட்டசாரமாய் பாண
மானது வலியகால்களையும்வச்சிரத்தையொத்ததுசாட்டும்நீண்டகொம்
புகளையுங் கொண்டு பெருமூச்சுவிட்டு அண்டகோளகையு மதிர்ந்து
நடுங்கும்படியாகச்சொர்ச்சித்துவண்டையங்கள் கலீர்கலீரென்றுசப்தி
க்கப்பட்ட சத்தங்களைப்பெயர்த்து வைத்துக் கருடாஸ்திரத்தின்வ
லிமையுஞ்செய்கைகளையும்இமைப்போதிலடக்கச்சத்துருவைச்சின்ன
பின்னப்படகண்டிப்பேனென்றுறுத்துவருவதைமகாபலவான்கண்டு
விரவில்யேமாஸ்திரத்தையெடுத்து மந்திரபூர்வகமாகவில்லிற்பூட்டிப்
பிரயோகித்தான் அந்தஅஸ்திரமானது அதிகமகிமைகளோடாற்பரி
த்துகொண்டு ரிஷபாத்திரமானது முன்னிலு மதிகமானஉர்பாதங்க
ளைக்காட்டிச்சமீபித்துவரும்போதுமகாபலவானவன் தன்னுடைய
வலிமையையும் வேகத்தையுங்கண்டுநறநறவெனப் பற்களைக் கடித்து
உதட்டைபிதுக்கிவிழிகளில் தீப்பொறிசிதறகோபித்துப்பிரமாஸ்திர
த்தையெடுத்துப்புசித்து வில்லிற்பூட்டிநீண்டசெவிபரியந்தமிழுத்துச்
செலுத்தினன் அந்தபாணமானது உடனேவானத்திற்சென்றுவடை
வைப்போலச்சிறிக் கொக்கரித்துக்கலகலவெனநகைத்துக்கணக்கிரந்த
பாணங்களைப்படைத்துப்பிரசண்டமாருதத்தை பெருக்கியுலகங்கள
னைத்துந்திடுக்கிட்டுநடுங்கும்படியதிக வேகத்தோடுவந்து சிவபிரானு
க்குவாகனமாகிய ரிஷபாத்திரத்தைக் கண்ட உடனேபயந்து கரங்க
ளைக்கூப்பித் தொழுதுபிழைத்தோம் பிழைத்தோமெனக்கூவிக்கொ
ண்டுதிரும்பியது அதைமகாபலவான்கண்டுகாலாந்தகனைப்போலக்கோ
பித்துஉடனேநரசிம்மாஸ்திரத்தை யெடுத்துசோடசவுபசாரங்களோ
டும் பிரயோகஞ்செய்தான் அதுவெளிப்பட்டமாத்திரத்தில்அளவற்ற
மரங்கைகளைவிளைத்துஎங்கும் இருள்மயமாகமூட்டி அதிசஉக்கிரத்து
டன் சர்ப்பத்தைபோற்சீறி வந்து ரிஷபாத்திரத்தோ டெதிர்த்து அ
ளவற்றயுத்தங்களைச்செய்துநிற்க அதைப்பிராட்டியார்கண்டுசர்ப்பத்
தினவடிவாகிய வீரபத்திராஸ்திரத்தை யெடுத்துப்பிரயோகித்ததுன்
உடனே அந்ததிவ்யாஸ்திரமானது வானத்திலெழுந்துசீறிட்டவைக்
கனலும் ஆலகாலமும்நடுங்கி அஞ்சத்தக்கதாகக்கொதித்து அதிவேக
மாய்வந்துமகாபலவான்போடுகின்ற நரசிம்மாஸ்திரத்தோடெதிர்த்து
அதனுடைய வீறுப்பை முற்றிலுமடக்கிதுரத்திவிட்டது இவ்விதங்க
ளாகத்தான் பிரயோகஞ்செய்கதேவதாஸ்திரங்களெல்லாம்பிரயோச
னப்படாமல் பின்னிடுவதை சீதாபிராட்டியினுடைய அஸ்திரங்கள்மீ
றியிருப்பதையும்மகாபலவான்கண்டுதிடுக்கிட்டுநிமைப்போதில் சராச
ரப்பிரபஞ்சங்களை எல்லாமிதித்துச் சாம்பலாக்கவல்லபாசுபதாஸ்திர

கவனித்துப் பிரயோகித்தனன் அதைச் சீதாபிராட்டியம்மனவள் கண்டமாத்திரத்தில் இதற்கு வீரபத்திராஸ்திரம் எதிர்நிற்கமாட்டாதென்று நிதானித்து துரிதமாய் தன்னிடத்திலிருக்கின்ற பாசுபதாஸ்திரத்தையெடுத்து மானதபூசையினல் பலவுபசாரங்களையும் நிறைவேற்றி அந்தப்பாதகன்விடுக்க பாணத்தினுல்உலகங்கட்கு யாதொரு துன்பமும் நேரிடாதபடிபாதுகாப்பதுமல்லாமல் அவன்விட்ட பாணத்தையும் தும்சப்படுத்தி திரும்பிவாவென்றுசொல்லி மந்திரபூர்வமாகப் பிரயோகித்தனள் உடனே பாசுபதாஸ்திரமானது பலமகிமைகளோடு அதிகவேகத்துடன் சென்றெதிர்த்துப் பிரசண்டமாருதத்தையொருபுரத்தி லெழும்பியும் வடவாமுகாக்கினியையொருபுறத்திலே காட்டியும் ஆலகாலவிஷத்தை யொருபுறத்திற் பெருக்கியும் கோபாக்கினியையும், புகைப்படங்களையும் ஒருபுரத்திற் உண்டுபண்ணியும் பூதபிசாசு டாகினி முதலியவருக்கங்களை யொருபுரத்திற் சிருஷ்டித்தும் தோமரம்-பிண்டிப்பாலம்—கப்பணம்-முசல்-சக்கரம் எழு மழு தண்டம் ஈட்டி எறிவேல் முசுண்டி கவண் காஞ்சில் இருப்புலக்கை முத்தலைச்சூலம் வச்சிரம் வேல்வாள்முதலிய ஆயுதங்களை என்றனத்தம் வீசியு மேருமுதலிய அஷ்டபர்வதங்கள்பிளக்கவும் நட்சத்திரங்கள் நெற்பொரிகளைப்போலுதிரவும் சூரியன் ரதம் சந்திரன் விமானமும் பங்கப்பட்டுச்சிதறவும் அஷ்டயானைகள் தாபரிக்க மாட்டாமல் லால்களைத்தூக்கி வீறிட்டோடவும் வடவானலும் வெப்பத்தையடங்கிப்பதுங்கவும் கீழுலவடுக்குகளும் மேலுலக வடுக்குகளுங் கலைந்து மாருபடவும் சகலசராசரங்களும் திடுக்கிட்டு மயங்கவும் வானத்தில் வேடிக்கை பார்த்திருந்த தேவர்களும் முனிவர்களும் திகைத்துப் பயந்து திசைதப்பியோடவும் பூமியைத் தாங்கியிருக்கின்ற கூர்மமும் சேடனும் நெருங்கியோடவும் சத்தமேகங்களும் கலங்கிகாற்றிற்பஞ்சுப்போலப் பறக்கவுமான இவ்வித உற்பாதங்கள் விளைத்து மகாபலவான்விட்ட பாசுபதாஸ்திரத்தை அதஞ்செய்து வானங்களொழிய மற்றராட்சதர்களை தும்சப்படுத்தி திரும்பி சீதாபிராட்டியாருடைய திவ்வியகாத்தில் வந்துசேர்ந்தது.

இப்பால் மகாபலவானுனவன் தான்பிரயோகித்த அஸ்திரங்களெல்லாம் நொருங்கி விழுந்ததைக்கண்டு திகைத்து தன்னைச் சமுத்திரம்போலச்சூழ்ந்த ரதகஜ துரகபதாதிகளைக் காணுதவனுய் ஏங்கிகணப்போதில் சராசரப் பிரபஞ்சங்களைத்தகித்துச் சாம்பலாக்கவல்ல படைகட்கரசாகிய பாசுபதாஸ்திரத்தைப் பிரயோகித்தும் அதுபகைவரைச் செயங்கொள்ளாமல் அபலமாகத் திரும்பிவந்து விட்டது இனிச்செலுத்துவதற்கு அதனிலுஞ் சிறந்த பாணமென்னவிருக்

கின்றது பொருந்திவந்த சேனைகளெல்லாம் அவனியமாக இந்தச்சி
றுப்பெண்ணுக்குச் சாகக்கொடுத்து ஏகினன்பார் ஒருவருமில்லா
மல் ஏகாந்தியாயிருக்கிறோம் இந்த மங்கையோ சகலசேனைகளோ
டும் வீறியிருக்கின்றனள் இவள் நம்மைவிட்டு நீங்கமாட்டாள் ஆத
லால் அவளுக்கு முன்னே நாம் ஓடிப்பதுங்குவது உத்தமமென்று
நினைத்து தனது மாய்கையினால் யாவருங்காணாதபடி அப்போர்க்கள
த்திலிருந்து மறைந்தனன் சீதாபிராட்டியும் இராட்சதன் மறைந்து
போனதையறிந்து இனியவன் வரும்போது இவ்விடத்தில் வந்தெதி
ர்ப்போமென்று யோசித்து சகலமுனிவர்களும் வசித்திருக்கின்ற
ஆரணியத்தில் சகல சேனைகளோடும சென்றிறங்கினள் அத்தருண
த்தில் சூரியனானவன் கொடியஇராட்சதராற் செய்யப்பட்டசண்டை
யினாலுண்டான அசுசத்தை நீக்கிக்கொள்ளுவான்போல் தனதுவா
னாகிய வீதியைக்கடந்து சிவபிரானுடைய திருமேனியைப்போலச்
சிவந்து பிரகாசிக்கின்ற மேற்றிசைக்கடலில் மூழ்கிக் குளித்தனன்
உடனே மாலைக்காலமானது கறுத்த புகையினைப்போல் இறுண்டு
புவனமெங்கும் பரவினது.

அஃதெப்படியிருந்த தென்றால் கொடியபாதகராகிய இராட்
சதர்கள் வடிவங்களையும் அவர்களாலுண்டாக்கப்பட்ட மாய்கைகளை
யும் அவர்கள் செய்துவருகின்ற பாவங்களையும் ஒத்திருந்தது இப்
பால் போர்முகத்தைவிட்டு அபசெயமடைந்துசென்ற மகாபலவா
னானவன் சதகண்டனிடத்திற்கு வந்துபணிந்துநிற்க அவனை அந்
தசதகண்டன் பார்த்துச்சொல்லுவான் பிள்ளாய் இன்று காலையில்
இவ்விடத்திலிருந்து சென்றபோதுண்டாயிருந்த முகவிலாசத்தினை
இப்போது காணவில்லை ஆலைவாயிற்பட்ட கரும்பைபோல் உனது
சரீரமெல்லாம் நொறுங்கி வந்தனை பராக்கிரமத்திற் சிறந்த நமது
சேனைகளை எல்லாம் பகைவர்கள் கையால் சாகக்கொடுத்து நீயு
ம்புறங்காட்டிவந்தாய் வீரர்களானோர்க்கு ஆண்மையுண்டாகுமோ
யாவராலுஞ் சாகாதிருக்கத்தக்க பலமான சரீரத்தை வரத்தினையுமு
டையநீயோ ஒரு சிறுபெண்முன்னெதிர்த்து யுத்தஞ்செய்ய மாட்
டாமல் திரும்பிவந்தாயென்றால் உலகஞ் சிறியாதா மகாபராக்கிரம
சாலியாகிய உனது சரீரத்திலிருந்து உரத்தத்திவலைகள் சிந்தினால்
ஒவ்வொருதிவலைக்கு உன்னைப்போ லொத்தவீரர்கள் அளவற்ற
போதுண்டாகும்படியான மகத்துவத்தை நீபெற்றிருக்கின்ற உன்
னைக் கொல்லவல்லவர்கள் உலகத்திலிருக்கின்றார்கள் உனது புத்தி
மயக்கத்தால் உன்னுடைய பராக்கிரமம் உனக்கே தெரியவில்லை நீ
பெற்றிருக்கின்ற வரங்களை நான் பெற்றிருப்பேனானால் எதிர்த்த சத்
துருக்களை உயிரோடுவிட்டு மீண்டுந்திரும்பி வருவேனோ இவ்வளவி

லாவது எனது கவலையையொழித்து இன்றையதினம் இறந்துபோன சனங்கள்போக மற்றசேனைகளையும் இருக்கின்றசேனைகளையும் நாளை விடியற்காலையில் அழைத்துக்கொண்டுயுத்தத்திற்குப்போகக்கடவை யென்று சொல்லினன் அவையனைத்தையும் மகாபலவான்கேட்டு சத கண்டனைப்பணிந்தெழுந்து அண்ணலே தேவரீரிட்டருளிய கட்டளை யின்படியே உதயகாலத்தில் யுத்தத்திற்கு செல்லுகின்றேனென்று சொல்லி விடைபெற்று அன்றிரவு முழுதும் நித்திரைசெய்யாமல எப்போது அருணோதயமாகுமென்று எதிர்பார்த்திருந்தான்.

இப்பால் சூரியனானவன் தனது தேரினை செலுத்திக்கொண்டு கீழ்த்திசைக்கடலில் உதயமாயினன்உடனே முன்னாளைப்போல இவ் வளவென்றெண்ணுதற்கரியசேனைகளோடு மகாபலவான் யுத்தகளத் திற்குவந்தனன் உடனே சீதாபிராட்டியும் தனது ரதத்தை யுத்தக ளத்திற்குக் கொண்டுபோகும்படி ஆக்கியாபித்து நால்வகைசேனை களும் கடல்போலப் புடைசூழ்ந்து வரவும் பேரிக்கைமுதலிய வா த்தியங்கள் மேககர்ச்சனையைப்போல்முழங்கவும் கொடிகுடை முத லியசின்னங்கள் நாலுபக்கத்திலும் நெருங்கவுமாக யுத்தகளம் வந் துசேர்ந்தனள் அப்போது மகாபலவானுடைய சேனைகளும் அனே கபர்வதராஜர்களெதிர்ப்பதுபோல சிலராட்சதர்கள் அவ்வவ்தேர்வரி சைகளிலும் யானைவரிசைகளும் ஏறிவந்தார்கள்.

அனேக சமுத்திரங்கள்மீது அனேக வடவாமுகாக்கினி எதிர் ப்பதுபோல சிலராட்சதர்கள் அளவற்ற குதிரையின்மீதேறி வந் தெதிர்த்தார்கள் அநேக ஆலகாலவிஷங்கள் அனேகரூபங்கள் கொ ண்டு வருவதுபோலச் சிலராட்சதர்கள் அளவற்ற ஆயுதங்களோடெ திர்த்தார்கள் இவ்வாறு எதிர்த்து நிற்கின்ற இராட்சசவீரர்களின் பேரில் வானரவீரர்கள் பாய்ந்து நகங்களினாலும் நீண்டபற்களினா லும் புஜங்களினாலும் மற்றமுள்ள அவயங்களினாலும் தாக்கியும் பகைவர்கள் விடுகின்ற பாணங்கள் தங்கள் சரீரத்தில் வலதுதைக்கு முன்னமே அவைகளைகையினால் பிடித்துசிவந்து அப்பகைவர்களின மீதெறிந்தும் சிலர்வாயிலிட்டு மென்றுமிழ்ந்தும் சிலர்யானைகள் மீதே தாங்கிஅவைகளின் மத்தகங்களைப்பிளந்து சிலர் தேர்களைத்தூக்கி தே ர்களின்மீதேதாக்கி அவைகளை முறித்தும் சிலர் குதிரைகளை யடி த்துக் குதிரைகள்மேலேதாக்கி அவைகளைக்கொன்றும் சிலர் பதா

திவீரர்கள் மீதேதாக்கிஅவர்களைநசித்தும் சிலவானரர்கள்எதிர்த்து வந்த இராட்சதர்களை வாட்ட ஆகாயத்திலெறிந்தும் தரையிலேமோதினார்கள் கால் கைகளினால் மிதித்துத் தேய்த்தும் சிலர் தலைகளைத்திருகிக்கோத்து மாலையாகத்தரித்து மாசிலாஉதித்தமொழுகும்படியாகப்பிழிந்தும் சிலர்கரத்தால் யானைகள் வீறிடும்படியாக கன்னத்திலறைந்தும் மற்றொருகரத்தால் கொம்புகளைப்பிடுங்கி எதிர்த்தவர்களைக்குத்தியும் யுத்தஞ்செய்கின்றபோது மகாபலவானுடைய சேனைகட்கும் சேனைதலைவர்கட்கும் கோபமுண்டாகி கோடையிடிகளைப் போலக்கர்ச்சித்து எழு-மழு-வாள்-கதை-சக்கரம்-வேல்முதலிய ஆயுதங்களை யொன்றனந்தமாக வீசி ஓர்நொடிப்போதில் வானரசேனைகளை சின்னாபின்னப்படவாட்டினார்கள்.

இப்படி இருதிறப்படைகளும் கைகலந்து போர் செய்யும்போது அளவற்ற பிணங்கள் மலைமலையாகக் குவிந்தனவைகளினின்றும் பெருகிய உதிரமானதுவெள்ளமோடிகடற்பாய்ந்தது அந்தச்சமயத்தில் வானரசேனைகள் இராட்சசசேனைகட்கஞ்சி முறிந்து ஓடிப்போகஅதைச் சீதாபிராட்டிகண்டு விழிகள்கொவ்வைக்கனியை ஒத்து அதிகவேகமாகவில்லினைவளைத்து அளவற்றபாணங்களை யொன்றனந்தமாகச்சொரிந்து ஆர்ப்பரித்தனள் அவள்விட்ட பாணங்களினால் அனேகரதங்களும் யானைகளும்-குதிரைகளும்சேனைகளும் முறிந்தும் மடிந்தும் சிதைந்து மாய்ந்தன.

அனேகவீரர்கள்-சிரம்-புயம்-மார்பு முதலியவைகள்நசிந்துண்டவர்களும் பிணங்களும் பீறிடும்படியாக வீழ்ந்தார்கள்.

இராட்சதவீரர்கள்விடுகின்ற பாணங்களைச் சீதாபிராட்டி விடுகின்ற பாணங்கள் தடுப்பதினால் சிலதுமுறிந்துபூமியில்வீழ்ந்தும் சிலது அப்பூமியைப்பிளந்து கொண்டு நாகலோகத்திற்பாய்ந்தும் சிலதுதிக்காலொன்றோடி யொளித்துப்போயின பின்னும் தேவர்களெல்லாங்கண்டு சந்தோஷமடையவும் படியாக சீதாபிராட்டி விடுகின்ற பாணங்கள் இராட்சத வீரர்களுடைய தலைகள் புசங்கள் கைகள் காங்கள் முதலானவைகளைத் துண்டந்துண்டமாக அறுத்து மேருமலை முதலியமலைகளுடனும் சமுத்திரங்களிலும் சூரியலோகம் சந்திரலோகமுதலிய உலகங்களிலும்போய்விழும்படியாக எறிவதல்லாமல் அவ்

வீரர்களுடையமனைவியரும் தங்கள்கணவர்களோடு அரம்பைமாதர் களாகச்சென்றுவசிக்கும்படியாக அவரவர்கள்வீட்டில் அவரவர்களுடைய பெயர்களை எழுதியிருக்கின்ற முத்திரை மோதிரங்களோடு கரங்களையும் தலைகளையும் கொண்டுபோய் வீசினபின்னும் அளவற்ற ராட்சதர்களைச் சின்னபின்னப்படவாட்டி நிணம்-தசை-மூளை-குடர் முதலானவைகளை இடைவிடாமல் அறுத்தெரிகின்றமையால் மலைகளிலிருக்கின்ற நாய் நரி கழுகு காக்கை முதலியவைகளும் அந்தச் சமர்க்களத்திற்சூழ்ந்து விருந்துண்ணவந்தன.

அப்போது இராட்சசேனைகளில் அளவற்றபேர்கள் மாய்ந்தும் அளவற்றபேர்க ளோடிப்பதுங்கியும் ரணக்களத்தில் ஒருவருமில்லாதிருப்பதை மகாபலவான்கண்டு பிரளயகாலத்தெழுந்த வடவாமுகாக்கினியைப்போலக் கொதித்துத் தனது மோகனாஸ்திரத்தை யெடுத்து வில்லிற்பூட்டி மந்திரபூர்வமாகப் பிரயோகித்தான் அந்த அஸ்திரத்தினால் வானரவீரர்களிற் சிலர் மூர்ச்சையாய் விழுந்தனர் அதைக்கண்ட மகாபலவான் இப்போது இந்தக்கன்னிகை தனியாயிருப்பதால் இவளோடு யுத்தஞ்செய்து வெல்வதற்கு இதுதான் தக்க வேளையென்று தனக்கு நிச்சயித்து ஏகமுகத்தில் அளவற்றபாணங்களைப் பிரயோகித்தான் அவையனைத்தையும் சீதாபிராட்டி இராமபாணங்களாலறுத்தெரிந்து அந்த மகாபலவானுடைய மார்பிலும் தோளிலும் துடையிலும் காலிலும் அநேகபாணங்களைக் குறிபார்த்துப் பிரயோகித்தனள்.

அந்ததிவ்வியாஸ்திரங்கள் ஒன்றனந்தமாகப் பெருக்கி மகாபலவானுடலிற்பாய்ந்து சல்லடைக்கண்களாகத் துளைத்து அவன்சேனைகளையும் சின்னபின்னப்பட வாட்டின அப்பொழுது மகாபலவான் தனதுசேனைக்கிக்கிசைந்து போனதைக்கண்டு மனம்பொறாதவனாகி யானைக்கூட்டத்தில் சிங்கவேறுபுகுந்தாற்போலக் கர்ச்சித்தனன் அந்தக்கர்ச்சனையடக்கமாகும் மோகனாஸ்திரத்தினால் மூர்ச்சையாகிவிழுந்த வானரவீரர்களெல்லாம் எழுந்து அட்டகாசஞ்செய்து கர்ச்சித்து—கதை-தடி-வளை-மழுமுதலியபடைகளை எறிந்தும்அளவற்ற சரவருஷங்களைப்பொழிந்து நீண்டசூலாயுதத்தைவிடும் இராட்சசவீர்களைச்சின்ன பின்னப்படுத்தினர்கள் அதனால் மகாபலவானுடையசேனைகளில் சிலர் தலைகள்பிளந்தும் சிலர்கைகள் முறிந்தும் சிலர் துடைகள் விரிந்து சிலர் இடைகளொடிந்தும் சிலர் கைக ளறுந்

றும்-சிலர்குடல்கள் சரிந்தும் சிலர் மூளைகள்சிதறியும் இவ்வாறுரணக்களமெங்கும் பலர்காயங்களால் விழித்தும் இறந்தும் களைத்தும் வருந்தினர்.

அப்போது உதிரமானது பெருத்த பூரணப்பிரவாகமாயோடுகிறநதியைப்போல் இரைச்சலிட்டுப் பெருகியது அமர்க்களமெங்கும் கழுகுகள் கூளிகள் - நாய்கள் - நரிகள் - பேய்கள் முதலிய செந்துக்கள் கூட்டங்கூட்டமாய்வந்து பிணங்களைப் பிடுங்கித் தின்னுவதுங் கூவுவதுப் ஊளையிடுவதுங் கூத்தாடுவதுமாயின அதைக்கண்ட மகாபலவான் பற்களை நெறநெறவெனக் கடித்து சீதாபிராட்டியின்மீது அனேகதிவ்வியாஸ்திரங்களைப் பிரயோகித்தான், அவ்வஸ்திரங்கள் ஒன்றோடொன்று நெருங்கிவருவதை எமதன்னையாகிய சீதாபிராட்டிகண்டு பின்முறுமுதல செய்து தனது வில்லினிடமாக இராமபாணங்களை எடுத்துத் தொடுத்துவிடுத்தாள் அந்தபாணங்கள் ஒன்றோடொன்றுநெருங்கி இரைச்சலிட்டு நெருப்புப்பொறிகளைக் கக்கிக்கொண்டுவந்து எதிர்நின்ற அஸ்திரங்களைக் கண்டித்துத்தள்ளி விரைவில்வந்து மகாபலவானுடைய ஐம்பது சிரசையும் நூறுகரத்தையும் அறுத்துத்தள்ளி சமுத்திரத்திற்போய் ஸ்நானஞ்செய்து சீதாபிராட்டியம்மனுடைய அம்புறுத்தூணியில் வந்தடைந்தது அப்போது மறுபடியுஞ் சீதாபிராட்டி அக்கினியாஸ்திரத்தை விட்டு மகாபலவானுடைய யானைகுதிரை தேர்காலால் மற்றும் படைத்தலைவர்களையெல்லாஞ்சம்மாரஞ்செய்து பஸ்மீகரமாய் எரித்துவிட்டு சீதாபிராட்டியம்மனுடைய அம்புறாத்தூணியில் வந்தடைந்தது அந்தவிசேடமெல்லா மறிந்தவர்களான இருவர்கள் தப்பித்துக்கொண்டு கெட்டோம்பிழைத்தோமென்று ஓடிவந்து சதகண்டன்கொலுவாயிருக்கின்றசமயததில் மகாபலவானை யுத்தத்திற்குப்போனதுஞ் சீதாபிராட்டியம்மன் மகாபலவானையுஞ் சேனைகளையும் சங்கரித்தவிசேடமெல்லாம் ஆதியோடந்தமாகச் சொன்னார்கள் அந்தவிசேடத்தை சதகண்டன் கேட்டவுடனே அதிகவிசனப்பட்டுக் கொண்டிருக்கிறசமையத்தில் அவன்தம்பியாகிய மகாமாயனென்கிறவன சாஷ்டாங்கமாக தெண்டன்சமர்ப்பித்து கைகட்டிவாய்புதைத்து சொல்லுகிறான்.

வாருமையாசுவாமி பூலோகத்தில்கங்கைதேசமென்றொருதேசமுண்டு அந்ததேசத்தை அரசாட்சிசெய்கின்ற தசரதமகாராசனென்கிறவருண்டு அவர் சூரியகுலத்தாரில் தெய்வப் பிரகாசமுள்ளவர் அவர்முற்காலத்தில் சாமபசூரனென்கிறவன் தேவேந்திரனைத துரத்திவிட்டு தெய்வலோகத்தைக் கொள்ளையிட்டவன் அப்படிப்பட்ட

வல்லமையுள்ளவனை தசரதமகாராசன் சங்கரித்துவிட்டார் அவருடைய புத்திரர்கள் ஸ்ரீரகுநாயகரென்றும் இலட்சுமணப் பெருமாளென்றும் பரதமகாராஜனென்றுஞ் சத்துருக்க மகாராசனென்றும் அவதாரமாய்ப்பிறந்து இராவணன் கும்பகர்னன் இந்திரசித்து அதிகாயன் மகாபலவான் முதலான அரக்கர்களையெல்லாஞ் சம்மாரஞ்செய்து அவன்சகோதரனாகிய விபீஷணரானவர் சுவாமியாருடையபாதத்தில் சரணாகதியென்று அவரருகில் வந்து சேர்ந்தபடியால் அவருக்கு லங்காபுரியைப்பட்டங்கட்டி அவரையுஞ் சிரஞ்சீவியாயிருக்க வரங்கொடுத்தார்கள் அப்படிப்பட்ட ஸ்ரீரகுநாயகர் தேவியானவள் மகாலட்சுமி உருவமுள்ளவள் இராட்சத வம்சங்களைகருவறுப்பதற்குப் பூமியில்வந்து உற்பவித்திருக்கிறாள் அந்தச் சீதாபிராட்டியம்மன்பாதத்தில் விழுந்தால் அவள் கிருபாகடாட்சத்தினால் இப்போதுமாண்டவர்கள்போக மற்றவர்கள் சுகமாயிருக்கலாமென்று மகாமாயன்சொல்ல அந்தச்சதகண்டன் கேட்டமாத்திரத்தில் அதிககோபம்பிறந்து கண்கள்சிவக்க உருட்டி விழித்துப்பார்த்து நெருப்புபொறிபோலசிறி அக்கினிமூச்செறிந்ததுபோல் சொல்லுவான்.

நம்முடைய இராட்சதவம்சங்களில் இல்லாதயோசனை சொல்லவந்தாய் நீயுத்தஞ்செய்வதற்குப் பயப்பட்டுச் சொல்லுகிறாய் நீயிந்தயுத்தத்திற்குப் போகவேண்டாமென்று சொன்னான் அப்போதுமகாமாயன்சொல்லுகிறான் வருவதுவந்தால் படுவதுபட்டுத் தீரவேண்டும் ஆகையால்இதோநான் யுத்தத்திற்குப் போறேனென்று சொல்லி அரண்மனைக்குப்போய் அவருடைய சேனைகள் இரதகஜதுரகபதாதிகளும்பிரயாணப்படும்படி பேரிகை முழக்கிவைத்தான் இரண்டாநாள்காலையில் மகாமாயனானவன் அருபதுசிரசும் நூற்றிருபதுகரமுமுடையவன் இவன் இரதத்திற்கு நாலாயிரங்குதிரை கட்டியிருக்கப்பட்ட அதைத்தேர்பாகன்கொண்டுவந்து முன்னேநிருத்தினான் அந்த இரதத்தின்பேரிலேறிக்கொண்டு பின்னும் நாளாயிரவெள்ளம்யானைகளும் நூறுவெள்ளங் குதிரைகளும் இராண்டாயிரம்வெள்ளம்யானைகளும் நூறுவெள்ளங்குதிரைகளும் இரண்டாயிரம் வெள்ளஞ்சேனைகளுஞ் சகலஆயுத சவரட்சனையுடன் புறப்பட்டு பாசறைக்குவந்தான் அப்போது பேரிகைவாத்தியங்கள் முழங்க அந்தச்சங்கதிகளை அனுமார்கேட்டு மகாமாயன் சொல்லுவான் வாரும் அனுமந்தரே நீமகாபுண்ணியவான் சற்புத்திரன் உத்தமபுருடனாகையினாலே உம்முடனே ஒருவார்த்தை சொல்லுகிறேன் கேளும் அது

யெப்படியென்றால் ஸ்ரீரகுநாதருடைய தேவியாகிய சீதாபிராட்டியம் மனுடைய பகை நமக்குவேண்டாம் வேண்டாம் அவர்களுடைய பாதாரவிந்தத்தை தெரிசனஞ் செய்தால் சுகப்படலாமென்று என்னுடைய தமயனுக்கு வேண்டியமட்டுஞ் சொன்னேன் அதற்கு அவர் சம்மதிபடாமல் யென்பேரில் கோபஞ்செய்துகொண்டார் ஆகையால் யுத்தத்திற்குவந்தேன் மேலும் அவனுடைய அன்னத்தைப்புசித்து சமயத்தில் காட்டிக்கொடுத்து வஞ்சனை செய்தால் பாவமேயொழிய தருமமல்ல ஆகையால் சீதாபிராட்டியம்மன் அஸ்திரத்தினால் அடிபட்டு அந்த அம்மனதுபாதத்தில்விழுந்துபோனால்வீரசொர்க்கப்பதவியுண்டாக்கத்தக்கதாக வரங்கொடுக்க வேண்டுமென்று சொன்னான் அப்படிசொல்லிய மகாமாயனை ஆஞ்சநேயர்பார்த்து மகா சந்தோஷப்பட்டு அவர்தாயாரருகிற்போய்ச் சேவித்துக்கொண்டு பயபக்தி விசுவாசத்துடனே ஒருவிண்ணப்பஞ் சொல்லுகிறேன்கேளும் அம்மாதாயேயென்று சொல்லுகிறார் இப்போது யுத்தத்திற்கு வந்திருக்கிறவன் அந்த இராவணனுடைய சகோதரன் அவன்பெயர் மகாமாயன் அவன் விஷ்ணுபக்தன் ஆகையால் அவன் உன்கைப்பாணத்தினால் விழுந்தால் அவனுக்கு வீரசொர்க்கம் பதவிகிடைக்கவேண்டுமென்று சொன்னானாகையால் நீயெனக்கு ஒருவரங்கொடுக்கவேண்டுமென்றுகேட்க அப்போது சீதாபிராட்டியம்மன் அதிக சந்தோஷப்பட்டு உனக்கு என்னவரம் வேண்டுமென்றுகேட்க அப்போது அனுமார் சொல்லுகிறார் அவன்யுத்தஞ்செய்கிறபோது அவனுக்கு ஐம்பத்தொன்பதுசிரசும் நூற்றுபதினெட்டுகையும் அறிந்தறிந்துவிட்டு ஒருசிரசும் இரண்டுகரமுமாயிருக்கவும் மறுபடியும் அவன் பட்டத்திற்போயிருக்கத்தக்கதாகச் செலவுகொடுங்களென்று வுத்திரங்கேட்டார்.

அப்போது சீதாபிராட்டியம்மன் கேட்டு மிகவுஞ் சந்தோஷப்பட்டு அப்படிதானே வரங்கொடுத்தேனென்று செலவுகொடுத்தாள் இப்படியாயிருக்கச்சே மகாமாயன் ஆயிரஞ்சிங்கங்கட்டிருக்கப்பட்ட இரதத்தின்பேரில் ஏறிக்கொண்டு ஈரேழுபதினாலு லோகமும் அதிரத்தக்கதாக ஆகாயத்தில் வந்து நின்றுக்கொண்டு ஸ்ரீரகுநாயகருடைய பாதாரவிந்தத்தை தோத்திரஞ்செய்வதற்கு ஒருபாணமுஞ்

சீதாதேவியம்மனின் பாதாரவிந்தத்திற்கு ஒருபாணமும் இலட்சுமணர்முதலிய ராசர்களுடையபாதாரவிந்தத்திற்கு ஒருபாணமும் ஆக மூன்றுபாணமுஞ் சீதாதேவியம்மன் பாதாரவிந்தத்திற்கு நமஸ்கார தெண்டஞ்செய்து வரவேண்டுமென்று விட்டுவிட்டான் அந்தப்பாணம் மூன்றும் அவரவர்கள் பாதத்திற்கு பிரதட்சண நமஸ்காரஞ் செய்து நமஸ்கரித்துப்போய்விட்டது. இந்தவிசேடமெல்லாம் அனுமார் சொல்லக்கேட்டு சகலருஞ் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார்கள் இப்படியிருக்கச்சே இரணக்களத்தில் வந்திருந்தவர்கள் அவரவர்கள் கையிலிருக்கிற அஸ்திரங்களையெல்லாம் பிரயோகஞ் செய்தார்கள் சீதாபிராட்டியம்மன அந்த அஸ்திரங்களை யெல்லாமறுத்து அக்கினியாஸ்திரத்தினால் அவன்பின்னால்வந்த ரதகஜதுரகபதாதிகளையெல்லாம் அஸ்தமானவரைக்குஞ் சஞ்சரித்து மகாமாயன் இரதத்தையும் ஓம்ரபாணத்தினால் அச்சுவேறு ஆணிவேறு குத்துக்கால்வேறு கொடி கொடிச்சீலையுமறுத்து இரதத்தையும் உடைத்துப் போட்டான் அப்போது மகாமாயன் பநாதியய் நிராயுதனாய் பூமியில்நின்ற அவன்கையிலிருந்த அஸ்திரங்களினாலும் பாணப்பிரயோகத்தினாலும் யுத்தம்புரிந்தான் அவன் பிரயோகஞ்செய்கின்ற அஸ்திரங்களெல்லாஞ் சீதாபிராட்டியம்மன் நடுப்பாதியிற் கண்டுவிட்டு மறுபடியும் ஒருபாணத்தை தொடுத்து மகாமாயன் சிரசுஐம்பத்தொன்றும் நூற்றுப்பதினெட்டு கரமு மறுத்துவிட்டாள் அதற்குள் சூரியனஸ்தமனமாயினான்.

அந்தகாரமான இருள்வந்து மூடிக்கொண்டது அப்போது மகாமாயன் நிராயுதனாய் நிற்கின்றபடியால் இதென்னமாயமோ வென்றுமனதில் எண்ணிக்கொண்டு புறப்பட்டுக் கோட்டைக்குள்போய் ஒருசிரசும் இருகரமுமாய்ச் சதகண்டனெதிரில் நின்றுநடந்த விசேஷமெல்லாஞ்சொல்லி இனிமேல் அவர்கள்பேரில் ஆயுதமெடுப்பதில்லையென்று உறுதிகூறி தன்னரண்மனைப்போய்விட்டான்.

இந்த விசேடமெல்லாங்கேட்டுச் சதகண்டனானவன் மிகவும் விசாரப்பட்டுக்கொண்டிருக்கிற சமயத்தில் அவன்புத்திரன் அக்கினிக்கண்ணனென்பவன் தகப்பனருகில் சாஷ்டாங்கமாகத் தெண்டஞ்சமர்ப்பித்து கைகட்டி வாய்பதைத்து அஞ்சலிசெய்து சொல்லுகிறான் நீரிப்படி விசாரப்படவேண்டிய காரணமென்ன எனக்கு யுத்தஞ்செய்வதற்குச் செலவுகொடுத்தால் அந்த ஸ்ரீரகுநாயகர் இலட்சுமணர் முதலியவர்களையுஞ் சீதாபிராட்டி யம்மனையும் பின்கட்டாய் பிடித்துக் கட்டிக்கொண்டு வருகிறேன் செலவுகொடுமென்று கேட்டான்.

அப்படியே செலவுகொடுத்தார் மூன்றுநாட்கலையில் முப்பது

சிரசையுடைய அக்கினிக்கண்ணன் எழுந்து தன்னுடைய நூற்றைம்பது வெள்ளஞ்சேனைகளும் இருநூறுவெள்ளம் யானைகளும் நூறுவெள்ளங் குதிரைகளும் ஐந்நூறுவெள்ளம் இரதகஜ துரகபதாதிகளும் சதுரங்கபலசேனைகளும வரும்படி கட்டளையிட்டான் அச்சணமேசாரதியும் இரதத்திற்குக்கவசனைவாக்கி சகலவிருதுகளுந்தைத்து அலங்காரஞ்செய்து இரதத்திற்கு ஆயிரஞ்சிங்கத்தைப் பூட்டிக்கொண்டுவந்துநிறுத்தினான் அந்தவேளையில் அக்கினிக்கண்ணன் சகல ஆடையாபரணங்களும் அணிந்துகொண்டு முப்பதுசிரசுக்கும் நவரத்தினம்பதித்துச் சூரியப்பிரகாசம்போலவிளங்கும் தங்கக்கிரீடத்தைதரித்து மார்புக்கு மோகனமாலை கண்டசரப்பளி முதலானதெல்லாந் தரித்துக்கொண்டு கைகளுக்கு அஸ்தகடகமும் விரல்களுக்கு கணையாழிமோதிரமுஞ் செவிகளுக்கு நவசகுண்டலமுந் தரித்துச் சகலவிருதுகளும் அஸ்திரங்களு மெடுத்துக்கொண்டு இரதத்திற்கு முன் பிரதட்சணமாய்வந்து இரதத்திலேறிக்கொண்டு மந்திரிகள்சூழ கட்டியக்காரர் எச்சரிக்கைசொல்ல இரதத்தின் திண்டின்பேரில் சாய்ந்துகொண்டு இரதகஜதுரகபதாதிகளும் சூழ்ந்துவரவேமுப்பத்திரண்டு மலைவாயிலுங்கடந்து கோட்டைக்கு வெளியிலே வந்து பாளையமடங்கலுமிரங்கினார்

அந்தவிசேடத்தை ஆஞ்சநேயர் அறிந்து எதிரில்வந்து விசாரித்து சீதாபிராட்டியம்மனுடன சொல்லி நமஸ்காரம்பண்ணி தாயேயிதோ திரிகண்டனுடைய குமாரன் அக்கினிக்கண்ணன் வந்திருக்கிறான் அவன் பொல்லாத சண்டாளனென்றுசொன்னார் இதைக்கேட்ட சீதாபிராட்டி சந்தோஷத்துடன் அனுமாருக்கு தயிரிய வசனங்களைச்சொல்லி வில்லை வளைத்து நாணேரிட்டு அக்கினிக்கண்ணனுனுடைய சேனையிற்பாய்ந்து சரமாரிபொழிந்தாள் வானர சேனைகளும் இராட்சச சேனைகளும் கைகலந்து போர்செய்தார்களதைக் கண்ட ஆஞ்சநேயர் இராட்சசசேனைகளில் பாய்ந்து சிலரை ஆகாயத்திலெறிந்தும் சிலரை தரையிலெறிந்தும் சிலரை மரங்களினாலடித்தும் சிலரை தேர்களின்மீது தாக்கியும் சிலரை பற்களினால் கடித்தும்சிலரைக் காலினால் நசுக்கியும் அதாஅதப்படுத்தினார் அதை அக்கினிக்கண்ணன் கண்டு மனந்தாளாமல் தனது ரதத்தை நடத்தியும் வானரசேனைகளின்மீதுபாய்ந்து சிலரைவெட்டியும் சிலரைக் குத்தியும் சிலரை ஆகாயமார்க்கத்திலே எறிந்துஞ் சிலரைமோதியும் சிலரைப்பிடித்து தேரின் சக்கரத்தின் கீழேவிடுத்தும் சிலரைகட்டியும் சிலரை கீழேதள்ளி மிதைத்தும் சிலரைமுறித்தும் சிலரைகுட்டியும் சிலரைவாளினால் வெட்டியும் சிலரைத்தடிக்கொண்டடித்தும் சின்னாபின்னப்படுத்தினான் அப்போதுவானரப்படைகளிலே அளவற்றபேர்

இறந்துபோனார்கள் அளவற்றபிணங்கள் ஆடல்செய்தன திக்குகளெங்கும் பிசாசுக்கூட்டங்கள் நெருங்கி வெற்றிபாடின இரதவோட்டங்கள்மாறி உதிர ஓட்டங்கள்பெருகின நாய்-நரி-கழுகு முதலியவைகள் சமர்க்களமெங்கும்கூடி விசயங்கூறின இவ்வாறு வானரசேனைகள் மடிந்துபோனதைச் சீதாபிராட்டியார்கண்டு மனந்தாளாமல் கோபமீறி தனதுவில் வளைத்துக் கொண்டு அளவற்றபாணங்களைத் தொடுத்து அக்கினிக்கண்ணன்மீதுதாக்கி அவனுடைய அஸ்திரங்களைத் துண்டு துண்டாய் நொருக்கியடித்து அவன்கடிவாளத்தையும் அறுத்துத்தள்ளினள் அதற்குமேல் அக்கினிக்கண்ணன் ஒரு குதிரையின்மீது பாய்ந்தேறி மிகுந்த வீரவேஷத்துடன் நாகாஸ்திரத்தை பிரயோகித்தான் அதைச் சீதாபிராட்டிகண்டு தனது வில்லில் கருடாஸ்திரத்தைதொடுத்து அதிகவிரைவோடும் பிரயோகஞ்செய்தாள் அந்தப்பாணம் வெளிப்பட்டவுடனே அக்கினிக்கண்ணன்விடுத்த நாகாஸ்திரத்தைச் சின்னபின்னப்படவாட்டி மேலும்மேலுமப்பாதகன் விடுகின்ற பாணங்களை எல்லா மறுத்தெறிந்து அவனேறி நடத்துகின்ற குதிரையையும் அறுத்தெறிந்து மீட்டும் சீதாபிராட்டியின் திருகரத்திலமர்ந்தது அப்போது அக்கினிக்கண்ணன்மனம்பலதைத்து பற்களை நறநறவெனக்கடித்து கண்களில் நெருப்புபொறிபறக்க கோபித்து சீதாபிராட்டியின்மீது ருத்திராஸ்திரத்தை யெடுத்து மந்திரபூர்வமாகப் பிரயோகித்தான் அந்த ருத்திராஸ்திரமானது சகலலோகங்களையு மழிப்பதுபோல் தகதகவென் றெரிந்துகொண்டுவர அதைச் சீதாபிராட்டியர்கண்டு நகைத்து தனது வில்லினிடமாகப் பாசுபதாஸ்திரத்தைத் தொடுத்துவிட்டனன் அந்த பாசுபதாஸ்திரம் கறகறவென்று சுழன்றுக்கொண்டுவந் தருத்திராஸ்திரத்தைத் தம்சப்படுத்தி அக்கினிக்கண்ணன்மீது திருப்ப அதைக்கண்ட அக்கினிக்கண்ணன் திகைத்து பிரம்மாஸ்திரத்தை யறுத்தெறிவாயென்று விடுத்தனன் அந்த பிரம்மாஸ்திரமானது பேரிடியைப்போலச் சித்துப்பதாஸ்திரத்துடனெதிர்த்து ஒன்றுக்கொன்று போராடி இரண்டும் பூமியில் விழுந்தன.

அப்போது அக்கினிக்கண்ணன் மகாபிரதாபத்துடனே மண்டிபோட்டு உட்கார்ந்துக்கொண்டு கோதண்டம்போலே வில்வளைத்து நாணேறிட்டு குணத்தொனிப்பண்ணி பாணசாரங்களைப்பூட்டி சீதாதேவியம்மன்பேரில் சரமாரியாய் பொழிந்தான். அப்போது சீதாபிராட்டியம்மன் பாணத்தையெடுத்து வில்லிற்பூட்டி வருகின்றபாணங்களையெல்லாங்கடித்துப்போட்டாள் அப்போ அக்கினியகண்ணனுக்குக் கோபம்பெருக கண்கள்சிவக்க வுருட்டிவிழித்துமறுபடியும் பாணத்தையெடுத்து வில்விற்றொடுத்து சீதாபிராட்டியம்மன்

பேரில் சரமாரியாய் பெய்தான் அப்போது அம்மன் அதிககோபங்
கொண்டு அக்கினியாஸ்திரத்தையெடுத்து அபிமந்திரித்துப் பிரயோ
கஞ்செய்தாளாம் அந்ததிவ்விய அஸ்திரமானது இடியும் மின்னலு
மாய் பளிச்சு பளிச்சென்று சோதிபெழும்பி கோடைகாலத்திடி
போல் குமுறிக்கொண்டு அக்கினிக்கண்ணனுடைய முப்பது சிரசு
ம் அருபதுகரத்தையும் அறுத்தவிட்டு அவனுடைய ரதகஜதுரகப
தாதிகளவற்றையும் பஸ்மீகரமாய் எறித்துவிட்டு சமுத்திரத்திற்குப்
போய் ஸ்நானஞ்செய்து சீதாபிராட்டினுடைய அம்புருப்பொதியில்
வந்தடைந்தது.

அப்போது அஸ்தமானமாய் இருள்வந்து சூழ்ந்துகொண்டது
இந்தவிசேஷமெல்லா சுகசாரணர்கள் சதகண்டனுடனே சொன்னார்க
ள் அதை அவன்கேட்டு வெகுவிசாரமா யிருக்கிறசமயத்தில் அவனுக்
குஇளையகுமாரனை யமகண்டனெனவன்கேட்டு தன்தாயாதியாகியவி
துரஇராவணன் கேள்விப்பட்டு விசனப்பட அவருடைய பாதத்தில்
தெண்டஞ்சமர்ப்பித்து கைகட்டி நின்றுக்கொண்டு சொல்லுகிறான்
தேவரீர் நீங்கள் துயரப்படவேண்டிய காரியமென்ன அப்படி இந்த
இரகுநாயகர் இலட்சுமணர் சீதாபிராட்டியம்மன் இவர்கள் வெகு
சாமர்த்திய முள்ளவர்களோ முன்னே யமதர்மராஜாவைப்பிடித்
துநெடுங்காலஞ் சிறையில்வைத்தேனது வுமக்குத் தெரியாதா அப்
படிப்பட்ட எனக்குத் திரிமூர்த்திகளும் நிகரல்ல அப்படிப்பட்ட
வனா யிருக்கச்சே என்னகுறையிருக்கின்றது யிதோ நான் போய்
ஸ்ரீரகுநாயகரையும் இலட்சுமணரையும் சீதாபிராட்டி யம்மனையும்
அந்தஅனுமாரையும் பிடித்துவருகிறேன் பாரும் அதல்லாமலும் எ
னக்குசாம்பாரி மாய்கையுந் தெரியும் அதெப்படியென்றால் இரதத்
தின் நகரத்தையாளப்பட்ட விபீஷணனுக்கும் நெடுநாளாய்ச் சிநே
கமுண்டு அவனிலத்தில் சாம்பாரி மாய்கையும் அப்பியாசஞ் செய்
தேன் அந்த மாய்கையினாலே அவர்களைப் பிடித்து வருகிறேன்பாரு
மென்றுசொல்ல அப்போது சதகண்டன் புத்திரனையெடுத்து முற்
றமிட்டு வுச்சியைமுகந்து வலத்துடையில் வைத்துக்கொண்டு அப்
பாமகனே அருமைக்கண்மணியே நீயிருக்கச்சே எனக்கு என்னகு
றையிருக்கின்றதென்று வாழ்த்தி விடைப்பெற்றுக்கொண்டு மறுநா
ட்காலையிலே சூரியவுதயத்திற் கெழுந்திருந்து பாளயத்தை யொன்
றாய் சேர்த்துப் பெருங்கூட்டமாக்கின னவனுடைய தண்டுகள் பத்
துவெள்ளம் இரதமும் நூறுவெள்ளம்யானைகளும் மூந்நூறு வெள்
ளக் குதிரைகளும் இரதகஜ துரகபதாதிகளும் பிரயாணப்பட்டு வ
ருவதற்குப் பேரிகையடிக்கும்படியாய்த் திட்டம்பண்ணினன் தன்சா
ரதியைப்பிடித்து இரதத்தை அலங்கரிக்கும்படி யுத்தாரஞ் செய்
தான் அப்படியே இரதத்தை அலங்காரஞ்செய்து ஆயிரம் சிங்கங்க

ட்டிக்கொண்டுவந்து யமகண்டன் முன்னேநிறுத்தினுல் அப்போது
யமகண்டன் சூரியப்பிரகாசம்போலத் துலங்குகின்ற நவரத்தினப்ப
தித்த கிரீடம் இருபத்தைந்துசிரசிலுந் தரித்து மார்புக்குக்கண்டசா
ம்போகனமாலை பதக்கம் சாப்பளிமுதலிய வெல்லாந்தரித்து கைக்கு
அஸ்தகடகமுந்தரித்து விரல்களுக்கெல்லாம் சணையாழிமோதிரமுங்
காதுக்குக் கவசகுண்டலமும் அணிந்து இரதத்தின்பேரில் ஏறிக்
கொண்டு இரதகஜதுரகபதாதி சதுரங்க பலசேனைகள்புடைசூழ பதி
னெட்டுவகை மேளவாத்தியங்கள் முழங்கச் சகல ஞஸ்தீப்புடனே
புறப்பட்டார்கள்.

அத்தருணத்தில் புஜபலபராக்கிரம மிகுந்த ராட்சசர்கள் சர்
வாயுதபாணியாய் தங்கள் தங்கள் வாகனங்கள்மீது ஏறினர் வீராதி
வீரர்களிருக்கின்ற அளவற்ற சேனைத் தலைவர்கள் பலபுரவிகளை பூ
ண்டிருக்கின்ற தேர்களிலேற்றி வில்-வாள்-வேல்-சக்கரம்-பிண்டி-பா
லம்-முசலம் சப்பணமாதியாகிய ஆயுதங்களையும் கொடிய பணவிதங்
களையும் தாயானவர்களாய் தமதிடத்திலிருக்கின்ற சகல சேனைகளை
யுங்கூட்டிக்கொண்டு சத்தசாகரங்களும் பெருங்கர்தைப்போலஆரவா
ரித்து அஸ்திரசஸ்திரங்களை ஏராளமாகத்தாங்கி பாச்குப்போர்கிடை
த்ததென்கிற ஜயவுச்சாகத்துடன்வந்து மகாபாதகனுகிய யமகண்ட
னுடைய ரதத்தை புடைசூழ்ந்து நெருங்கின ரிப்பால் யமகண்டன்
குறிப்பினையறிந்த சகலசேனுதிபதிகளும் தங்கள் தங்கள் படைகளை
த்தூண்டஅம்மாத்திரத்தில் வெள்ளிக்கிணங்கில் கடலை யொடித்துவி
ழுங்கும்சகலசேனைகளும் கோட்டைவாயிலைக் சடந்து வெளிப்பட்டு
இரணபேரிஜயபேரிகை-வெற்றிச்சங்கம் சின்னனம்-ஹோடு ஆகுளிக
ளம்-எக்காளம்-பறை-கு-முழா-கல்லரிமுதலிய பொற்பறைகள்கண
கணவென்று முழங்கவும் துஜபடங்களுவானத்தைமூடி படபடவென்
றசையவும் பூரணச்சந்திரனைப்போல முத்துகளினுல் அலங்கரிக்கப்ப
ட்ட கணக்கிறந்த பவளக்குடைகள் நான்மருங்குக்கவிக்கவும் மந்தர
கிரியைப்போல விளங்கும் தேர்கள் சக்கரத்தொனிகளைச் செய்தோ
டவும் மதயானைகள் வீறிட்டுப் பகைவரைச் பிரசண்டமாருதத்தை
போலே வேகமாய்நடக்கவும் புரவிக்கூட்டங்களானவை நான்குபாக
ங்களிலும் பூண்டிருக்கின்ற பொன்வடையங்கள்கவிக்க அலைகளுக்கு
வானவெல்லையினுந் திசைகளிலும் சமுத்திரங்களிலும் பாய்ந்து
இடிமுழக்கினைப்போலக் கனைத்தோடவும் பிறையையொத்த நகோரத்
தங்கள்விளக்க அரக்கினுஞ்சிவந்து உருண்ட கண்களையுருட்டி தீப்
பொறிகள் சிதறப்பார்த்து பூமிநடுக்கும்படியாக கால்களைப் பெயர்த்
துவைத்துநடக்கும் ஆலகாலத்தையொத்த இராட்சசசேனைகள்வீரா
வேசங்களுடன் சிங்கநாதம் அட்டகாசங்களைச்செய்து ஆர்ப்பரிக்கவும்

சத்தசாகரங்களும் ஏககாலத்தில் ஒன்றாய்க்கூடி முத்தியடைய வருவதுபோ லிரணங்களும் வந்துசேர்ந்தார்கள்.

இந்தவிசேடத்தை யறியவேண்டுமென்று ஆஞ்சநேயர் எதிர்வாசி விசாரித்துச் சீதாபிராட்டியம்மன் பாதத்தில் சாஷ்டாங்கமாகத்தெண்டனிட்டுக் கைகட்டிக்கொண்டு சொல்லுகிறார் அம்மாதாயே இன்றையதினத்தில் யுத்தத்திற்கு வந்திருக்கிறவன் சதகண்டனுடைய இளையகுமாரன் அவன்நாமதேயம் யமகண்டன் இவனுக் இருபத்தைந்துசிரசும் ஐம்பதுகையுமுள்ளவன் இவன்வெகு சமர்த்தனாய் வந்திருக்கிறான் மகாமாயாவினோதி இவன்முன் யமனைப்பிடித்து நெடுங்கால்வரைசிறையி லடைத்தவனென்று ஆஞ்சநேயர் சொல்ல அப்போது சீதாபிராட்டியானவர் அதிக சந்தோஷப்பட்டு அப்போதே அம்மன் புட்பகவிமானத்தி லேறிக்கொண்டு சுவாமியை இரதசாரத்தியஞ்செய்யச்சொல்லி இலட்சுமணர்-பரதர் – சத்துருக்னர் முதலிய ஐம்பத்தாறுதேசத்தரசர்களையுஞ் சாக்கிரதையா யிருக்கச்சொல்லி இரதத்தைக் கொண்டுவந்து இரணக்களத்தில் நிறுத்தினார்கள் அப்போது இராட்சதசேனைகள்வந்து சூழ்ந்துக்கொண்டது அதெப்படியாகயிருந்ததென்றால் குகையிலேயிருக்கிற சிங்கம் வெளியே புறப்பட்டுவருகையில் அந்தச்சிங்கத்தையானைக்கூட்டங்கள்வந்து சூழ்ந்துகொண்டதுபோலிருந்தது.

அத்தருணத்தில் மகாபாதகனாகிய யமகண்டன் தனது இஷ்டதெய்வத்தினைத் தியானித்து வெற்றிச்சங்கினை முழக்கி அட்டகாசஞ்செய்துயமகண்டன் சேனைகளிற்பாய்ந்தார்கள் இராட்சசசேனைகளும் வானரசேனைகளும் ஒன்றோடொன்று நெருங்கி இரதவீரர்களோடு இரதவீரர்களும் யானைவீரர்களோடு யானைவீரர்களும் குதிரைவீரர்களோடு குதிரைவீரர்களும் யதாதிவீரர்களோடு பதாதிவீரர்களும் கைகலந்தெதிர்த்து இதுதங்களினம் இதுபேரினமென்று தெரிந்துகொள்வதற்கருமையாக ஆகாயமெங்கும்தூளிபடலங்களை யுதிரவெள்ளங்கள்மாய்க்க இவ்விதமான ஆடம்பரங்களோடு இரண்டினங்களும் சமர்புரியுங்காலத்திலே இரதமற்றவர்கள் யானைமீதேறவும் யானையற்றவர்கள் குதிரைமீதேறியும் குதிரையற்றவர்கள் நிலத்தின்மீதிருந்தும் நிலத்திலிருந்தவர்கள் வேறுகதியில்லாமலிறந்தும் வாளற்றவர்களும் வாளிகளைத்தொடுத்தும் வாளியற்றவர்களும் வேல்தனைவிதித்தும் வேலற்றவர்கள் சூலத்தினைச் செலுத்தியும் சூலமற்றவர்களும் சக்கரத்தைத்தூண்டியும் சங்கமற்றவர்கள் மற்றவர்கள்கதையேந்தியும் கதையற்றவர்கள் முசலந்தனையெடுத்தும் முசலமற்றவர்கள் விசனங்களிலிறந்தும் இவ்வாறுயாவரும் அளவற்றபடைகளை மாறி

மாறியெடுத்து யுத்தஞ்செய்தபோது இருவகைச்சேனைகளிலுங்கண
க்கற்றபேர்மண்டை திரந்தும் மூளைகள்சிறியும் விழிகள் தெரிந்தும்
வாய்கள் பிளந்தும்பற்களுதிர்ந்தும் கழுத்துகளொடிந்தும் புயங்கள்
சரிந்தும் கரங்கள்முறிந்தும் வயிறுகிழிந்தும் குடல்கனிறைக்கும்து
டைகளொடிந்தும் கால்கள் முறிந்து போயின அப்போதுபோர்க்கள
மெங்கும் பற்பலகோடி கவந்தங்கள் கூத்தாடி பூதபசாசங்கள்காளி
கூட்டங்கள் அங்கிருக்கின்ற பிணங்களை யெல்லாம் தெவிட்டவிண்டு
வெற்றிகூறிப் புகழ்ந்து கொண்டாடித்திரிந்தன கழுகுபருந்து-காக்
கைமுதலியனவைகள் பிணங்களை யெல்லா திருத்தியாக புசித்து ஆகா
யத்தில் பந்தலில்நாய்நரிமுதலியனவைகள் பிணங்களைப் பிடுங்கித்தின்
றுகவந்தங்களாகிபற்பலவாட்போற்களைவிளையாடி சொர்க்கம்புகுந்து
அங்கே இரம்பாஸ்திரீகளுடைய நடனங்களைபார்த்துக் கொண்டிரு
ந்தார் இவ்விதமாக இருவகைச்சேனைகளிலுமுள்ள இரதகசதுரகப
தாதிகள் அளவற்றவைகள் மாண்டும் வானரவீரர்களும் சேனைத்தலை
வர்களும் எவ்வளவேனு மச்சமில்லாமல் அதிபராக்கிமத்தோடு இ
ராட்சதவீரர்களையெல்லா மரங்களினலடித்தும் மலைகளைவாரி மோ
திதண்டாயுதத்தினலடித்தும் பற்களாற்கடித்தும் நகங்களாற்கீறியு
ம்சூலத்தினற் குத்தி வாள்களினல் வெட்டியும் அட்டகாசஞ்செய்து
நின்றனர் அதனலே இராச்சசேனைகள் மிருந்த வலிமையுள்ளவனக
விருந்தும் தைரியமும் பராக்கிரமும் குறைப்பட்டவர்களாகியவானர
சேனைகட் கெதிர்க்கமாட்டாமல் பின்னிட்டோடத் தலைப்பட்டார்கள்.
யமகண்டன்கண்டு ஆ-ஆ-நமது சேனைகளுடைய பராககிரமம்மிகவும்
நன்ருகயிருக்கின்ற தென்று கோப நகைக்கொண்டு ஒன்றிவறற
வர்களே அற்பசேனைகளாகிய குரங்குகூட்டங்கள் செய்யும்போரி
னுக்கஞ்சி ஏனேடுகின்றீர்கள் நில்லுங்கள் என்று கையமர்த்தி
பிரளய காலத்திற்குநிகரான அளவற்றபாணங்களை நாற்புறங்களிலும்
வாரி வாரி யிறைத்துக்கொண்டு வந்து அதிக வீராவேசத்துடன்
இரதத்தை துரத்திக்கொண்டுவந்து வானரசேனைகளுக்கு நடுவிற்
புகுந்து யுத்தஞ்செய்ய நேர்ந்தன அதைக்கண்ட சீதாபிராட்டி
ஸ்ரீராமமூர்த்திக்கருவிக்க அவரும் ரதத்தைததிருப்பிக்கொண்டுவந்
துயமகண்டன்முன்பு நிறுத்தினர் உடனே சீதாபிராட்டியார்வில்லை
வளைத்து நாணேற்றிட்டு பற்பலதிவ்விய அஸ்திரங்களை சோனைமாரிப்
போலப்பொழிந்தாள்.

அந்தப்பாணங்கள் ஒன்றேடொன்று நெருங்கி நெருப்புப்பொறிக
ளை இறைத்துக்கொண்டு வருவதையமகண்டன்கண்டுபளபளாநன்று

பிருக்கின்றதென் றுசிங்கநாதஞ்செய்துதனதுவில்லை எடுத்துநிறுத்தி
அளவற்ற பாணங்களை ஒருமுனையிற் பூட்டி காட்டினிடத்தில் கல்ம
மழைப்பொழிவதுபோல பிரயோகஞ் செய்தான் அத்தருணத்தில்
இவருடைய பாணங்களும் ஒன்றோடொன்றுராய்ந்து தீப்பொறிகளை
யிறைத்து அதிகவேகத்துடன் ஆலகாலவிஷத்தைப் போலசீறிரைத்
தோங்கித்தழைத்திருக்கின்றதோப்புகளில் சூறைக்காற்று புகுந்தாப்
போல இருவகைச்சேனைகளையும் வாட்டிவருகின்றபோது மேருகிரி
யைப்போலப் பார்த்திருக்கின்ற தோணிகளெல்லாம்சிதைந்து அச்சு
மச்சுக்குத்துக்கால் கொடிக்கை முதலியஉறுப்புக்கள்பின்னப்பட்டறு
ந்தும் தனது கொச்சனையினால்திசையானையும் கலங்கச்செய்யவல்ல
னைக்கூட்டங்கள் முழுவதும் கலங்கி மத்தசம் துதிக்கை கொம்பு
முதலிய இதபங்கள் முறிந்து அலைகளைப்போல் தாவிபாயவல்லபுர
விகூட்டங்களெல்லாமயங்கி வண்டையங்கள் கலிக்குங்கால்களும்
முகங்களும் சிதைத்தும் ஜயவுச்சாகத்தோடும் வீரபாக்கிரமத்தோடு
ம்போராடவல்ல பதாதிகளனைத்தும் நடுங்கிசிரம் கரம் உரம் கால்
தொடை முதலிய அவயவங்கள் கண்டதுண்டப்பட்டுமாண்டுபோயி
ன இவ்விதமாக இருதிறத்தினருடைய சதுரங்கசேனைகளும் சின்ன
பின்னப் பட்டழிக்கின்றபோது மனிதர்கட்கெல்லாம் யமனென்று
சொல்லத்தக்க பேயரினைப் படைத்த யமகண்டனானவன் தனது
வில்லினிடமாகஅனேகதிவ்வியாஸ்திரங்களைப் பொழிந்தால்அதைக்
கண்ட ஆஞ்சிநேயரானவர் மிகுந்த கோபாக்கினியுடனே யமகண்டனு
டைய சேனைகுட்படிந்து சிலரை கொச்சனையினாற் கொன்றும்சிலரை
தண்டத்தினாலடித்துக் கொன்றும் சிலரைகால்களினாற்தேய்த்துக்
கொன்றும்சிலரைபூமியிலறைத்துகொன்றும் சிலரைத்தேறி மீதெறிந்
துக் கொன்றும் கோபமடங்காதவராய்த் தேர்களையெடுத்து யானை
கள் மீதெறிந்தும் யானை குதிரைகளை யெடுத்துக்குதிரைகள் மீது
சாடியும் பதாதிகளை யெடுத்துப்பதாதிகள் மீது மோதியும் இவ்வாறு
நால்வகைச்சேனை களையுஞ் சின்னப்படக்கொன்று அளவற்றசேனாதி
பதிகளையும்கிழித்தெறிந்தார் அதனை யமகண்டன் கண்டமாத்திரத்
திற் அதிவுக்கிரத்துடன் விழிகளில் தீப்பொறிகள் சிதறி ஆலகால
த்தைப்போலச்சீறி அதிகவேகத்துடன் அனுமாரெதிர்த்து தனது
தேரைநடத்திவந்து இதோவுன்னுண்மையை யமலோகம் குடியேற்
றுவேனெனக்பதங்கூறிவில்லையெடுத்து ஊழிக்காலத்துமழைப்போல்
அளவற்றபாணங்களை யொரேதடைவையில் பிரயோகித்தான் அவன்
விட்டபாணங்களெல்லாம் வச்சிரப் பாறைமேல் விழுந்தமழைத்து

ளியைப்போல் ஆஞ்சநேயர்மேல்பட்டு உடைந்தும் குறைந்தும்சிதை
ந்தும்பொடிந்தும் படிந்தும் உதிர்ந்தும்போயின இப்படிப்புகழற்றவ
ர்களை பொன்னுலகுளப்படிநீக்கி விடுமோ அவ்வாறுதான் விட்டபா
ணங்களெல்லாம் அனுமாரிடத்திற்சென்று பயன்படாது போனதால்
யமகண்டன் கண்டுமனம் கலங்கிவாடிநின்றாயுடனே தைரியத்தைவி
டாமல் விட்டமூலைப் போலச்சீறி இந்தநிமிஷத்தில் இவன்பிராணத்
தையமலோகப் பேற்றுகிறேனென்று ஓர்வேலாயுதத்தையெடுத்துப்
பிரயோகித்தனன் அவ்வேலாயுதமானது இதிலோகங்களையுமெக்கா
லத்தில்விழுங்குவதுபோல ஆக்கிரமித்துவர அதனை ஆஞ்சநேயர்கர
த்தினாற்பிடித்து இரண்டுதுண்டாக முறித்தெறிந்தார் அதைக்கண்
டயமகண்டன்மந்திரகிரியைப்போல் பாரித்திருக்கின்றவொருசக்ராயுதத்
தையெடுத்தெறிந்தனன் அதனையும் ஆஞ்சநேயர்முறித்தெறிந்தார்பின்னு
மொருமுசலாயுதத்தை யெடுத்து இடம்வலமாகசுற்றி அனுமாருடைய
தோளுக்கு இலக்காகவிடுத்தனன் அப்போது ஆஞ்சநேயருக்கு அதி
ககோரம்பிரவேசித்து தன் துடையக்களைநோக்கிவருகின்றமுசலாயுதத்
தைதனது கரதலத்தினாற்பிடித்து யமகண்டன் இரதத்தின்மேலெறிந்
தனர் அந்தமகாரதமானது சக்கைசக்கையாகச்சிதறிப்போயிற்று அ
தையமகண்டன்கண்டு ரௌத்திராகாரமாகக்கோபித்துவடவாமுகா
க்கினி சீறியெழுந்ததுபோல தமதுதேரைச்சூறுவளிக்காற்றிலும்வே
கச்செலுத்திவந்து உறையிற்சொருகியிருந்தவளாயுதத்தினால்ஆஞ்
சநேயனைவெட்டநோக்கினான் அதைக்கண்ட ஆஞ்சநேயர்தனதுகையி
லிருந்தஇருப்புலக்கையினால் அந்தவாளாயுதத்தைதட்டி இப்பாதகனு
டன்னுமேன்சண்டை செய்யவேண்டும சீதாபிராட்டியே இவனைச்ச
ம்மாரஞ்செய்யட்டுமென்று நினைத்து வானரசேனைகளிற்போய்ச்சே
ர்ந்தார் உடனே சீதாபிராட்டியார்மன் ஸ்ரீராமமூர்த்திக்கறிவிக்க இரா
மமூர்த்தியும் இரதத்தை யதிவேகமாகத் தூண்டிப்பாதகனாகியயம
கண்டன்முன்புநிறுத்தினார் அதனைக்கண்டயமகண்டன்விழிகளில்தீப்
பொறிபறக்கக்கோபித்து இனிஇச்சிறுபெண்ணை தேவாஸ்திரங்களி
னாற்கண்டிப்பதேகாரியமென்றுதீர்மானித்து மகமேருவுக்கொப்பாக
பாரித்திருக்கின்ற தனது வில்லை யெடுத்துநாட்டி வட்டகாசமாகவளை
த்துநாணேற்றித்திசைகள் அதிரக்குணத்தொனிசெய்து அதில்வருண
ஸ்திரத்தையபிமந்திரித்து தொடுத்து ஆக்கிராணாந்தபரியந்த இழுக்
துப்பிரயோகித்தான் அதுவெளிப்பட்டமாத்திரத்தில விண்ணோடும்
வானத்திலெழுந்து இடிகளையும்மின்னல்களையும் காட்டிய மேகமாக்
கிநீரைப்பெருக்கி எங்குஞ்சலப்பிரளயத்தி யுண்டாக்கிற்று ஆவென்று
சீறிக்கொண்டுவர அதைச் சானகியம்மன்கண்டு புன்னகைசெய்து த

னது விலலினிடமாக இராமபாணத்தை யெடுத்துத் தொடுத்து விடுத்தனன்.

அந்தபாணமானது சடசடவென்னுந்தொனியுடனே புறப்பட்டு வருணாஸ்திரத்தைகண்டித்துயமகண்டன்புசத்திற்பாய்ந்துபின்னாலுருவிப்போனது பின்புயமகண்டன் பற்களைநெறநெறவென கடித்துமீசைபடபடவெனத் துடிக்கக் கோபநகைசெய்து வாய்வாஸ்திரத்தைப்பிரயோகித்தது அவ்வஸ்திரமானது பிரசண்ட மாருதத்தைப்பெருக்கிப் பர்வதங்கள் முதலானவைகளைப்பறக்கக்கொண்டுவர அதைச்சானகியம்மன் அர்த்தசந்திர பாணத்தினால்துண்டித்தனள்பின்னர்யமகண்டன் அக்கினியாஸ்திரத்தையெடுத்துப் பிரயோகித்தனன் அவ்வஸ்திரமானது உடனேயஷ்ட திசைகளிலும் பரவிக்கொடியவனலைநிறைத்துக் கோடையிடிகளைப்போலஇரைந்து வடவைக்கு சமதையாகச் சிறியேவிட்டுவர அதன உக்கிரகத்தையும மகத்துவத்தையும் சீதாபிராட்டிகண்டு வருணாஸ்திரத்தை விடுத்தாள் அந்தவருணாஸ்திரம் அலைகளைப் பெருக்கிக் கொண்டுவந்து அக்கினியாஸ்திரத்தையடஞ்செய்துவிட்டதுபின்னர்யமகண்டனுவன்பிர்மாஸ்திரத்தை யெடுத்துப்பிரயோகித்தான் அவ்வஸ்திரம வெளிப்பட்டமாத்திரத்தில் அளவற்ற கொடியபாணங்களைப்பெருக்கிக்கலகலவென்றுநகைத்து விஷங்களைகக்கிஇடியேற்றினைபோல் முழங்கிக்கொண்டுவந்தது அதையுஞ்சானகியம்மன் கண்டிராமபாணத்தைவிட்டுகண்டித்தாள் யமகண்டன்மனம்பொறாமல்தான் முன்னமரியதவங்களைச்செய்துமகாவிஷ்ணுவிடத்திலபெற்றுவைத்திருந்தநாராயணாஸ்திரத்தையெடுத்து பனபூர்மகாய் தூபதீபநைவேத்தியம் முதலிய பூசைகளைசெய்துவணங்கிப் போற்றி ஓ அஸ்திரங்களுக்கரசே அதோஎமக்கெதிரிலிருக்கின்றமாணிடப் பெண்ணின்சிரத்தைக்கண்டித்து அவள்பிராணனையுண்டுவரக்கடவையென்றுவேண்டி அதிகவேகத்தோடும பிரயோகித்துக்களித்துப் பார்த்திருந்தனன் அவ்வஸ்திரமானது வெளிப்பட்டவுடன் ககத்தகாயமாய்ப் பிரகாசித்துஅனலைநிறைத்துப் பலகோடிஅஸ்திரங்களைப்படைத்துப் கோடையிடிபோலக்குமுறி எதிர்த்துக்கொண்டு எங்குஞ்சன்மயமாக அநேகமகிமைகளைக்காட்டிச்சிறிநிறைந்துபகைவரெங்கேயென்றுதேடிச்சமீபத்தில்வந்தமாத்திரத்தில் சானகியம்மனைசுற்றிவந்து பயந்து நடுங்கிரதத்தைப்பிரதட்சணஞ்செய்து சீதாபிராட்டிபாதத்தில் விழுந்துபோனது அவ்வதிசயத்தையமகண்டன்கண்டுபிரமித்துமுன்னமளவற்றமகிமைகளையுடையபலபலஅஸ்திரங்களைப்பிரயோகஞ்செய்தோம் அதையெல்லாஞ்சிறுபெண்ணின்மீதுகுறிதப்பாது ஒன்றும்பயன்பெறு

மல் நுறுங்கிப்போயின பின்னர் மகாதபோபலத்தினுல் கிடைக்கப்
பெற்றிருந்த ஒப்பற்ற நாராயணுஸ்திரத்தை விடுத்தோம் அதுவுமி
ச்சிறுபெண்ணின பாதத்தில்விபரீதமாக விழுந்துபோனது இனிநா
ம்செய்யவேண்டிய முயற்சியென்ன விருக்கின்றது இப்பெண்ணின்
செய்கைகளைப் பார்க்கு மிடத்தில் மகா அற்புதமாக விருக்கின்றது
ஆயினுமிவளுடைய திறத்தை யின்னுமறிவோமென்று ஆக்கிரமித்து
கோடையிடியைப்போலக்குமுறி ஓயானிடப்பெண்ணே நீயோஎங்க
ளைவெல்லவல்லவள் இதோவுனதுபிராணனைவாங்கியமலோகங்குடிவ
ற்றுகிறேன பாரென்று கோபித்து ஓர்வேலாயுதத்தை எடுத்துப்பிர
யோகித்தான் அவ்வேலாயுதமானது திரிலோகங்களையு மேககாலத்தி
ல் விழுங்குவதுபோல ஆக்கிரமித்துவர அதனைசீதாபிராட்டியம்மன்
சூலாயுதத்தினுல் துண்டித்தனள் அதைசதமகண்டன் கண்டு ஆச்சரியப்
பட்டு மந்திரகிரியைப்போலப் பாரித்திருக்கின்றஓர் கதாயுதத்தைஎ
டுத்து அதிவேகமாகப் பிரயோகித்தான் உடனேகதாயுதமானது
வெளிப்பட்டுப் பிரசண்ட மாருதத்தைப்போல ரணக்களமெங்கு மு
லாவிக்கொண்டுவர அதைச்சானகியம்மனகண்டுமகாசந்தோஷத்தோ
டொருசத்தியைஎடுத்துமந்திரோச்சாடனத்துடனேஎறிந்தாள் அந்த
ச்சத்தியானது கலகலவென்ற சப்தத்துடனே புறப்பட்டுவந்துகதாயு
தத்தின்பேரில்தாக்க கதாயுதமானது தூளதூளாகநுறுங்கிப்போனது
அப்பால் யமகண்டனானவன் அனலைப்போலப் பொங்கிஓர் முசலாயு
தத்தினை யெடுத்துவிசைவிறலொடுத்துப் பிரயோகஞ்செய்தான் அந்த
அஸ்திரமானது அதிகமகிமையோடுவருவதைச் சானகியம்மன்கண்டு
சதுர்முகாஸ்திரத்தை விடுத்துக்கண்டித்தாள் இவ்வாறு தான்விடுகி
ன்ற ஆயுதங்களெல்லாம்சானகியம்மனுல சின்னபின்னப்பட்டுநாசம
டைந்ததைக் கொலைகளவு வஞ்சகங்கள் குடிகொண்டிருக்கும் ம
னத்தினையுடைய யமகண்டன் கண்டுஉக்கிராகாரமாகக் கோபித்து
வடவாமுகாக்கினி சீறியெழுந்தது போலத்தனதுதேரைச்சூழவளிக்
காற்றினுங்கடுகிற்செலுத்தி வாளுறையிற்சொருகியிருந்தவாளாயு
த்தினுல் வெட்டயோசித்தான் அச்சமயத்தில் அனுமார் கண்டவனு
டையதேரைத் தனது காலினுலெட்டியுதைக்க அவ்வுதைப்பட்டமா
த்திரத்தில் அந்தத்தேரானது யமகண்டனோடு நூறுகாதத்தூரமுரு
ண்டுசென்று அச்சுவேறு மச்சுவேறு கொடிஞ்சிவேறு குத்துக்கால
வேறாகப்போனது உடனேயமகண்டனானவன் பூமியிற்குதித்து ஓர்சிறி
யதேரின்மீதுவாய்வேகத்திலுமதிகமாகச் சானகியம்மன் முன்வந்து
இனி இவளை தேவாஸ்திரங்களினுல் வெல்லுவதே காரியமென்று
தீர்மானித்துமகாமேருவுக்கொப்பாகப்பாரித்திருக்கின்ற தனதுவில்
லைஎடுத்துகாட்டிவட்டகாசமாகவளைத்து நாணேற்றித் திசைகளதிரக்

குணத்தொனிசெய்து அதில்வருணாஸ்திரத்தையபிமந்திரித்தெடுத்து
ஆக்கிராணந்தபரியந்தம்இழுத்துதொடுத்துவிட்டாளதைசானகியம்ம
ன்கண்டுதனதுவில்லினிடமாக ராமபாணத்தினைத்தொடுத்துக்கண்டி
த்தாள் அதைக்கண்டயமகண்டன் மகாதபோபலங்களினால்கிடைக்க
பெற்றிருக்கதப்பற்றதேவாஸ்திரங்களைவிடுத்தோம் அவைகளைப்பெ
ல்லாமிப்பெண்ணொன்றையும் விடாமல்துவசஞ்செய்தனள் இனிசெ
ய்யவேண்டிய முயற்சியென்னவிருக்கின்றது இவள்செய்கைகளைபார்
க்குமிடத்திலமகா அற்புதமாயிருக்கின்றன ஆகிலுமிவளுடையகிரத்
தைஇன்னமறிவோமென்று ஆக்கிரமித்துகோடாட்டிமேலக்குமுறி
மானிடப்பெண்ணே நீயேயென்னைவெல்பவள் இதோவுன் பிராண
லைவாங்கியெமலோகம் குடியேற்றுகிறேன் பாரென்று வசைமொழி
களைப் பேசித்தனக்குப் பிராணபதமாய்வைத்திருக்கிறயாவராலுந்த
டைசெய்தற்கரியபாசுபதாஸ் திரத்தைஎடுத்துப்பிரயோகிக்கநேர்ந்த
னன் அவ்வாறெசித்துப் பிரயோகித்தான அந்தஅஸ்திரம்பேரிடியைப்
போலக்குமுறிச் சீறிக்கொண்டுவந்து யமகண்டனுடைய வில்லைக் க
ண்டித்து அவன்மார்பில்பட்டுப்பினனுருவிப்போயின அதனால்யமகண்
டன்சிறிதுநேரம்மூர்ச்சையாய்கிடந்து மீண்டுந்தெளிந்தெழுந்து-ஆ-ஆ
ஆ-ஆ என்னகாரியஞ்செய்தோம் இதுபரியாசமானிடப் பெண்ணெ
ன்று நினைத்திருந்தோம் இவளுடையசெய்கைகளைப்பார்க்குமிடத்திற்
மிகுந்தஆச்சரியத்திற்கிடமாகின்றது நம்முடையதேவாஸ்திரங்களெ
ல்லாம்வியர்த்தமாய் நொறுங்கிப் போயின அதல்லாமல் நமதுகடல
போன்றசேனைகளும் வானரங்களினால் சிதைந்தன இப்பெண்ணின்ஆ
ண்மையையென்னென்று பேசப்படும் இதுபரியந்த மரிபிர மேந்தி
ராதிகளைவென்று செயமடைந்து நமது பராக்கிரமங்களை ஓர்நிமைப்
பொழுதில் அழித்துவிட்டாள் இவளே இவ்வளவுவல்லமையுமுடை
யவளானால்மற்றவானர வீரர்களுடைய பராக்கிரமங்களை ய வராற்க
ணிக்கப்படும இப்பெண்ணை நாமவெல்வதரிதென்று தீர்மானித்து
மேருகிரிக்கிணையான ஓர் வில்லையெடுத்து வளைத்து அதிற்கொடூரமா
னபாணங்களையளவற்றகோடிகளாகத் தொடுத்துப் பிரயோகித்தா
ன் அதைச்சானகியம்மன்கண்டு தனதுவில்லினிடமாக அளவற்றபா
ணங்களைச்சோனமாரிப்போல் பொழிந்தனள் பின்பு அவ்விருதிறப்
படைகளும் வெளிப்பட்டமாத்திரத்தில் ஒன்றோடொன்றுராய்ந்து
நாற்றிசைகளிலுந் தீகளையிறைந்து நாகங்களை ஒப்பச்சீறி நெடுநே
ரமளவற்ற போர்களைச்செய்து நிற்கையில் இராமபாணங்கள்ராட்ச
சனுடைய கணைகளையெல்லாம் சின்னபின்னப்படுத்தி அவனுடைய
சரீரத்தைச் சல்லடைக் கண்களாகத்துளைத்து அவனுடைய தேனா

சக்கைசக்கையாகப் பேர்த்தெறிந்து சாரதியைக்கண்டித்துக்குதிரை
களையறுத்தெறிந்து வில்லையொடித்துக் கிரீடத்தைத்துள்படுத்தி அவ
ன்புயத்திற்பாய்ந்து பின்னுருவப்போயின அதனாற்சதகண்டன் இ
ரத்தங்களைக்கக்கிக்கொண்டு சாவுக்குச்சரியான மூர்ச்சையடைந்தான்
அப்போது ராட்சதர்கள் பாணங்களினாலும், ஆயுதங்களினாலும், அஸ்
திரங்களினாலும், கதைகளினாலும், எரியம்பு சூலம்பிண்டிபாலம் வளை
தடிசத்திகேடயம் சக்கரம் இன்னமனேகமான ஆயுதங்களினாலும் அ
ஸ்திரங்களினாலும் யுத்தஞ்செய்தார்கள் அப்பொழுது சீதாபிராட்டிய
ம்மன் அவர்கள்விடுத்த அஸ்திரங்களையெல்லாம் பதிலஸ்திரவில்லிற்
றொடுத்துப் பிரயோகஞ்செய்து நடுப்பாதியில் அறுத்துத்தள்ளினள்
மறுபடியும் ராட்சதர்களின்பேரில் சீதாபிராட்டியம்மன் அக்கினியா
ஸ்திரத்தையெடுத்து மந்திரோச்சாடனஞ்செய்து அந்தஅஸ்திரமான
துவில்லைவிட்டு வெளிப்பட்டுவருகின்றபோது இடியுமின்னல்களுட
னே நெருப்பைக்கட்டிகட்டியாய்க் குபீலகுபீலென்று கக்கிக்கொண்
டு அந்தராட்சதர்கள் பிரயோகித்தபாணங்களையெல்லாம் நடுப்பாதியிற்
கண்டித்தும் பின்னும் ஆனைகுதிரைதேர் காலாள்யாவரையுமழுங்கிற்
புதாரில் அக்கினிப்பிரவேசமானால் எவ்வண்ணம் நீறாய்ப்போகுமோ அவ்
வண்ணம் ராட்சதசேனைகளையெல்லாம் நீறாகச்செய்தனள் அதனாலி
ராட்சதர்களோடத் தலைப்பட்டார்கள் அதைக்கண்டவாள் வீரர்கள்த
டிகளினாலும் வாளினாலும் ஈட்டிகளினாலும் இராட்சதர்களைக்குத்தியு
ம்வெட்டியும் அறைந்துங்கிழித்தெறிந்தும் தண்டங்களினால்மோதியு
ம்மலைகளைத்தூக்கியும் நாசப்படுத்தினார்கள் வானரசேனைகளின் முன்
இறந்தவர்கள் போகமற்ற இராட்சதர்கள் மலைச்சந்திலும் மரத்தின்
பக்கங்களிலும் ஆழ்ந்தகுழிகளிலும் ஓடி ஒளித்தார் அச்சமயத்தில்யம
கண்டன் மூர்ச்சைத்தெளிந்தெழுந்து கோபங்கைசெய்து பாம்பைப்
போலுஞ்சீறிவெகுண்டு தேரிலேறி விழிகளில்தீப்பொறிபறக்கப்பல்லை
நெறநெறவெனக்கடித்து நீண்டுபாரித்திருக்கின்ற வில்லையெடுத்துவ
ளைத்து அனேகதேவாஸ்திரங்களை ஒன்றன்பின்னொன்றாகப் பிரயோ
கஞ்செய்தனன் அவ்வஸ்திரங்கள் வில்விடத்திலிருந்து வெளிபட்டுஒன்
றேயொன்றாய்ந்து சடசடவென்னுந் தொனியுடனே நெருப்புப்
பொறிகளை கக்கிக்கொண்டு அதிகவேகமாய்வர அதைச்சானகியம்ம
ன்கண்டு தனதுவில்லினிடமாக இராமமூர்த்தியால் கொடுக்கப்பெற்
றிருந்த இராமபாணத்தையெடுத்து மந்திரோச்சாடனத்துடனே பிர
யோகித்தாள் அந்தராமபாணம் யமகண்டன்விட்ட அஸ்திரங்களைத்து
ம்சப்படுத்தியவனுடையவில்லைக்கண்டித்து இரதத்தை ஆகாயத்திற்

கிளப்பித் திருப்பாற்கடலிற் போய்ஸ்நானஞ் செய்துபின்புசீதாபிராட்டியம்மன் அம்புறுத்தூணியில்வந்தடைந்தது அப்போதுயமகண்டனுடைய இரதமானது ஆகாயத்திற் கிறு கிறு வென்று சுழன்றுகொண்டு கீழேவிழுந்தது அப்போதுயமகண்டன் கீழேவிழுந்ததை பார்த்துதனக்குபின் னுதவியில்லாதபடியால சயமாரிமாய்கை யென்னுமுருவத்தை யெடுக்கவேண்டுமென் றெண்ணியோசனைபண்ணி ஆகாயத்திற்கிளம்பிமேகமண்டலம்போய்மறைந்து விசுவரூபங்கொண்டு அங்ககாரபடுத்திவந்து ஆகாயமார்க்கத்திலநின்று புட்பகவிமானத்தையும் சீதாபிராட்டியையும ஸ்ரீராமசுவாமியையும் இவர்களை யொருகையிலெடுத்துக்கொண்டுமறறொருகையில இலட்சுமணர்பரதர்சத்தருக்கர்ஐம்பத்தாறுதேசத்தரசர்கள் வீற்றிருக்கிற இரதத்தையுமெடுத்துக்கொண்டு ஆகாயமார்க்கம் போகும்போது ஸ்ரீராமசுவாமி இலட்சுமணர் பரதர்சத்துருக்கர் ஐம்பத்தாறுதேசத்தரசர்களும் மனங்கலங்கித்தியங்கி மயங்கினாற்போல் நின்றுகொண்டு ஆஞ்சநேயரைப்பார்த்துஒப்வாய்வுபகவான்புத்திரரே இந்தஆபத்தைக் காக்கவேண்டும்எங்களைத்திக்கவேண்டுமென்று சகலராசர்களும்தோத்திரஞ்செய்யும்போது ஆஞ்சநேயர்பார்த்து ஆபத்தைக்காக்கவேண்டுமென்று விசுவரூபங்கொண்டு ஆகாயமட்டும்வளர்ந்து ஆங்காரவோங்காரத்துடனே விசிப்பிறகிளம்பி அந்தயமகண்டனைத் துரத்திக்கொண்டு மறுபடியும் நான்குநாழிகை பரியந்தம் ஒருவர்க்கொருவர்யுத்தஞ்செய்தராய்ப்போராடித் தேரைக்கொண்டுவந்து பூமியில் நிறுத்தினார் அப்போதுயமகண்டன் ஆகாயத்தில்நின்றுஅவனிற்பதை ஆஞ்சநேயர் பார்த்துஇந்தச்சண்டாளனான யமகண்டன் இன்னும்மாய்கைசெய்வான்போல் காணப்படுகின்றன நாம்சும்மா விருக்கலாகாதென்று ஆகாயத்திற்கிளம்பிசனனுடைய மாய்கையால் ஓங்கித்தாக்கி அவன்தலையிற்குட்டக்கையிற்றட்டினார் அக்குட்டினால் யமகண்டன் மனம் கலங்கி மகாதயரத்துடனே வந்துபூமியில விழுந்தான் அவன்விழுந்தசத்தம்ஆகாயம் பூமியிவ்விரண்டும் அதிர்ந்தது அதைச்சீதாபிராட்டியம்மன் பார்த்துப்பிரமாஸ்திரத்தை எடுத்து தூபதீபங்கொடுத்து வில்லைதொடுத்து வேகமாகவிடுத்தா ளவ்வஸ்திரமானது கோடைகாலத்திடிப்போலச் சிறிமீறி நெருப்பைகக்கிக்கொண்டு எரிகிறபோது யமகண்டனுடைய இருபத்தஞ்சு சிரசையும அறுத்துவிட்டுச்சமுத்திரத்திற்போய்ஸ்நானஞ்செய்து சீதாபிராட்டியுடைய அம்புறுப்பொதியில் வந்தடைந்தது.

அப்போதுசகலருஞ் சந்தோஷப் பட்டார்கள் சகாக்கடலைவிட்டார்கள் அப்பொழுது சுகராசனானவர்ன் விநாவிலோடிச் சடதக

ன்நிறைந்த கொலுவாயிருக்கிறசமயத்தில் யமகண்டன் ஆவியிழந்தய
ம்பதிக்குப்போனவிசேடமெல்லாஞ்சொன்னார்கள் அவ்வார்த்தையை
ச்சதகண்டன்கேட்டு மரணத்திற்குச் சமமையாய் மூர்ச்சையடைந்து
நெடுநேரஞ் சென்றபின்பு மூர்ச்சைதெளிந் தெழுந்திருந்து புலம்புகி
றான் அடாமகனே செல்வக்கொழுந்தே தேடவொண்ணுக் கண்மணி
யேஎங்கொளிந்தாயோ குமாரமணியே மாணிக்கமேதேவாமிர்தமேயு
ன்னைப்பிரிந்தெவ்வண்ணமிருப்பேன் என்சிவரத்தின பூபதியேயென்
றுபலவாறுச்சொல்லிப் புலம்புகிறான் நீயமதர்மதேவனைப்பிடித்துச்
சிறையில்வைத்தாய் அச்சாயர்த்திய மெங்கொளித்து திரிமூர்த்திகளு
முன்னைக்கண்டால் எதிரில்லார்கள் யாதொன்றுஞ்செல்லார்கள்பின்
சொல்லார்கள் உன்னைவெல்லார்கள் மகனேதேவர்களும் மூவர்களபா
வர்களும்கண்ணெடுத்துப்பாரார்கள் அவர்களிப்போது பரியாசஞ்செ
ய்வார்களேயென்று ஆதிதுக்கத்துடனிருக்கச்சே அந்தபுரத்தில் இ
வ்விசேடத்தைக்கேட்ட இராட்சதஸ்திரீகளெல்லாம் மாரிழவுமயிரிழ
வுகொண்டாடினார்கள் ஒப்பாரியாடினார்கள் இப்படியிருக்க யமகண்ட
ன்மனைவியாகிய மகேந்திச்சாலியெனபவள்புலம்புகிறாள் ஆஎன்னாசை
க்கணவா என்னருமைத்துணைவா என்சிரோமணியே அமிர்தமேயெ
ன்காமகுரோதமே யிரசமே இரதியு தன்மகனும் குடியிருந்தாற்போ
லிருந்தீரே என்னைத்தனியாய் ஆருமில்லா அநாதியாய்விட்டுப்பிரிந்தீ
ரேநீர்மாத்திரம்கைலாயத்திற்சேர்ந்தீரே என்னையும்அழைத்துக்கொ
ண்டு போகலாகாதோ நான்செய்ததுதீதோ வகோரயானைபீயேயன் நீர்
பெண்ணைக் கட்டுஞ்செய்தீர் ஆகிலும்பெரிதல்லவென்று மனந்துணிந்
துசொல்லுகிறாள் என்னுபகமே எனக்குச்சம்பாசிராட்டி இவர்கள் எ
னக்குஎவ்வளவு வாமேலாசெலவேயென்று ஆண்மைகூறினீர் கோப
மீயினீசகமாப்பைகையை என்குறறை என்பத்தார் இதுஎத்தவென்று
வாயிலும்வயிற்றிலு மடித்துக்கொண்டு மரணத்திரைக்குச்சமமையாய்
மூர்ச்சையடைந்தாள் இவ்விசேடத்தைத் தோழிப்பெண்கள் ஓடிவந்
துஇராசசுவாமி எங்கள் மகேந்திரசாலி யழகுபுரண்டு மூர்ச்சையாய்வி
ழுந்துகிடக்கிறாள் சுவாமியென்றார்கள் அவ்விசேடத்தைக்கேட்டுத்துக்
கசாகரத்தையடையும்போது அவ்வேளையில் பஞ்சகண்டனென்கிறவ
ன் அவனுக்கெக்கதம்ன சிரசபதுதலைகளுமுடையவன் அவன்சத
கண்டனைக்கண்டு தண்டஞ்சமர்ப்பித்துக் கைகட்டி வாய்புதைத்துக்
கொண்டுவாருமையாசுவாமி யிக்காரியத்திற்கு என்னயோசனைசெய்கி
றீர் அடியேனுக்குச்செல்வுகொடுத்தால் நான்போய் அந்தராமலட்சும

னைப்பிடித்துக்கொண்டுவருவேன் நமதுசத்துருக்களுடையஉயிரைவாங்கினாலல்லது சலபானமுஞ்செய்கிறதில்லையென்று சபதங்கூறி யிந்நிமிஷத்தில் நால்வகை சேனைகளையும் வ வழைக்கக் கடவீரென்று சேனாபதிகளுக்கு ஆக்யாபித்தாருடனே சகலசேனாபதிகளும்வள்ளுவனைக்கொண்டு முரசறைவித்தார்கள் அம்முரசின்னோசையைக்கேட்டமாத்திரத்தில் யாவருமவரவர்கள் செய்துக்கொண்டிருந்த கருமங்களையெல்லாம் அந்தந்தவண்ணமேவிடுத்து நால்வகைப்படைகளும் இராசவீதியில்கூடினார்கள் இப்பால்தனக்குமரணமேயில்லையென்று தீர்மானித்துப்பகைவர்களையெல்லாமதிரணமாகநினைத்திருக்கின்றசதகண்டனும்நாற்புறத்துங்கவரிவீச இராட்சதர்கள் முத்துக்கொடைபிடிக்க ஆயுதசாலையுள்ளேநுழைந்துபொன்னுசையுடுத்தி இடையிற்பட்டுக்கச்சையையிறுக்கி கூர்மையாய்ச் சொலித்திருக்கும் வச்சிரவாளாயுதத்தைமடியிற்செருகி மேககர்ச்சனையையொப்பச்சொலிக்கும் வீரகண்டாமணியைப்பக்கத்திற்கட்டி விசாலமகிய மார்பினிடத்து வைரங்களினாற்சேர்த்திருக்கும் அபேத்யகவசத்தைதரித்து மின்னலையொப்பப்பிரகாசித்திருக்கும் அலகையுடைய கொடியமாணிக்கங்கள்நிறைந்திருக்கும் அம்புறாத்தூணியை முதுகிலிறுக்கித் தங்கத்தினாற்செய்துபிரகாசித்திருக்கின்றவீரப்பட்டத்தை நெற்றியிற்கட்டிமற்றும்போர்கோலத்திற்குரிய ஆயுதங்களையுந்தரித்து நவரத்தினமயமாகவிளங்கும் கிரீடத்திலே தும்பைமலர்மாலையைச்சுற்றி மகாகிரியைப்போலப்பாரித்துப்பொற்கட்டுகள்பொருந்திய இருக்கங்களிலும் மணிகள்சப்திக்கவில்லைவளைத்தெடுத்து வீரலட்சுமியைத் தொழுதுபோற்றி விடைபெற்றுக்கொண்டு ஆயுதச்சாலையைக்கடந்து ஜயவுற்சாகத்துடன்வெளிவந்தனன் அச்சமயத்தில் சிலதூதர்கள் அவனைப்பணிந்தெழுந்து ஆண்டவனே அந்தவானரசேனைகளுடன்நமது இராட்சதசேனைகள் எதிர்த்துயுத்தஞ்செய்யவலியற்றவர்களாய் காற்றினசையும்பாவிவோடிப்போனார்கள்மகாபலவானாகிய யமகண்டனும் ஒருசிறியபெண் முன்னின்றுயுத்தஞ்செய்யவல்லமையில்லாமல் அந்தப்பெண்ணின் அஸ்திரங்களினாலேவெட்டுண்டுவிழுந்தான் அவர்களுடைய அஸ்திரங்களின்பெருமைகளையாரால்விவரித்துச்சொல்லக்கூடும் அதுவுமில்லாமல் அனுமானென்னும்ஒரு பெருங்குரங்கிருக்கின்றது அதுநம்முடையசேனையைக்கண்டவுடனே மலைகளினாலும்மரங்களினாலும் அடித்துச்சேனையைநாசப்படுத்திவிடுகின்றது அவர்கள்முன்னம்முடைய அஸ்திரங்களும்பயன்பெறாமல்வெட்டுண்டுபோகின்றன ஆகையால்நம் சமாதானமாய்ப்போவதேதக்கது இல்லாவிட்டால்நமதுசேனைகள் நாசப்படுவதுமன்றி நம்முடையஅரசனுநாமும்அனியாயமாகவிப் பெண்ணின் அஸ்திரங்களினாலேவெட்டு

ண்டு விழும்படி நேரிடுமென அதனைக்கேட்ட மாத்திரத்தில் காய்ந்
தபாலானது நெருப்பினாலே சூடேறுந்தோறும் அந்நெருப்பின்மீ
தேபொங்கிவிழுவதுபோல பஞ்சகண்டனுக் கோபமேலிட்டுக் கலக
லவென்று சிரித்து நம்முடையபெயரைக்கேட்டால் திரிவிர்த்திகளு
மநடுங்குவாரென்றால் மற்றவர்கள் அஞ்சுவதருமையோ ஆகிலும்
மானிடப்பெண்ணும் காட்டில் வாசம் செய்கின்ற குரங்குகளும் நம்
மைக்கொல்லத்தக்கதோ நல்லது அவர்களுடைய வல்லமை இப்
போதே அறிந்து அந்த குரங்கு கூட்டங்களை நாசஞ்செய்து அப்
பெண்ணை நமது இரதத்திலேற்றிக் கோட்டைக்கு கொண்டுவராவி
ட்டால் என் பெயர் பஞ்சகண்டனோவெனக்கூறி சில வீரர்களுக்கு
த்தேரும் சில வீரர்களுக்கு அஸ்திரசஸ்திரங்களும் சில வீரர்களு
க்குக் கிராமங்களும் சில வீரர்களுக்கு வஸ்திராபரணங்களும் சில
வீரர்களுக்கு குதிரைகளுங்கொடுத்து தானுந் தேறிலேறி இரண
பேரி-ஜெயபேரி-வெற்றிச்சங்கம்-திமினாகாடிகை-காகளம் - சல்லரி-
முதலிய வாத்தியங்கள் சத்தசாகரங்களைப்போல முழங்கவும் கொ
டி-குடை-சாமரை-ஆலவட்டம்-முதலிய சின்னங்கள் நாற்றிசைக
ளினும் நெருங்கிவரவும் மங்களப்பெண்கள் நடனமாடவும் வழி
கொண்ட தனது தேரில் சேமத்தேர்களும் அச்சேமத்தேர்களைச்சு
ற்றி வீரர்களுடைய தேர்களும் அத்தேர்களைச்சுற்றி யானைகளு மந்
தயானைகளைச்சுற்றி குதிரைகளும் குதிரைகளைச்சுற்றிக் காலாள்க
ளும் புடைசூழ்ந்து நெருங்கி வரும்படியாகத் தனது சேனைகளை
நடத்திக்கொண்டு ஆயிரம் சிங்கங்களும் பேய்க்கொடியும் பூண்ட
தேரின்மேலேறிப் புறப்பட்டனன்.

அப்போது அஷ்டதிசைகளையும் பார்த்து ஆகாயத்திலெழுந்
தூளிப்படலங்கள் எத்தன்மையாயிருந்தமதன்னில் கொடியபாதக
னாகிய சதகண்டன் தனது குலத்தோடு ஜானகியம்மன் சரத்தாலே
வெட்டுண்டு விழுங்காலம் நேரிட்டதென்று பூலோகமனைத்து தன்
னினமாகிய தெய்வலோகத்துக்குச்சென்று அறிவிப்பதுபோலவிரு
ந்தது இவ்வாறு பஞ்சகண்டன் தனது பட்டணத்தினின்று வெளி
கொண்டுவருவதைச் சுக்ரீவன் முதலிய வீரர்கள் பார்த்து ஜானகி
யம்மனைப்பணிந்தெழுந்து அம்மணி வீராதிவீரனாகிய பஞ்சகண்ட
ன் சத்தசாகரங்களைப் போலத் தனது சேனைகளைக் கூட்டிக்கொ
ண்டு இதோ யுத்தத்திற்கு வந்து விட்டானென்று சொல்லிக் கர்ச்
சித்து ஆரவாரத்துடனின்றனர் அதைக்கேட்ட ஜானகியம்மன் தன
துசேனைகளை அணியணியாக நிறுத்தி வில்லை வளைத்து நாணேற்றி
வழிபார்த்து எதிர் நின்றனள்.

இப்பால் இரண்டாசிரம் வெள்ளம் வீரர்களோடு வந்த பஞ்ச
கண்டனுடைய அமைச்சனாகிய டிருதிக்கண்ணனுடனே சுக்ரீவனா
னவன் எதிர்த்து நின்றான். வேறொரு இரண்டாயிரம் வீரர்களோ

வெந்த குரோதலோபன் என்னும் இராட்சதனுடன் அனுமாரானவர் கோடிவானரவீரர் புடைசூழச்சென்று யுத்தஞ்செய்தனர் மற்றொரு இரண்டாயிரம் வீரர்களோடு வந்த துவஜன் ஆகாயன் தூர்த்தன் சார்த்ததூலன் என்னுமிந்நால்வருடன் வசந்தன்-நீலன் நளன்-சபலன்-என்னு மிந்நால்வரும்அம்முறைப்படியே சென்றயுத்தஞ்செய்தார்கள் இன்னும்இவ்வாறே இருதிறப் படைகளிலுமுள்ள அளவற்றவீரர்கள் தங்கள்தங்கள் ஆயுதங்களோடு வேறு வேறுயுத்தஞ் செய்தார்கள்.

அத்தருணத்தில் பஞ்சகண்டனானவன் பார்த்து நமதுவீரர்களைநாசஞ்செய்த மானிடப்பெண்ணெங்கே யெங்கேயென்றுதனது தேரை அதிவேகமாத்தூண்டி ஜானகியம்மனுக்கெதிரில் நிறுத்தி மேருகிரிக்கொப்பாகிய தனதுவில்லையெடுத்து வளைத்துநாணேறிட்டெதிர்த்து யுத்தஞ்செய்தனன். இவ்வாறு இருதிறப்படைகளும் இரதவீரர்களோடு இரதவீரர்களும் கஜவீரர்களோடும் கஜவீரர்களும்குதிரைவீரர்களோடு குதிரைவீரர்களும் காலால்களோடு காலால்களும் கைகலந்து அமோகமானயுத்தத்தைவிளைத்து வருதையில்வானரவீரர்களும் இராட்சசசேனைகளினும் அநேகர் சரீரமுற்றும்சல்லடைக்கண்கள்போல துளையுண்டும்-களைத்தும் இளைத்தும் பதைத்தும்- சோர்ந்தும்- இவ்விதமாகப்படாத பாடுகளைப்பட்டுக் கணக்கிறந்தவீரர்கள் மாண்டனர்,

அப்போது சுக்ரீவனோடெதிர்த்துநின்ற மித்திரனென்பவன் தனதுசேனைகளோடு போர்விளைத்து இருக்கின்றசமயத்தில் பராக்கிரமசாலிகளாகிய வானரசேனைகளுக்கும் அனுமார்முதலிய வீரர்கட்கும் அதிகமாக கோபாவேசமுண்டாகி மித்திரனென்னு மிராட்சசனுடைய நால்வகைசேனைகளிலும்புகுந்து சிலதைக்காலினாலுதைத்து உருட்டியும் சிலவை பூமியிற்றேய்த்தும் சிலவைகுடல்சரிய மிதித்தும் சிலவைப்பஞ்சுபோலச் சதைத்தும் சிலவைத்தூக்கிபூமியிலறைந்து சிலவைச்சாத்திக் கைகளிலெறிந்தும்சிலவைச் சமுத்திரங்களில்வீசியும் சிலவை ஆகாயத்திலெறிந்தும் சிலவைமூளைகள் சிதற தண்டங்களால்மோதியும்சிலவைக்காங்கள் தேர்கள்முதலியவைகள் நொறுங்க வாள்களினால்வெட்டியும் சிலவைப்பந்தாக வெறிந்தும்இவ்விதமாக சூறாவளியை நிகர்த்துவளைந்துவளைந்து ஒருவரையும்அப்புறம் இப்புறம்அகலவொட்டாமல் குதித்துக்குதித்துக் கடலைக்கலக்கிய மத்துக்கொப்பாக அலைத்துமாய்த்தனர்அதைமித்திரனென்பவன்கண்டுவடவாக்கினியை யொப்பச்சீறிவானரசேனைகளிற்பாய்ந்து சிரங்கள்-சுரங்கங்கள்-துடைகள்-மார்புக்கள் முதலியவைகளைக்கண்டித்து இவைகள் மீன்கிளையொப்பாக இரத்த வெள்ளத்தில் மிழ்ந்தும், அழுந்தியும் போகும்படியாகச் செய்து அளவற்றயானை

களையும் குதிரைகளையும் கால்வேறுதலைவேறாகத் துண்டிக்குலா
லஞ்சக்கரம்போலவும் பிரசண்டமாருதம்போலவும் மாறிமாறிக்கர
ங்களினாலும் அளவிறந்தவானரவீரர்களை அதஞ்செய்தனன் அதை
க்கண்ட சுக்ரீவன்வடவாக்கினியைப்போலச்சீறி யெழுந்து தனது
தேரைவிரைவிற் செலுத்திவந்து தனது வில்லைவளைத்துக்குணதொ
னிசெய்து சோனைமழைநாணும்படிக்கு ஆயிரங்குரூரமாகியகணைக
ளைக்கரவேகமாகச் சொரிந்து அவனது விலலைமுறிந்து வேறொருக
தாயுதத்தையுங் கறகறவென்று சுழற்றி அவன்மார்க்குச் சரியாகப்
பிரயோகித்தான் அதைமித்திரன்கண்டு இவன் சாமார்த்தியமும்வீ
ரியமும் விற்சாதுரியமும் கரவேகமும்மிகவும்நன்றென்றுநகைத்து
த்தேவர்களெல்லாம் கண்டுபிரமிக்கும்படி அளவற்றகணைகளைப்பிர
யோகித்து எதிரிவிடுத்தகணைகளையெல்லாம் பொடிபடுத்திமற்றொரு
கதாயுதத்தையும் அவன்பராக்கிரமத்தையுமழித்து ஆர்ப்பரித்தன
ன்உடனே சுக்கிரீவன் காட்டழலையொப்பச்சீறித் தேரினின்றும்பூ
மியிற்குதித்து மித்திரனேறியிருக்கின்ற தேரைக்கரத்தாற் பற்றிக்
கறகறவென்றுசுழற்றி ஆகாயத்தில்விட்டெறிந்தான் எறிந்தவிசை
யில் அந்தத்தேர் சூரியமண்டலந்தாவி சுழன்றுகொண்டேபூமியில்
விழுந்து அச்சுவேறுமச்சுவேறு குத்துக்கால்வேறு கொடுக்கைவே
றாகச்சிதைந்தன அவ் திர்ச்சியினால் மித்திரனென்னு மிராட்சசன்
இரத்தங்களைக்கக்கிக் கொண்டுபற்களுதிர்ந்ததுகண் பொறிகலங்கி
ச்சாவுக்குச் சரியாறுமூர்ச்சையடைந்தான் இவ்விதமாகத் தனது
துணைவனுக்கு நேர்ந்தகுறைவை பிசாசனென்று மிராட்சசன்கண்
டுபற்களை நெறநெறவெனக்கடித்து கோபநகைசெய்து தேரைத்து
ரத்திக்கொண்டுவந்த சுக்ரீவனெதிரில்நிறுத்தி ஒப்பற்றதனது வில்
லைவளைத்து அளவற்ற அஸ்திரங்களைப் பிரயோகித்தான் அவ்வஸ்
திரங்களைச் சுக்ரீவன்தண்டாயுதத்தினாலே துண்டித்து வேறொரு
இரதத்திலேறி விஷச்சுவலைகளை வீசும்படியான வேலாயுதமொன்
றைஎடுத்து அவன்நெற்றிக்குநேராகப்பிரயோகித்தனன் அவ்வேலா
யுதம் வெளிப்பட்டவுடன இடிமின்னல் அக்கினிமுதலானவைகளை
ப்பெருக்கி அதிகவேகமாய்வந்து பிசாசன்செலுத்திய பாணங்களை
யெல்லாம்விழுங்கி அவன்நெற்றியில் உருவிப்பாய்ந்து மூர்ச்சிக்கு
ம்படிசெய்தது அதனால்பிசாசன்மெலிந்து ஆலகாலம்போலத் தன
துதேரை விரைவிற்செலுத்திவந்து விண்ணுலம்மண்ணுலகமுதலா
னவைகள் நடுங்கும்படிக்கு அனேகபாணங்களைத் துண்டித்து அ
வனுடையவில்லைமுறித்துச் சரீரமுழுவதும் துளைபடச்செய்தனன்
உடனே சுக்ரீவன் தேரினின்றுங்குதித்து அட்டகாசஞ்செய்துமே
ருகிரிக்குச்சமதையா ஒருபர்வதத்தைபுஜத்தின்பேரில்தாங்கிவந்து
பிசாசனுடைய தேரின்பேரிலெறிந்தனன் அப்பருவதம்பட்ட மாத்
திரத்திற் பிசாசனுடையதேர்-அச்சுவேறு-மச்சுவேறு குத்துக்கால்
வேறு-கொடுங்கைவேறாக முறிந்துவிழுந்தது உடனே பிசாசன்மற்
றொரு இரதத்திலேறுவதற்குமுன் இந்திரனுங்கண்டு நடுங்கத்தக்க

தாக ஓர் வச்சிராயுதத்தை பிசாசன்மார்பிற்ருக்கினன் அதனுல்பி சாசன் இரத்தங்களைக் கக்கிகொண்டு சாவுக்குச்சரியான மூர்ச் சையடைந்தான் அப்போது சுக்ரீவனுனவன் ஓர் இருப்புலக்கை யைக்கையிற்ருங்கிபிசாசனுடையசேனைகளிற்பாய்ந்தது இராட்சச வீரர்களை அதஞ்செய்ய அதைக்கண்டகுருதிக்கண்ணன்வாயுவேக த்தினுமுந்தி தனது தேரைத்தூத்திவந்து நெடியவில்லைவட்டாகார மாவளைத்துச் சுக்ரீவனுடைய மார்புக்குலக்கா கணக்கற்றகடுரேமா கிய சிலீமுகங்களைத தொடுத்தன் அந்தப்பாணங்களானது ஒன் ரேடொன்று நெருங்கிப்பேரிரைச்சலுடன் சுக்ரீவன்பேரிவ்வா அ வைகளைத் தன்கையிலிருந்த இருப்புலக்கையில் தட்டின அந்தப் பாணங்கள் பொடிப்பொடியாய் நுறுக்கிப்போயின.

அத்தருணத்தில் சானகியம்மனவள் தனதுவில்லைவளைத்து நாணேறிட்டு அனேகதிவ்யபாணங்களைச் சோனைமாரியைப்போல ச்சொரிந்தாள் அந்தபாணங்களை ராட்சசவீரர்கள் பேரிற்பாய்ந்து தலைகளைத் துண்டித்தும்-வயிற்றைகளையும் கிறியும் - குடல்களைச் சரித்து அதஅதஞ்செய்ய இராட்சசவீரர்கள் அந்த பணங்களின் முன்னிற்க வபயற்றவர்களாய்நாற்புறத்திலும்ஒடத்தலைப்பட்டார் அதுகண்டுபிசாசன்நாகம்போலச்சீறி பற்களைநெறநெறவெனக்கடி த்து கண்களில் நெருப்புப்பொறிபறக்கக் கோபதைசெய்து பளா பளார்நம்முடைய சேனைகளின் பராக்கிரமமிகநன்று மிகநன்றென் றுதனதுதெரை ஜானகிபம்மன் எதிரில்நிறுத்தி வில்லைவளைத்து நா ணேறிட்டுநேக அஸ்திரங்களைப் பிரயோகஞ்செய்தனன் அதை கண்டஜானகியம்மாள்புன்னகைசெயது தனதுவில்லில் பத்து அர் த்த சந்திர பணங்களைத்தெடுத்து பிசாசனுடைய அஸ்திரங்களை துண்டித்து அவனுடைய இரத்தையும் புரவிகளையும் சாரதியையு ம்நத்திலேறி விதைந்து ஜானகியம்மனை எதிர்த்து தனதுவில் லில் அனேகசிலீ முகங்களைதொடுத்து அட்டகாசஞ்செய்தனள் அ தை ஜானகியம்மன்கண்டு தன்துவில்லில் ஒருபாணத்தெத தொ டுத்துச் தும்சம்பண்ணி பிசாசன்விட்ட பாணங்களை துண்டு துண் டாக கண்டித்து அவன்மார்பையும் துளைத்தனள் அதனுல்பிசாச ன் மனம்நொந்து மானமும்கோபமும் தன்னை வாதிக்க ரௌத்தி ராகாரமாகக்கோபித்து இரண்டாயிரம் பாணங்களை யேககாலத்தி லே பிரயோகித்து சத்தசாகரங்களும்ஏங்கி வாடும்படிக்கு சங்கநா தஞ்செய்தான்.

உடனே ஜானகியம்மன் தனது வில்லினிடமாக நாராசங்களை நிகர்த்த நுறுதிவ்ய பாணங்களை பிரசன்புயங்களுக்கு லக்காவிடு த்து அவனது பாணங்களையும் வச்சர கவசத்தையும் தேரையுங்

பொடி பொடியாகச் செய்தனன் அப்போது பிசாசன்வேறொருரத
த்திலேறி அனேகதிவ்விய பாணங்களைச் சானகியம்மான் சிரத்துக்
கிலக்காகவிடுத்தான் அதைக்கண்ட ஜானகியம்மன் தனதுவில்லில்
அநேக நாராசபாணங்களைத் தொடுத்து விடுத்துப் பிசாசனுடைய
கரத்தையு முறித்தனள் அப்பொழுது பிசாசன்மிகுந்த கோபாவே
சத்துடனே ஓர்கதாயுதத்தை வலதுகையிற்றூங்கி எதிரில்நின்றவா
ரைகளின் தலைகளையுடைத்து சானகியம்மன்தேரிமேலறநேர்ந்தனன்
உடனே சானகியம்மன் தனதுவில்லில் நாராயணாஸ்திரத்தை யெ
டுத்துப் பிசாசன்சிரத்துக் கிலக்காக விடுத்தாள் அந்தபாணம்பேரி
ரைச்சலுடன் புகுபுகுவென்று அவற்பொறிகளை சுக்கிக்கொண்டு
வந்து பிசாசனுடைய தண்டத்தைத் தாள்படுத்தி அவனுடைய சி
றத்தை யறுந்தெறிந்து மீண்டும்சானகியம்மன் அம்புராத்தூளியி
ல் வந்தடைந்தது இச்சம்ரிவத்தைக் குருதிக்கண்ணன் கண்டுமன
மானது பதைக்கப்பொங்கி இம்மானிடப் பெண்ணை இந்தநிமி
ஷத்தில் அடைக்கி வாட்டுவேனெனச் சபதம்பேசித் தனதுதேரை
விரைவாகச் செணித்திவந்து சானகியம்மன்எதிரில்நிறுத்தித் தங்க
க்கட்டுகள் பிகிந்து வெற்றிமாலையை அணிந்திருக்கின்றதனதுயரி
த்த வில்லைவளைத்துஅனந்தமுறைஅளவற்றபாணங்களைப் பிரயோ
கித்தனன் சானகியம்மன் தனதுவில்லிலே அனேக அஸ்திரங்களை
பபிரயோகித்து குருதிகண்ணன் விட்ட பாணங்களைக் கண்டித்து
அவனுடைய இரதத்தையும் வில்லையுமுறித்தெறிந்தனள் குருதிக்
கண்ணன் வேறொரு ரதத்தையும்வில்லையுமெடுத்து சர்ப்பம்போல
சீறிதிசையாதிகள் பயந்தநேதடக்கர்ச்சித்துப்படைகளிற் சிரேஷ்ட
மாகிய பிரமாஸ்திரத்தை பிரயோகித்தனன் அவ்வஸ்திரம் வெளிப்
பட்டமாத்திரத்தில் சானகியம்மன் ஒருவேலாயுதத்தை விட்டுப்பி
ரம்மாஸ்திரத்தைப் பொடிப்பொடியாக்கி பின்னுமொரு அர்த்தசந்
திர பாணத்தை விடுத்துக் குருதிக்கண்ணனது புட்பமாலையணிந்த
மார்பைப்பிளந்தனள் அதனால்குருதிக்கண்ணன் தேரின் மீதில் வி
ழுந்துமூர்ச்சை யடைந்தான் உடனே சானகியம்மன் தனதுவில்லி
னிடமாக இராமபாணங்களை இராட்சச வீரர்களுக்கிலக்காகப்பிர
யோகித்தாள் அந்தப்பாணங்கள் ஒன்றனந்தமாகப்பெருகி இராட்
சசவீரர்கள் தேகத்தைச் சல்லடைக்கண்களாகதுளைத்துயானைகள்
குதிரைகள் நாசஞ்செய்ய அதனால் பெருங்கூச்ச லுண்டாயின அ
க்கூச்சலினால் முன்மூர்ச்சித்திருந்தகுருதிக்கண்ணன் மூர்ச்சை தெ
ளிந்தெழுந்து கோபதீப்தனாப்தனதுதேரைக்குலாலன் சக்கரத்தை

ப்போலத்திருப்பிக் கோடானகோடி பாணங்களை சானகியம்மன் பேரிற் பிரயோகித்தான் உடனே சானகியம்மன் அனேகமான ராமபாணங்களைப் பிரயோகஞ்செய்து அவன்விட்ட பாணங்களை எல்லாங்கண்டித்து அவனுடையவிருதுக்கொடியையும் வில்லையுமொடித்துஎறிந்து வேறொரு வில்லையெடுக்குமுன்னம் அவனுடைய தேரையும் சக்கைச்சத்தையாகப் பேர்த்தெறிந்தனள் உடனேகுருதிக்கண்ணன் சரேலென்று வேறொருதேறிற்பாய்ந்தூர் மற்றொருவில்லிலேமுப்பது பாணங்களைத் தூண்டிமுகத்திற்கிலக்காகப்பத்து பாணங்களும் பிரயோகஞ் செய்தான் அந்த பாணங்கள் ஒன்றோடொன்று நெறுங்கிவர அதைசானகியம்மன் கண்டுதனது வில்லில் பத்துநாகாஸ்திரத்தைத் தொடுத்து விடுத்தாள் அந்தப்பாணம் அழற்பொறிகளை நாற்புரத்திலும்வீசி அதிகவேகமாகவந்துகுருதிக்கண்ணன்விட்ட முப்பதுபாணங்களைக் கண்டித்து அவனுடைய அம்புறாத்தூணியையும் வில்லையும் தூளாக்கி அவனது நெஞ்சில்உருவிப்பாய் நேர்ந்தது அப்போதுகுருதிக் கண்ணனானவன் மனம்வாதிக்கச் சர்ப்பத்தைப்போலே சீறித்தனது நெஞ்சிற்கிலக்காகவரும் அஸ்திரத்தைக் கையாற் பிடித்தெறிந்தனன்.

உடனே ஜானகியம்மனானவள் தனதுவில்லில் பத்துபாணங்களைத்தொடுத்துக் குருதிக்கண்ணன் விடுக்கும் பாணங்களையும் இரத்தம், கவசம்,வில்,கொடி. குடை, தூணிமுதலானவைகளையும்பொடிபடுத்தி வேறே மூன்றுபாணங்களை அவன்நெற்றிக்கிலக்காகப்பிரயோகித்தனள் அக்காலத்திலே குருதிக்கண்ணனென்பவன் பஞ்சேந்திரிய நிலைகள்பேதிக்க மயங்கி மாண்டவனைப்போல் தேரினின்றும்விழுந்துநெடுநேரம்வரைபூர்ச்சித்தனக்கிஉன்னமீட்டுந்தெளிரு வில்லிலே அளவற்ற கடோரமாகிய பாணங்களை கோடைவருஷத்தைப்போலத் தூண்டிப் பிரயோகஞ் செய்தான் அதை ஜானகியம்மன்கண்டு கோடானகோடி குரூரமாகிய பாணங்களை முகத்தில் தூண்டி அப்பாதகன் விடுத்தபாணங்களையெல்லாங்கண்டித்து அவனேறி நடாத்துகின்றதேரோடு சேமத்தேர் முதலானவைகளையும அழித்துத்தும்சஞ்செய்தனள் அதற்குமேல் குருதிக்கண்ணனானவன் கருடனைப்போலே ஆகாயத்தில் பாந்துஇந்திராஸ்திரம் வாய்வாஸ்திரம் கும்பகாஸ்திரம்பாசுபதாஸ்திரம் முதலான தெய்வப்படைகளைகஒவ்வொன்றாகத் துண்டி ஆர்ப்பரித்தனன் பின்னர் அவைகளெல்லாம் ஒன்றோடொன்று நெருங்கிவருவதை ஜானகியம்மனானவள் கண்டு ஓர்பாசுபதாஸ்திரத்தைவிடுத்துக் குருதிக்கவிட்டண்ணடபசணங்களை எல்லாம்தும்சஞ்செய்தாள் இவ்வாறுவிட்ட தேவதாஸ்

திரங்களெல்லாம் அபலமாய்ப் போனதைக் குருதிக்கண்ணன் கண்டு இவளை இந்தநிமிஷத்தில் யமலோகத்துக்கனுப்புகின்றேனென்று ஆக்கிரமித்துத் தனதுவாளையுருவெட்டநேர்ந்தனன்! அப்போது ஜானகியம்மனவள் புன்னகைசெய்து தனது மகத்துவமுள்ள வில்லினிடமாக மூன்று இராமபணத்தைத்தொடுத்து அவன்கழுத்துக்கிலக்காக விடுத்தாள் அந்தப்பாணம்கோடையிடியைப்போலக் குமிறி அனற்பொறிகளைக் கக்கிக்கொண்டுபோய் குருதிக்கண்ணன் சிரத்தை யறுத்தெறிந்துமீண்டும் ஜானகியம்மன் அம்புறுத்தூணியில்வந்தடைந்தது.

அதைகண்டமித்திரனென்றுமிராட்சதன் தனதுதேரை விரைவாகச்செலுத்தி ஜானகியம்மனெதிரில் நிறுத்தித் தனது வில்லைவளைத்து அநேகதிவ்வியாஸ்திரங்களைப்பிரயோகித்து அட்டகாசஞ்செய்தனன் அதைஜானகியம்மனவள் பார்த்துஇவன்மிகுந்தபராக்கிரமசாலியென்று மதித்துத் தனது வில்லிலே இருபாதுபாணத்தை தொடுத்து இவனுடைய கவசத்தைக் கிழித்துக்கிரீடத்தையுடைத்து வில்லைமுறித்து அவனுடையமார்பையும்பத்தகாலக்கிழித்துகை கொட்டிச் சிறித்தனள் அத்தருணத்தில்மித்திரனென்பவன் அக்கினியாஸ்திரத்தை யெடுத்து மந்திரோச்சாடனத்துடனே பிரயோகஞ்செய்தான் அவ்வஸ்திரம் நாற்புறங்களிலும் அனற்பொறிகளை யிறைத்து ஜடஜட்வென்னுந்தொனியுடனே யெரிந்துக்கொண்டுவருவதை ஜான்கியம்மனவள் கண்டு உடனே தனதுவில்லில் வருணாஸ்திரத்தைதொடுத்து அக்கினியாஸ்திரத்தை நாசஞ்செய்து ஒருசத்தியையெடுத்து அபிமந்திரித்துக்கறகறவென்றுசுழற்றிமித்திரன் மார்பில்தாக்கினள் உடனே மித்திரனவன் கோடையிடையைப்போல் இறைந்துகொண்டு நிலத்திலவீழ்ந்துருண்டுபிராணநீங்கிவீரசொர்க்கத்தையடைந்தான் அத்தருணத்தில் வானரவீரர்கள் ஜெயவுச்சாகத்துடனே பஞ்சகண்டனுடைய சேனைகளிற் புகுந்துசிலர்வானத்தை யளாவித்திசைகளிற் கிளைகிளைப்பரப்பித்தழைத்தோங்கியிருக்கின்ற மாமரமுதலியபருத்த விருட்சங்களை வேருடனே பிடுங்கி சுழற்றி இராட்சசவீரர்களைச் சாடியம் சிலவானரர் மேருவிக்குச் சமதையாபாரித்திருக்கின்ற பர்வதங்கள் பெயர்த்தொடுத்துயானைகளின்மேல் மோதியும் சிலவானர்-கழுமுன் சக்கரம்-பிண்டிபாலம்-வேல்தண்டம்-இருப்புலக்கை முதலியஇராட்சசர்களின் மேற்றூக்கிக் கொக்கரித்து ஆர்ப்பரித்தனர் அத்தருணத்தில் அனு

மாரானவர் யானைகூட்டத்திற்பாய்ந்து அளவற்றயானைகளை யொன்
றாகச்சேர்த்துப் பிடித்துக்கிறுகிறென்று சுழற்றிச்சூரைப் பந்திக
ளின் மீதுசாடியும் சொர்ணமயமாய் இரத்தினகாந்திகளைவீசிம் பா
ரித்திருக்கின்ற இரதங்களையெடுத்து மதயானைகளின்மீது வீசியும்
இராட்சசவீரர்களை இருப்புலக்கையினாலே மோதிமண்டைகளையு
டைத்தும் காதும்கமுறிதலை கரங்களை யொடித்தும் வாய்பிளக்க
வறைந்தும் இராட்சசவீரர்களை நாசப்படுத்துவரையும் மகாசூரா
திசூரர்களாகிய மித்திரன்பிசாசன் குருதிக்கண்ணான் முதலானவ
ர்கள் மானையுடையசர்ப்பத்தைப்போலச்சீறி நல்லகாரியம்நயலகா
ரியமென்று கோபநகைசெய்து அற்பராகிய மானிடருக்கும் காட்
டிற்சஞ்சாரஞ்செய்கின்ற குரங்குகளுக்கும் நம்முடைய சேனைகள்
பயந்து இப்படிதவிப்பரோ அதுவுமன்றி வீராதிவீரர்களான நம்
முடைய சேனாதிபதிகளும்இந்தப்பெண்ணின் அஸ்திரங்களினாலே
இவர்கள் வீருப்பையடக்கி யமலோகங்குடி யேற்றுவேனென்றுகா
லாதனைப்போலக் கொதித்தெழுந்துவில்லைமண்டலகாரமாக வளைத்
துச் சகலருந்திடுங்கிடத்தக்கதாக குணத்தொனிசெய்து ஒருபுற
த்தில் விஷத்துவையலிட்டிருக்கின்ற கொடியபாண,வருஷங்களைப்
பொழிந்தும் ஒருபுறத்தில் கணிச்சிசக்கரம் வேல்சூலம் முசலம் த
ண்டம் கப்பணம் பிண்டிபாலம் முதலியபடைகளைக் கடாவியும் ஒ
ருபுறத்தில் பிரமாஸ்திரம் வருணாஸ்திரம் குபேராஸ்ரம் அக்கினி
யாஸ்திரம் முதலாகியதெய்வப்படைகளை பிரயோகித்தும்ஒருபுறத்
தில் வானரர்களவீசுகின்ற விருட்சங்களும் பருவதங்களும்பொடி
பொடியாக பலகணைகளைத்தூண்டியும் இவ்வாறு சூறாவாளியைப்
போல நாற்றிசைகளினுஞ் சுழன்று யமோகப்பிரயோகத்த அஸ்தி
ரங்களானவை வலையைவீசியதைப போலப்பலதிசையிலும் சுற்றிக்
கொண்டு வானரவீரர்களுடைய பரித்தகால்களைக்கடித்தும் பருத்
திருக்கின்ற தோள்களைச் செறித்தும் நீண்டிருக்குங்கரங்களைத்தரி
த்தும் சிவந்தமயிரையுடைய கிரங்களைவெட்டியதும் விசாலமாய்ப்
பிளந்தும் தும்சஞ்செய்தனர்.

அதனால்வானர வீரர்கள் மெலிந்துகோபாவேச மிஞ்சினவரா
ய்ப் பற்களைநறநறவெனக்கடித்து அட்டகாசஞ்செய்து சிலவீரர்ம
லைகளைப்பேர்த்து வானரச்சேனைகள் மீதுதாக்கினார்கள் சிலவானர
ர்பாரித்திருக்கிற விருட்சங்களை வேரோடுபிடுங்கி இராட்சதர்கள்சி
ரங்களுடையும்படி மோதினார்கள்சிலர் இருப்புலக்கையினாற் சாடி
னார்கள் சிலவானரர் வச்சிர்த்துக்கொப்பாகிய கதாயுதகளைக் கற
கறவென்றுசுழற்றி இராசாக்களின் மார்பின்மீது தாக்கினார்கள் இ
வ்விதமாக வானரவிரர்கள் கொடிய போரினைச்செய்து கெர்ச்சி
த்தார்கள் அதனாலே இராட்சச வீரர்கள்அல்லோ கல்லோலப்
பட்டு பண்டைதிறந்தும் மூளைகள் சிதறியும் வழிகள் தெரிந்தும்

வஞ்சகம்பேசும் வாய்கள்பிளந்தும் பற்களுதிர்ந்தும் அதிகவானத்
தையொத்ததலைகள்பறந்தும்வலியகழுத்துகளொடிந்தும் மலையை
யொத்தபுஜங்கள் சரிந்தும் கரங்கள்முறிந்தும்மார்புநெக்குவிட்டும்
வயிறுகிழிந்தும் குடல்களிதைந்தும் தொடைகள் தகர்ந்தும் கால்
கள்தறிந்தும் சரீரமெங்கும் பத்தல்பத்தலாய்வெடித்தும் உறுப்
புகள்சக்கைசக்கையாய் வெட்டுண்டும் சதைந்தும் சிதைந்தும் நில
த்திற்புதைந்தும் அலைந்தும்சோர்ந்தும் வர்ச்சித்தும் துகள்பட்டும்
மாண்டு மயங்கியும் இவ்விதமாகப்படாத பாடுகள்பட்டு மடிந்தவ
ர்கள்பேதைக்கண்ட நாற்றிசையினும் சிதறியோடத் தலைப்பட்டா
ர்கள், அதைக்கண்ட பஞ்சகண்டனும் மிகுந்த கோபாக்கிரந்தனாய்
தனதுதேரைத்துரத்தி ஓடுகின்றவீரர்கள் ஓடாதீர்களென்று தடுத்
துத்தைரியங்கூறி எல்லோரையுமொருமிக்கச்சேர்த்து வானரசே
னைகளில் வந்துபாய்ந்து அஸ்திரசஸ்திரங்களை ஒன்றனந்தமாகப்
பிரயோகஞ்செய்ய அதைக்கண்ட ஜானகியம்மன்பாவமேயுருக்கொ
ண்டிருப்பது போலக்கரிய தேகங்களைப்படைத்த இராட்சசர்களு
க்குத் தலைவனாகிக் கொப்பாதகங்கள் குடிக்கொண்டிருக்கும் மன
த்தினைப்பெற்ற பஞ்சகண்டனெதிரில் தனது தேரையதிவேகமா
கச்செலுத்திகொண்டு வந்து தங்ககட்டுகள் பிகிந்திருக்கின்றதனது
வில்லைவளைத்து அண்டங்களதிரக் குணத்தொனிசெய்து குரூரமா
கிய ஆயிரம்பாணக்கோட்டை மழைபோலபொழிந்து பஞ்சகண்ட
ன் பிரயோகித்த பாணங்கள் யெல்லாம் துண்டுதுண்டாய்வெட்டி
மட்டுந் தீயையொத்த ஆயிரம்பாணங்களை அவன்சரீரமெங்கும் து
ளைக்கும் படியாகப் பிரயோகித்தனள் உடனே பஞ்சகண்டன்தன
துவில்லில் ஆயிரம்பாணங்களைத்தூண்டி எதிர்த்துவருகின்ற பாண
ங்களைச் சின்னாபின்னப்படுத்தி யீட்டும்பத்துபாணங்களைப்பிரயோ
கஞ்செய்தனன் அதைகண்ட ஜானகியம்மன் பத்துபாணங்களைப்
பிரயோகித்துப் பஞ்சகண்டன்விட்ட அஸ்திரங்களைவிடுத்துப்பஞ்
சகண்டனுடைய சாரதியைவெட்டிக்குதிரையை அறுத்துஅவனே
றியிருந்ததேரையும் பொடிபடுத்தினள் அப்போதுபஞ்சகண்டன்
வேறொருதேரிலேறி எட்டுபாணங்களை மந்திரோச்சாடத்துடனே
பிரயோகித்தனன் அதையும் ஜானகியம்மன்கண்டித்து ஒருவச்சிர
வாளியை எடுத்துப் பஞ்சகண்டன்நெற்றிக்கிலக்காகப்பிரயோகித்
தனள் அதுவெளிப்பட்டு குறிதப்பாமல்வந்து பஞ்சகண்டன்நெற்
றியிற்பாய அதனால்தேரின்மீது மூர்ச்சித்து விழுந்தனன் உடனே
ஜானகியம்மன் இராட்சசசேனைகளின்மீது அஸ்திரசஸ்திரங்களை

ஒன்றனந்தமாகப்பிரயோகஞ்செய்துபஞ்சகண்டனைஎதிர்பார்த்திருந்தனள் அத்தருணத்தில் பஞ்சகண்டன் கனைதெளுந்தெழுந்திருந்து கோபாக்கிராந்தனாய்ச் சிறியோர்நொடிப்போதில் ஆயிரங்கணைகளைத்தூண்டி பஞ்சகண்ணுடையகிரீடத்தையும் வில்லையும் தேரையும் சிதையழித்தி இராட்சசர்களெல்லாம் கலங்கும்படியாக சங்கநாதஞ்செய்தனள் உடனே பஞ்சகண்டன் நாணமுற்று மனதில்பாணம்வாதிக்க வேறேயொருதேரையும்வில்லையுமெடுத்துக்கொண்டு ஜானகியம்மன் எதிர்நிறுத்தி தனது வில்லினிடமாக பத்துபாணங்களைத் தொடுத்துவிடுத்தான் அந்தபாணங்கள் ஒன்றோடொன்று நெருங்கிவருதலை ஜானகியம்மன்கண்டு நூறுவயிரக்கணைகளை அவன்மார்புக்குநேராகவிடுத்தாள் அந்தபாணங்கள் ஒன்றோடொன்று நெருங்கிப் பஞ்சகண்டன்விட்ட பாணங்களைத் தூள்படுத்தி மீறிவருவதைப் பஞ்சகண்டன்கண்டுமனங்கொதித்து முப்பதுபாணத்தைவிடுத்து எதிர்த்துவரும்படைகளைக் கண்டித்துப்பின்னும்இருப்பது பாணங்களைவிடுத்தான் அக்கணைகளையும் ஜானகியம்மன் தும்சம்படுத்தித் தனதுவில்லில் அளவற்ற கணைகளைப் பிரயோகித்துப் பஞ்சகண்டனுடைய வில்லையும் கவசத்தையும் பிளந்து அவன்தேரையும் ஒடித்தெறிந்தனள் அதைக்கண்டபஞ்சகண்டன் விழிகளிற்றீப்பொறிசிந்தக் கோபநகைசெய்து தனதுவில்லில் கணக்கிறந்த பாணங்களைத் தொடுத்து ஆர்ப்பரித்தனன் அவ்வஸ்திரங்களைக் கண்ட ஜானகியம்மன் கோடைகால மேகத்தைப்போலத்தனதுவில்லில் கணக்கிறந்த குரூரமாகியசரங்கள்பூட்டிப் பிரயோகித்து மீறிவருகின்ற பகைவன் கணைகளைக்கண்டித்தெறிந்து பின்னும்பத்துகணைகளைத்தூண்டி அவனுடையநெற்றி-மார்பு-புயம்-தொடை-இவைகளைத்துளைத்து அவனுடைய சரீரத்தை உதிரமயமாகச்செய்து கைகொட்டி சிரித்தனள்.

அதனால்பஞ்சகண்டன் ஐம்பொறிகலங்கி மிகுந்த ஆயாசத்துடனே சற்றுநேரம்மூர்ச்சையாய்தேரின்மீது சாய்ந்திருந்துகளைதெளிந்து கண்ணைதிறந்துபார்த்து நாமேஇம்மானிடப்பெண்ணினால் துன்பமடைந்து யுததஞ்செய்யச் சக்தியில்லாமல் திரும்புவோமாகில் நம்மவர்கள் நகையார்களோவெனத் தேரித்தனது வில்லில ஆயிரம்பாணங்களைத்தொடுத்து ஜானகியம்மன்மேதறிற இலக்காகப் பிரயோகஞ்செய்தான் இவ்வஸ்திரங்கள் வருதலுமஜானகியம்மன தனது வில்லினிடமாக இருபதுபாணத்தைத தொடுததுவிடுத்துப் பஞ்சகண்டன்விட்டபாணங்களைக்கண்டித்து நாலுபாணத்தைவிடு

த்துப்பஞ்சகண்டன் சிரசிலிருந்த கிரீடத்தை யுடைத்துப்பின்னும் இருபதுபாணத்தை அவன்தேரின்மீது தாக்கினாள் அவ்வஸ்திரங்கள் தாக்கினவுடனே பஞ்சகண்டனுடைய தேரானது குயவன் திகிரியைப்போல் கறகறவென்று சுழலுவதினால்பஞ்சகண்டன்நிலை கலங்கித் தேரின்மீதிருக்கச் சக்தியற்றவனாய் கையிலிருந்தவில்லினுடனே பூமியிற்குதித்து வேறொருதேரின்மீதேறி மானறுங்கோபமுந்தன்னைவருத்த அனேக அஸ்திரங்களைப்பிரயோகித்துத் திகைத்து நின்றனன்.

அவ்வஸ்திரங்களை சீதாபிராட்டியம்மன் நெருங்குமுன்னமே அதிகவிரைவாக கண்டுத்தெறிந்துபின்னும் தமது வில்லினிடமாகப் பத்துபாணங்களால் துளைத்து இரதம்-கவசம்-வில்-கொடி-குடை-தூணிமுதலானவையும் பொடிபடுத்தி வேறேமூன்றுபாணங்களை அவன்கழுத்துக்கிலக்காகப் பிரயோகித்தனள் அந்தபாணங்கள் ஒன்றோடொன்று நெருங்கித்தகத்தகாயமாய் ஜொலித்துக்கொண்டு பேரிரைச்சலுடன் சிரசைக்கண்டித்துக் கீழேதள்ளிமீண்டு ஜானகியம்மன் அம்புறாத்தூணியிலடைந்தது அதற்குள் சூரியன் அஸ்தமாயினன் அத்தருணத்தில் வானரவீர்கள் கெக்கலித்துப் பஞ்சகண்டன் இறந்தானிறந்தானென்று சங்கநாதஞ்செய்துமகா உச்சாகத்துடனே நமதுசேனைகளை யொன்றாகச்சேர்த்து கூடாரம் வந்தடைந்தார்கள் பஞ்சகண்டனுடன்வந்த இராட்சசவீரர்களில் மாண்டவர்கள் போகமற்றவர்கள் பிழைத்தோம் பிழைதோமென்று ஓட்டம்பிடித்து சதகண்டனெதிரில்வந்து சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு ஐயா ! சதகண்டேஸ்வரா பஞ்சகண்டனும் நம்முடைய சேனைகளும் இரணக்களத்திலே ஒருமானிடப்பெண்ணின் அஸ்திரங்களினால் வெட்டுண்டு விழுந்துபோனார்கள்.

உடனே மாண்டவர்கள் போக மீண்டவர்கள் நாங்கள் நாலைந்துபேர்தானிருக்கிறோம் இனிமேல் அவர்களுடன் சண்டைசெய்வதுயோக்கியமல்லசமாதானமாய்ப்போவதேஉத்தமமென்றுசொல்லி வாய்புதைத்துநின்றார்கள் அவ்வசனங்களையெல்லாம் அருகிலிருந்த இராட்சசசேனாதிபதியாகிய நிஷ்கண்டனென்பவன்கேட்டு மனம்பதைதது வீராவேசத்துடனெழுந்து சதகண்டனெதிரில்நின்று அஞ்சலியஸ்தனாய் வாய்புதைத்துக் கைகட்டிக்கொண்டுசொல்லுகிறான்வாருமையாசுவாமி சதகண்டேஸ்வராநீர் தூதர்கள்சொல்லைக்கேட்டுவருத்தப்படவேண்டாம் அற்பனாகிய அந்தபஞ்சகண்டன் சேனைகளைக்கூட்டிக் கொண்டுபோய்மானிடப்பெண்ணிற்கும் வானரசேனைகளுக்கும் தாரைவார்த்துத்தானும் அந்தபெண்ணின் அஸ்திரத்தினால் வெட்டுண்டுவிழுந்தான் அவனைப்போல என்னையும் நினைக்கவேண்டாம் எனக்குச்செலவுகொடுத்தால் நான்இப்போ

தேபோய் உபாயதந்திரங்களினால் ஸ்ரீராமனுடைய சேனைகளைக் கொன்று இராமலட்சுமணர் சீதாதேவி இவர்களைபிடித்து பின்கட்டாககட்டிக்கொண்டுவருகிறேன் எனக்குச்செலவுகொடுமையாவென்றுகேழ்க்க அப்படியே சதகண்டன் சந்தோஷித்து செலவுகொடுத்து அனுப்பினான்.

ஆறுநாள்காலையில் நிஷ்கண்டனென்பவன் அவனுடனேசேர்ந்தமந்திரிகளையழைத்துக் கோடிராட்சதநூறுவெள்ளம் இரதங்கள் இருநூறுவெள்ளம் யானைகள் இரண்டாயிரம்வெள்ளம் குதிரைகள் இவைகளையெல்லாம் ஒன்றாகச்சேர்த்துயுத்தத்திற்குப் பயணமென்று ரணபேரியடித்து இருநூறுசிங்கங்கள் பூட்டி மேருகிரிக்கொப்பாகப் பாரித்திருக்கின்றதேரின்பேரிலேறி சகலஆயுதபாணியாய்ப்பாரித்தவில்லைவலதுகரத்திற்பிடித்துப் புறப்பட்டுமுப்பத்திரண்டு கோட்டைவாசலுங்கடந்து இரணக்களம்வந்து சேர்ந்தார்கள் இந்தச் சங்கதியை ஆஞ்சநேயர்கேள்விப்பட்டு நிஷ்கண்டனுக்கெதிர்நோக்கிவருகையில் நிஷ்கண்டன் மந்திரிகளைப்பார்த்துக்கேளுங்கள் மந்திரிகளே இவர்களை வஞ்சனையாற் பிடித்துக்கொண்டு போகவேண்டுமே யல்லது அஸ்திரங்களினால் ஜெயிக்க நம்மால்முடியாதென்றுசொல்லி ஆலோசித்துக்கொண்டிருக்கும்போது ஆஞ்சநேயர் நிஷ்கண்டனுக்கெதிரில்வந்து நின்றார் அதைகண்டநிஷ்கண்டன்வாராய் ஆஞ்சநேயரே நீர் அந்த இராமசுவாமியினுடைய தூதன்மகாபலவான் சத்தியவந்தன் உன்னைசெயிப்பதற்குத் திருமூர்த்தியாலுமாகாது அந்தசதகண்டனாலுமாகாது முன்தூதுமார்க்கமாய்வந்தபோது உன்னைப்பிடித்துக்கொள்ளவேண்டுமென்று சதகண்டன் எங்களுடன்சொன்னான் அதற்கு நாங்கள்கூறி தூதுமார்க்கமாய் வந்தவனைவஞ்செய்யலாகாதென்று சொன்னோம் அவன் எங்கள் வார்த்தையைக்கேளாம லும்மைப்பிடித்து யுத்தம்புரிந்தான் உன்னிடத்தில் தேவதாட்சைண்ணிய மிருந்தபடியாலும்அவனிடத்தில் வஞ்சனையிருந்தபடியாலும் அவன்சகோதரர் புத்திரர்கள் சேனாதிபதிகள் அனேகர்மடிந்துபோனார்கள். ஸ்ரீராமமூர்த்தியைச் சரணமடையும்படிநாங்கள்சொல்லத்தக்கவையெல்லாஞ்சொன்னோம்நாங்களென்னபுத்தி சொன்னாலும் இவன் கேட்காமல் எங்களைத் துரத்தி வெட்டவந்தான் ஆகையால்யாவரும் ஸ்ரீராமமூர்த்தியைச் சரணமடைய வந்துவிட்டோம் நீர் இந்தவிசேடங்களைச் சீதாபிராட்டி யம்மனுடன் கூறி எங்களுக்குச் சதகண்டனுடைய பயஞ்சற்றேனுமில்லாமல் எங்களை இரட்சிக்கச்சொல்லும் அந்தப்படிஎங்களுக்குகொடுத்தால் நாங்கள் உமதுசொற்படியே கேட்கிறோமென்று சொன்னார்கள் அப்போது ஆஞ்சநேயர் நிஷ்கண்டமுகத்தைத்

ஏறிட்டுப்பார்த் தாலோசித்து அவன் கபடமாகச் சொல்லுகிறு னென்று ஆஞ்சநேயர் தன்மனதில் நினைத்துச் சொல்லுகிறார்.

அடாமூடா நிஷ்கண்டா உங்களிடத்தில் கபடில்லாமலிருந்தா ல் நாங்கள் சூதுசெய்கிறதில்லையென்று சொல்லிச் சீதாபிராட்டிய ருகில்வந்து சேவித்துச்சொல்லுவீர் வாரும் அம்மா இப்போது யுத்தத்திற்கு வந்திருக்கிறவன் நிஷ்கண்ட னென்னப்பட்ட சேனு பதி அவன் என்னையழைத்துச்சொன்னது யாதென்றால் சதகண் டன்பேரில் கோபமாய்வந்துவிட்டேன் என்னைக் காப்பாற்றவே ணுமென்று சொல்லுகிறன் அவன்முகத்தைப்பார்த்தால் கபடமா கத்தோற்றுகின்றது ஆகையால் இராட்சதரை நம்பக்கூடாது நா மும் அசாக்கிரதையாயிராமல் சாக்கிரதையா யிருக்கவேண்டுமெ ன்று ஆஞ்சநேயர்சொன்னார்.

அப்படியிருக்க நிஷ்கண்டன் தன்னுடைய சேனைகளையழை த்து நீங்கள்யாவரும் ஆயுதங்களை கைற்றொடாமல் சும்மாயிருங்க ளென்று சொல்ல அஸ்தமானவரையில் அப்படியே யிருந்தார்கள் அந்தகாரமான இருள்வந்தபின்பு நடுராத்திரியில் கோடி இராட்ச தரும் இரதத்தின்பேரி லேறிக்கொண்டுவந்து சீதாப்பிராட்டியும் இராமர்-லட்சுமணர்-பரதர்-சத்துருக்கர்முதலிய சேனைகளுமிருக் கின்ற இரதத்தையெடுத்துக்கொண்டு போகிறார்களென்று அனு மார்சொல்ல அப்போது சீதாப்பிராட்டியாருக்கு மிகவுங்கோபம் பெருகி இராமபாணத்தை யெடுத்துத் தூபதீபங்கொடுத்து மந்தி ரோச்சாடனஞ்செய்து ஒவ்வொரு இராட்சதாளுக்கு ஒவ்வொரு பாணமாய்வந்து மார்பிற்பட்டு முதுகிலுருகிப்போவதாகத்தொடு த்துவிட்டாள் அந்த இராட்சதாள் கபடஞ்செய்தபடியால் ஆயுத ங்களைக் கைபிலெடாமலிருந்து இரதகஜதுரகபதாதிகளுடன் ஒவ் வொரு பாணத்தினால் வெட்டுண்டு போனார்கள் பின்பு சீதாபிரா ட்டியம்மன்இரதத்தைத்திருப்பிக்கொண்டு தங்களிருப்பிடம்வந்து சேர்ந்தாள் இந்த விசேடமெல்லாம் வேவுகாரர்கள்போய்ச் சதக ண்ட னுடன் சொன்னார்கள் அவன் கேள்விப்பட்டு அதிகவிசார மாய் அரண்மனையிற்போய்ச் சேர்ந்தான் அப்போது சதகண்ட னுக்குச்சமதையாயிருக்கிறவன் எண்பது சிரசும் நூற்றறுகாமும் உடையவன் அவன்பெயர் நிசாசரன் அவன்வந்து சதகண்டனைச் சேவித்து நீர் ஏனையா விசாரப்படுகிறீர் சீதாதேவியைச் செயிக்க வேண்டுமென்று பிரதிக்கினை செய்திருக்கிறீர் நான்போய் செயித் துவருகிறேன் எனக்குச்செலவு கொடுக்கவேண்டுமென்று கூறி னன். அப்போது சதகண்டன்கேட்டு அதிகசந்தோஷமாய்ச்சொ ல்லுகிறன், உன்முன்னே திருமூர்த்திகளுந் தேவேந்திராதிதேவர் களும் நிர்வகிக்கமாட்டார்கள் இராமலட்சுமணர்சீதாபிராட்டி இவ ர்களைப்பிடித்துக்கொண்டு வாருமென்று செலவுகொடுத்தான்.

அப்படியே ஏழாம்நாள்காலையில் நிசாசரன் தன்னுடையசேனைகளுடன் இருநூறுவெள்ளம் இரதங்களும் முன்னூறுவெள்ளம்யானைகளும் ஆயிரம்வெள்ளங் குதிரைகளும் இரண்டாயிரம்வெள்ளஞ்சிங்கங்களும் மூவாயிரம்வெள்ளஞ் சேனைகளுடன் இரதகஜதுரகபதாதிகளும் புறப்பட்டு வெகு ஆடம்பரத்துடன் இரணக்களம்வந்துசேர்ந்தான் அவன்வந்த ஆரபாரத்தை ஆஞ்சநேயர்பார்த்துச் சீதாப்பிராட்டியம்மன் எதிர்வந்து நிசாசரன் யுத்தத்திற்கு வந்தசங்கதிகளைச் சாங்கோபசாங்கமாய்ச் சொல்லியிருந்தார். இப்படியிருக்கும்போது நிசாசரன் தன்னுடைய சீதாபிராட்டியம்மன்பவர்கள்விட்ட பாணங்களையெல்லாம் பார்த்து இராமபாணத்தை எடுத்துத் தூபதீபங்கொடுத்து அந்த பாணத்தை கோதண்டத்தில் தொடுத்து அவர்கள்மேல் விடுத்தாள். அந்தபாணமானது வெளியிற் புறப்பட்டு அவர்கள்விடுத்த அஸ்திரங்களையெல்லாம் நடுபாதியிற்கண்டு தெறிந்து பின்னும் அஸ்திரங்கள் குதிரைகள் யானைகள் காலாள்கள் முதலியவைகளையும் சங்கரித்துவிட்டு நிசாசரன்மேலெதிர்த்தது அதைக்கண்ட நிசாசரன் தனதுவில்லில் அனேகஅஸ்திரங்களை சோனைமழை சொறிந்தாற்போல் வருஷித்தான் இந்த இராமபாணமானது அவன்பிறயோகித்த அஸ்திரங்களையெல்லாம் அறுத்துத் தும்சப்படுத்தி அவனது எண்பது சிரசையும் நூற்றிருபது கரத்தையுங்கொய்து மண்ணில்விழச்செய்து திருப்பாற்கடலில்போய் ஸ்நானஞ்செய்து சீதாப்பிராட்டியின் அம்பூறாப்பொதியிற் வந்தடைந்தது அப்போது அஸ்தமானமாயின அந்தகாரவிருள்வந்து மூடிக்கொண்டன இந்தவிசேடமெல்லாம்வேவுகாரர்பார்த்து உடனேபோய்ச் சதகண்டனிடத்திற்சொன்னார்கள் அதைக்கேட்ட சதகண்டன் தன்னுயிர்க்குயிராயிருந்த நிசாசரனென்பவன் மடிந்துவிட்டானென்று அதிக விசாரத்துடன் எழுந்திருந்து தன்னரண்மனைக்குப்போனான் எப்போ பொழுதுவிடியுமோவென்று நித்திரைப்பிடியாமல் புரண்டுக்கொண்டிருந்தான்.

எட்டாநாள்காலையில் சதகண்டனுடைய வீரதீரத்தைக்காண வருவான்போலச் சூரியனானவன் கீழ்த்திசைக் கடலிலுதயமாயினன் இப்பால் சதகண்டனானவன் நித்தியவிதிகளை முடித்துக்கொண்டு அறுவகைச் சுவையோடு இராவணபோசனஞ்செய்துசொர்க்கம் மத்தியம் பாதாளம் திசைகள் தீவாந்தரங்கள் முதலிய இடங்களில் தான்வைத்திருந்த அளவற்ற மூலபபடைகளை ஏககாலத்தில் வரவழைத்து அவர்களுக்கெல்லாமகரி-பரி-தேர்படைக்கலமுதலிய சிலப்புகளைக்கொடுத்து நூறுசிம்பங்களைப்பூட்டிய பிரகாசிக்கின்ற

தேரின்மீது சதகண்டன் ஆரோகணித்து நால்வகைச் சேனைகளும்
மூலப்படைகளும் தன்னைப்புடைசூழ்ந்துவர இரணபேரி-ஜெயபே
ரி-வெற்றிச்சங்கம்-தவண்டை-மல்லிரி ஆகுளி-சின்ன-எக்காளை-த
ப்பட்டமுதலிய போர்பறைகள் கோடைகால இடிகளுக்கொப்பாக
கணகணவென் றதிரத்தக்கதாக புறப்பட்டான் இவன்சேனைகளி
லுள்ள இரதகஜதுரகபதாதிகளின்பெருக்கை என்னென்று சொல்
லுவேன் பொனமயமாகிய வண்டில்கள் அச்சுமச்சுமுதலிய சிறப்பு
களைப்பெற்ற தோணிகள் இவ்வளவெனக் கணிக்கப்படுவனவோசி
த்திரமுகபடாபபிரகாசிக்கப் பிறையை நிகர்த்துக்காட்டும் கோடுக
ளில் வயிரப்பூண்களைத்தரித்து இருப்புலக்கைகளைத்துதித்துக்கர
ங்களிலேந்தி நீலகிரியை யொத்தபாரித்த திரேகங்களுடன் மேகங்
களு மஞ்சியோட வீறிட்டுச்செல்லும யானைக்கூட்டங்களை ஒருவ
ராலுங் கழிக்கப்படாத இரத்தின வண்டயங்கள் கால்களிலே சந்
திக்க அலைகளைப்போலப்பாயும் வேகமுள்ள குதிரைப்பந்திகளை அ
ளவிடப்பட்டதோ வில் - வாள்-தண்டம்சூலம் - சக்கரம் - தோம
ரம்-பிண்டி-பாலம்-முயனிக்கப் பாணமுதலியபற்பலஆயுதங்களைத்
தாங்கி வீராவேசங்களுடன் வடவையும் ஆலகாலமும் பலவுருக்
கொண்டெழுவதைப்போல கொக்கரித்துச் சீறிவரும் படைவீரர்க
ளின் பெருக்கைப் பிரமனாலும் நிதானிக்கப்படாது இப்படிபட்ட
சதுரங்கச் சேனைகளில்பெருத்து உண்டாகின்ற பலபலவாத்தியங்
களி னதிர்ச்சியும் இரதங்களோடும்கொக்கரத்தொனியும்மதயானை
கள் வீறிடுமொலியும் புரவிப்பந்திகள் கனைப்பிரேனசையும் படை
வீரர்களுடைய ஆரவாரங்களும் யேகமாயோங்கிப் பிரளயகாலத்
தைப்போல் மண்விண்திசைகளெங்கும் செவிடுபடமுழங்கின ஆகா
யத்தை யளாவிச்செல்லுந் தேர்களின்மீது நாட்டிய கொடிகளும்
யானைகளின்மீது விளக்குஞ் சண்டாக்களும் படைவீரர்கள் தாங்
கியிருக்கின்ற வெற்றித்துவசங்களும் வானவெல்லையைமூடிப்படப
டவென்றசைந்த இவ்வித ஆடம்பரங்களுடன் சதகண்டனனவர்
வெளியே புறப்பட்டான்.

இந்த விசேடமெல்லாந் தேவர்கள் கேட்டுச் சீதாபிராட்டிய
ம்மன் சதகண்டனைச் சம்மாரஞ்செய்கின்றவேடிக்கையைப்பார்க்க
வேண்டுமென்றுபரமசிவனும் பார்வதாதேவியம்மனும் ரிஷபவாக
னத்தின்மேலும் பிரமதேவரும் சரஸ்வதியும் அன்னவாகனத்தின்
மேலும்தேவேந்திரமகாராசனும் இந்திராணியும் அயிராவதத்தின்
மேலும் மற்றுமுள்ளதேவர்களும் அவரவர் விமானங்களிலுமேறி
முநீஸ்வரர்களும் அந்தரத்தில் நின்றுகொண்டு வேடிக்கைப்பார்த்
துநின்றார்கள்.

அப்போது சதகண்டன் நால்வகைச் சேனைகளோடுங்கூடி இரணக்களத்திற்கு வந்துசேர்ந்தார்கள் இச்சம்பவத்தையறிந்த ஜானகியம்மனும் தேறின்மீதிலேறிவில்லைவளைத்து நாணேறிட்டுச்சதகண்டனுடையசேனாசமுத்திரத்தில்நுழைந்தாள் வானரவீரர்களும்இருப்புலக்கை-குண்டந்தாடி-கதாயுதம்-சூலாயுதம் - முசலம்-பிண்டி - பாலம்முதலிய ஆயுதங்களைத்தாக்கி இராட்சதசேனைகளிற்போய்துகைகலந்து கெக்காதொனிகளைச் செய்தோடும் பொன்வண்டில்களையுருட்டி அச்சுகளைமுறித்து மச்சுகளை தூள்கள் படுத்திக்குத்துக்கால்களை நுறுங்கிப்பலகொத்துமணிகள்கலகலவென்றசையக் கொடுங்கைகளைச் சிதைத்துச் சொர்னகலசங்களை நிலத்திலுருட்டிச் சாரதிகளை மாத்துத்தேரிலே பூட்டியிருக்கின்ற புரவிப்பந்திகள்சிங்கநிரைகள் புலிகூட்டங்கள் முதலியவைகளை இருப்புலக்கையினாலடித்து இரணக்களத்திற் கிடத்திச் சிறகற்றபருவதங்களுக்கொப்பான அளவற்ற இரதங்களைச் சக்கைசக்கையாகப் போர்த்து இரணங்கள் முழுவது குலித்தும் யானைவீரர்களோ டெதிர்த்து இருபுறங்களினு மாறிமாறி யொலிக்கும் சிறுமணிகளை கலகலவென்றசைந்தோடத்தாங்கி நவரத்தின மயமாகிய சித்திர முகப்படாப் போத்திருக்கு மத்தகத்தை சிதைத்து இருப்புக்கைகளைப் பற்றப் பனையையொத்ததையும் பருத்த துதிக்கரங்களைச்சர்பங்களைப்போலச் சடார்பூமியெங்கனும் புரளத்தரித்தும் நட்சத்திரராசிகளுக்கொப்பாக துத்துகன்திசைதோறு மிறையும்படிக்குத் தவளநிறம்பெற்றவலிய தந்தங்களைப்பிளந்தும்சிறியவிழிகளைக்கெல்லியென்தும்புமேகங்களு மஞ்சவீறிடுந் தொனியைப்பெற்றபருத்தகளுத்துகளை வெட்டியும் உரலைப்போன்ற பாரித்தகால்களைத்துபதகர்த்தும் அசைவுபெற்றிருக்கும் வால்களைகத்துண்டித்துப் நீலகிரிக்கொப்பாக விளங்கும்கரிய உடல்களை இருகூறுக்கிக் காளமேகங்கள்வளவிடுதற்கொப்பாக அளவற்றயானைகளை யுத்தகளமுழுதும்விறிட்டுவிழத்தள்ளியும் குதிரைவீரர் களின்மேற்பாய்ந்து சத்துருக்கன் திடுக்கிடும்படிக்குப் பிடரிபயிர்களலையக்கனைக்குங்குரலோசையினை வாய்ந்த கழுத்துகளைத்தரித்து கடிவாளங்களை நுறுக்கி நவரத்தினக்கசிதமாக விருக்கின்றசீனிகளைத்திகைத்து சாமரையொத்தநீண்டவால்களைக் காற்றிற்பறக்க வெட்டியெறிந்து வெண்டையங்கள்கல்லுகல்லுலெனக் கவிக்கப்பாயும் கால்களை முறித்துக்கடலினிடத்தெழும் அலைகளைமறிவதைப்போலப் போர்களமெங்கனும் அளவற்ற குதிரைகளை மாய்த்து படைவீரர்களோடு எதிர்த்துச்சிரசங்கலைக் கவித்திருக்கின்ற வயிரமுடிகளைச் சிதைந்து வீரபட்டங்களைத்துளைகள்செய்து முத்தாரங்களைத் தாக்கிக் கலகலவென்னுமோசையெழ வசனிக்குங் கழுத்துகளையறிந்துகொடு

மைகளைப்பேசும் வாய்களைப்பிளந்துபற்களையுதிர்த்து தீயெழவுறுத்
திப்பார்க்கும் கண்களைக்கெல்லி மணிகளிட் டழைத்திருக்கு வாகுவ
லயங்களைப்பொடிபடுத்தியும் பர்வதாகிருதியாக வேங்கத்திரண்டிரு
க்கும்புயங்களைச்சரித்து வயிரக்கவசங்களைத்துளைகள்செய்து விசா
லமாகிய மார்பைப்பிளந்து விற்களையும்பாணங்களையுங் கொண்டிரு
க்கும் கரங்களைக்கண்டித்து வீரவண்டையங்களை நுறுக்கி ரிஷபத்தி
னைப்போலக் கெம்பீரமாகநடக்குங்காலகளைத்துண்டித்து முதுருக
ளிலிறுக்கியிருக்கும் அப்பும்பொதிகளை யறுத்தெரிந்து அவைகளில்
அடக்கியிருந்த பற்பல அஸ்திரங்களையொடித்தெரிந்து சண்டைமா
ருதத்தின் மோதலிற்பட்ட மரங்களைப்போல் யுத்தகள முழுவதும்
அளவற்றபதாதிவீரர்களைச்சின்னபடத்துணித்தெரிந்தும் இவ்வாறு
வானரவீரர்கள் வீராட்வசமேற்கொண்டு இராட்சசவீரர்களைநாசஞ்
செய்தார்கள் அதனல் இராட்சசவீரர்கள் வானரசேனைகளின் முன்
னின்றுயுத்தஞ்செய்யவலியற்றவர்களாய்நாறபுறத்தினுஞ்சிதறியோ
டத்தலைப்பட்டார்கள் அதைக்கண்டசதகண்டன் வடவாமுகாக்கினி
போலச்சீறி நம்மவர்களின் வீரத்துவமிகநன்றுமிகநன்றென கோப
நகைசெய்து சிதறியோடுஞ்சேனைகளையோடாதீர்களென்று தைரிய
ங்கூறி ஒன்ருகச்சேர்த்து போர்புரியும்படி ஆக்கியாபித்து இந்தச்சி
றுபெண்ணின்மீதுநாம்வில்லெடுப்பதுதகுதியல்ல நம்முடையசேனை
களில் ஒருவீரன்கொன்று தின்றுவிடுவான் என்று தனக்குத்தானே
தீர்மானித்து வில்லைத்தொடாமலும் ஆயுதங்களையெடாமலும் தேரி
ன்மீதாரோகணித்து வேடிக்கையைப் பார்த்திருந்தான்.

அப்போது இராட்சதர்கள் அவரவர்கள்வில்லைவளைத்து சீதா
தேவியருகில்வந்து சீதாவுடையஇரதத்தின்பேரில் பாணப்பிரயோக
ஞ்செய்தார்கள் அவர்கள்விடுத்தபாணங்கள்அம்மனுடையஇரதத்தி
ன்பேரிலும்இளையபெருமாள்பரதர்சத்துருக்கர்முதலியவர்கள்பேரி
லும் ஐம்பத்தாறுதேசத்தரசர்களிருக்கின்ற இரதத்தையுஞ்சுற்றிச்
சூழ்ந்துகொண்டன அப்போதுசீதாபிராட்டியம்மன்இளையபெருமா
ளைப்பாாத்து நீங்கள்யாவரும்பயப்படவேண்டாமென்றுஅவர்களுக்
குத்தயிரியங்கூறி அவர்கள்இரத்தையும் பின்னல்வைத்துக்கொண்டு

ஸ்ரீரகுநாயகர் சாரத்தியஞ்செய்ய இரதத்தின்பேரில்நின்றுகொண்டு
வில்லைவளைத்து இராமபாணத்தையெடுத்து தூபதீப நைவேத்தியங்
கொடுத்து மந்திரோச்சாடனஞ்செய்து கோதண்டத்திற் பூட்டி மா
ட்டிப் பிரயோகஞ் செய்தார்கள் எங்கும் அஸ்திரமாகப் பெய்தாள்
அந்த அஸ்திரமானது புறப்பட்டு வீறிட்டு இராட்சதாள்விட்ட அ
ஸ்திரங்களையெல்லாம் நடுபாதிற் கண்டித்துவிட இராட்சதவீரர்கள்
மிகுந்தகோபாவேசத்துடனே மகாசாக்கிரதையாக அனேக அஸ்தி
ரங்களை ஒன்றனந்தமாக நாற்புறத்திலும் பிரயோகஞ்செய்து அட்ட
காசஞ் செய்தார்கள் அப்போதுஜானகியம்மன் வாய்வாஸ்திரத்தை
யெடுத்துத் தொடுத்துப் பிரயோகஞ்செய்தாள் அந்தவாஸ்திரம்வெ
ளிப்பட்டவுடன்பிரசண்டவாயுவைபெருக்கி இடிகுமரலுடனே இரா
ட்சசர்கள்விட்டபாணங்களையெல்லாம் நாசஞ்செய்துதேர்களையுடை
த்துத்தன்ளிகுதிரைகளையறுத்தெரிந்தும் யானைகளின்மத்தகங்களை
ப்பிளந்தும் இராட்சசவீரர்களின்கரங்கைகளைவெட்டியும் இப்படிநா
னாவிதமாக தும்சப்படுத்தி சீதாபிராட்டியின் அம்புறாத் தூணியில்
வந்தடைந்தது அதனால்ராட்சசவீரர்கள் மிகுந்ததுன்பமடைந்து ரி
ஷபத்தின் காலிற்பட்ட நாகத்தைப்போலச்சீறி தங்கள்தங்கள்விற்க
ளைக்குறிப்பாகப்பிடித்து அநேகஅஸ்திரங்களை ஜானகியம்மாள்தேரி
ன்மீது சோனைமாரிபோலப்பொழிந்து இந்தபாணங்களினாலே நமக்
கெதிரியாகியமானிடப்பெண்ணும் வானரசேனைகளும்நாசமாய்போ
னதென்று தீர்மானித்து பார்த்திருந்தார்கள் இராட்சசர்கள் விட்ட
பாணங்கள் ஒன்றோடொன்றுநெருங்கி தனதுதேரைச்சூழ்ந்துக்கொ
ண்ட சீதாபிராட்டிபுன்னகைசெய்து வில்லில் இருபதுபாணத்தைத்
தொடுத்து இந்தபாணங்களினால் இராட்சசர்கள்நாசமாய்போகவே
ண்டுமென்று அபிமந்திரித்துவிடுத்தாள் அந்தபாணங்கள் மகா உச்
சாகத்துடனேபுறப்பட்டு இராட்சதாள்பேரிற்பாய்ந்து தேரையுடை
த்தும் வயிற்றைக்கிழித்தும் மண்டைகளையுடைத்தும் கைகால்களை
வெட்டியும் இப்படிஇராட்சசவீரர்களெல்லாரையும் அறுத்தெரிந்து
சீதாபிராட்டியம்மன் அம்புறாத்தூணியில் வந்தடைந்தன அதைக்க
ண்ட சதகண்டன் மகா ஆச்சரியப்பட்டு யோசிக்கலானான் எப்படி
யென்றால் நம்முடன்வந்த இரதகஜதுரகபதாதிகளும் அநேகயுத்தத்
தொழிற்கைதேர்ந்த வீராதிவீரரானசேனாதிபதிகளும் இந்தச் சிறுபெண்

ணின் அஸ்திரங்களினால் வெட்டுண்டு விழுந்து போனார்க ளென்றால் கேட்பவர்களுக்கு அதிசயத்தை விளைவிக்கின்றதாக விருக்கின்றது நாம் எதிரிலிருந்தே இவ்வற்புதங்களைக்கண்டோம் ஆகிலும் பெரித ல்லநாம் இந்தப்பெண்ணின்மீது வில்லெடுத்துச் சண்டைசெய்தால் நம்முடையபெருமைக்குஅழிவல்லவேயென்றுயோசித்துக்கொண்டு வில்லையெடுக்காமலும் அஸ்திரங்களைத்தொடுக்காமலும் பதாதியாக த்தேரின்மீதிருந்தானப்போது சீதாதேவியம்மன்இவனுடையயனே சுபாவத்தைதெரிந்துக்கொண்டு நம்மோடெதிர்த்த இராட்சசர்களை யெல்லாங்கொன்றோம் இவனேவில்லைக் கையிலெடாமலும் நம்மோ டெதிர்க்காமலும் பதாதியாகவிருக்கின்றான் எதிர்த்து யுத்தஞ் செய் யாம லிருக்கிறவன்மீது அஸ்திரங்களைத் தொடுக்கக் கூடாதென்று தர்மசாஸ்திரமிருக்கின்றதல்லவோ ஆகையால்நாமிவனைக்கொல்வது நன்றன்று இவன் எப்படிபோவானோவென்று பார்த்துக்கொண் டிருந்தாள் அப்போது சூரியடக்கவானும் அஸ்தமானார்.

அத்தருணத்தில் சரமண்டன் அனுமாரையழைத்துச்சொல்லு கிறான் ஓய் அனுமாரே நாம் இன்றையதினம் ஆயுதம்கையிலெடால் சீதாதேவியம்மன் சண்டைசெய்யும் வேடிக்கைப் பார்த்துக்கொண் டிருந்தேன் என்முன் திரிமூர்த்திகளும் எதிர்த்து நின்று யுத்தஞ்செ ய்ய கூப்பிடுவார்களென்றால் இந்தமானிடப்பெண்ணோ என்னைச்செ யிக்கப்போகிறாள் நான் இன்றையதினம் என்பட்டணத்திற்குபோய் நாளையதினம் சூரியோதயத்திற்கு உங்களுடையச்சேனைகளைச் சின் னபின்னமாக வெட்டியெறிந்து இராமலட்சுமணனையும் இந்தசீதை யும்பிடித்துக்கொண்டு போகாவிட்டால் என்பெயர் சதகண்டனே நல்லதாகட்டும் நீங்கள்பயந்து ஓடிப்போகிறீர்கள் அப்படிநீங்களோ டிப்போனாலும் நானுங்களைவிட தக்கினவனே நீங்கள் எவ்விடத்திலி ருப்பினும் பிடித்து என்னுடையஆயுதங்களுக்குப் பலிகொடுப்பேன் இன்றைய ராத்திரி முப்பது நாழிகை வரைக்கும் இவ்விடத்திலே உயிரோடு பிழைத்திருங்க ளென்று சொல்லி தனதுதேரைத் திருப் பிக்கொண்டு கோட்டைக்குள் நுழைந்து தன்னரண்மனையிற் போய் ச்சேர்ந்தான்.

அத்தருணத்தில் அனுமாரானவர் ஜானகியம்மன் முன்புவந்து கைகட்டிக்கொண்டுநின்று சதகண்டன் சொன்னசங்கதிகளைச் சாங்கோபாங்கமாக சொன்னார் அதைக்கேட்ட ஜானகியம்மன் கேளும் அனுமாரே அந்த சதகண்டன் ஆயுதமில்லாமல் தேரின்மீ திருந்து வேடிக்கைபார்த் திருந்தபடியினாலே அவனை கொல்லாமற் விட்டுவிட்டேன் அவன்போகும்போது அச்சமில்லாமல் இவ்வித சமாச்சாரங்களை உம்மிடத்திற்சொல்லிப்போனான் நல்லதுநீர் பொழுதுவிடிந்தவுடன் சதகண்டன் கோட்டைக்குப் போய் அவனைக்கண்டு இன்னுமிருக்கப்பட்ட சேனைகளைக்கூட்டிக்கொண்டு விரைவில்இரணக்களம் வந்துசேரும்படி ஆக்யாபித்து வாருமென்று செலவு கொடுத்தாள் அப்படியே அனுமார்பொழுது விடிந்தவுடனே அந்தர மார்க்கத்திற் பாய்ந்து சதகண்டராவணன் வீற்றிருக்கிற சபையின்முன்னே தூது தந்தபோதுஉனக்குச்சொன்னபுத்தியைக்கேளாமல் துர்புத்தியுடையமூடர்களான மந்திரிகள்பேச்சைக்கேட்டு உன்னுடைய தம்பிமார்கள் பிள்ளைகள் சேனாதிபதிகள் முதலான வீராதி வீரர்களையும் குதிரையானை தேர் காலாள்முதலிய நால்வகைச்சேனைகளையும் போக்கடித்தாயே இப்போது சீதாதேவியம்மன் உன்னை இன்னம்இருக்கப்பட்டசேனைகளை ஒன்றாகச்சேர்த்துக்கொண்டு விறைவில்ரணக்களத்திற்குவந்து சேரும்படியாகச்சொல்லி யனுப்பினாள் நீஇன்னும்தாமிசமாக ஏனிருக்கிறாய் சலுதியில்சேனைகளைகூட்டிபுறப்பட்டு இரணக்களத்திற்குவந்துஉன்பராக்கிரமத்தைக்காட்டென்று சொல்லிவிட்டு சீதாதேவியம்மனிருக்கும் இரணக்களம்வந்துசேர்ந்தார்.

அப்போது சதகண்டராவணன் தம்பியாகிய மகாமாயனென்பவன் சதகண்டனெதிரில்வந்துசாஷ்டாங்கமாக நமஸ்கரித்துச்சொல்லுகிறான் கேளும் அண்ணாவே முன்னேநான் சீதாதேவியுடன்போர் புரிதல்நமக்கு தக்கதல்லவென்று அநேகபுத்திகளைச்சொல்லியும் என்பேரில்கோபித்துக்கொண்டீரே இப்போதாகிலுந்தெரியவந்ததோ நமதுபட்டணத்திலிருந்த இராட்சதர்களெல்லாம் வியர்த்தமாய்மாண்டு போனார்களே பஞ்சகண்டன் யமகண்டன் நிசாசரன் குருதிண்ணன்முதலான வீராதிவீரர்கள் அந்த சீதாதேவியம்மன் அஸ்திரத்தினால்வெட்டுண்டு இரணக்களத்தில்நாயும்-நரியும்-காளியும்கூளியும்

தின்னவிழுந்து போனார்களே ஐயோ முன்னமே துர்ப்புத்தி மந்திரியாகிய மகோதரன் பேச்சைக்கேட்டு இலங்கையை அரசாட்சிசெய்த இலங்கேசன் கும்பகர்ணன் இந்திரசித்து அதிகாயன் மகாமாயன் நிகும்பன் அகம்பன் திரிசிரன் முதலான வீராதி வீரர்கள் இரணக்களத்தில் விழுந்து போனார்கள் அப்படிநீயும் என்பேச்சைக்கேளாமல் நமதுசேனைகளை யெல்லாம் நாசப்படுத்திவிட்டையே இப்பவும்என்னகெட்டுப்போனது நீயும்நானும்அந்தகுமாரத்தியையும் சீதாதேவியம்மனையும் சரணாகதியடையாமல் அவர்களுடன் எதிர்த்து யுத்தம் செய்வோமானால் இன்றையதினமே யமலோகத்தையடைவோமென்பது நமக்கே சித்தமாகத் தெரிந்திருக்கிறதென்று மகாமாயன் சொல்ல அதைக்கேட்ட சதகண்டன் மகாவிசனத்துடனே சொல்லத்தொடங்கினான் கேளும் தம்பிமகாமாயா எனது சகோதரர்களும் வீராதி வீரரான சேனாதிபதிகளும் நாலாயிரம்வெள்ளந் தேரும் பதினாயிரவெள்ளங் காலாள்களும் எனக்காகவல்லவோ இரணக்களத்திற்குச்சென்று போர்புரிந்து படுசூரணமாயிறந்துபோனார்கள் நமது தேசத்திலேபெண்கள்தவிர ஆண்பிள்ளையொருவரையுங்காணோமினிமேல் இவ்வடத்திலிருந்து இந்தப்பெண்களுடைய அழுங்குரலைக்கேட்டிருப்பதைப்பாக்கிலும் இரணக்களத்திற்குச்சென்றுபோர்புரிந்து பகைவரைவென்றால் வெற்றிப் பெறுகிறேன் இறந்தாலோ வீரசொர்க்கத்தையடைகிறேன் அப்படிசெய்யாமல் நாம்அவர்களிடத்திலே போய்சரணமடைந்தால் திரிமூர்த்திகளும்தேவர்களும் அதனைக்கேட்பாரும் நகையார்களா ஆகையால் நான்இரணக்களத்திற்குபோய் அந்தமானிடப்பெண்ணுடன் போர்புரிந்துசெயித்தால் நம்முடைய கோட்டைக்குவந்து சேருகிறேன் அப்படிஜெயிக்காமல் இரணக்களத்தில் விழுந்துபோனால் பிற்பாடுநீபோய் அந்தச் சீதாதேவியம்மன் பாதத்தில்விழுந்து ஒருவரம்பெற்றுக்கொள்ளவேண்டும் அதென்னவெனில் உன்னுடன்யுத்தஞ்செய்து இராம பாணத்தினாலே வெட்டுண்டு விழுந்துபோன இராட்சசர்களெல்லாம் வீரசொர்க்கங் கொடுக்கவேண்டுமென்று வரம்வாங்கிக்கொண்டு அவர்கள் உத்திரவுசெய்தப்படிநடந்து கொள்வாய் உன்னுடையசூதகத்தையும் நிறைவேற்றிக்கொண்டு மாண்டுபோன நம்மவர்களுக்கு எள்ளுந் தண்ணீருமி

றைத்து சுகமாயிருவென்றுசொல்லி உடனே தனதுரதத்தைக்கொண்டுவந்துநிறுத்திகுதிரைகளும்சிங்கங்களையும்பூட்டி தனது நூறுசிரசிலும் கிரீட மணிந்து மார்பில் தங்க கவசம்தரித்து அம்புறாத்தூணியையெடுத்து முதுகிற்கட்டி மேருகிரிக்கொப்பான வில்லைக்கரத்திற்பிடித்து தேரின்பேரிலேறி மகா வுச்சாகத்துடனேன் இரணக்களத்திற்குவந்துநின்றான். இச்சம்பவத்தை யறிந்த அனுமாரானவர் துரிதமாகப்போய் சீதாதேவியம்மன்பாதத்தில்விழுந்து தாயே சதகண்டனென்பவன் சகல ஆயுதபாணியாய் இரதத்தின்பேரிலேறி இரணக்களத்திற்குவந்து நம்மை யெதிர்பார்த்து இருக்கிறானென்று சொன்னார். இதைக்கேட்ட ஜானகியம்மன் புன்னகைசெய்து அவனுடைய பராக்கிரமத்தை நான்சற்றுநேரத்தி லறிகிறேன் நீங்கள்யாவரும்அஸ்திரசஸ்திரங்களை தொடவேண்டியதில்லை யென்றுசொல்லிதனது தேரை சதகண்டனுக்கெதிரில் கொண்டுபோகும்படி ஸ்ரீராமமூர்த்திக்கறிவிக்க அப்படியேநல்லதென்றுஇராமமூர்த்தியானவர் தேரைச்சக்கிராகாரமாகத்திருப்பி சதகண்டனுக்கெதிரில்நடத்திவந்துநிறுத்தினார். உடனேசதகண்டன்கோபமீறினகரங்களில்சக்கரம்-பிண்டிபாலம்-எறியம்புவேல்-வாள்-கதை-இருப்புலக்கை-ஈட்டி-முத்தலைச்சூலம் முதலிய ஆயுதங்களைத்தரித்து நீலகிரியைப்போல் பாரித்திருக்கின்றதனது வில்லைவளைத்து நாணியேறிட்டு டங்காரத்தொனிசெய்து அஸ்திரங்களைச் சரமாரியாகபொழிந்தான் அஃதக்கண்டஜானகியம்மன் ஓ சதகண்டா இலங்காபுரமுழுவதும் துன்பத்தைவிளைந்துக்கொண்டிருந்த அற்பபுத்தியினையுடைய இராவணேசுவரனும் இவ்விடத்திலிருந்துக்கொண்டு செங்கோல்செலுத்திவருகின்றநீயும் உனதுதம்பிமார்களும் தாய்வயிற்றில் கருப்பமானமுதல்கொண்டுநேற்றையவரையில்சகலசம்பத்துடனேவாழ்ந்தீர்கள் இப்போதுஉமது தம்பியாகியமகாமாயனுந்தவிரமற்றவர்களைஎல்லாம்யமலோகத்தில் குடிபுகுத்திவைத்தேன் ஆபினும்அவர்களுக்குஅரசனைபிரிந்தோமென்கிற துக்கமொன் றிருக்கிறதல்லவோ ஆதலால்அவர்களுக்கு அவ்விடத்திலும் நீயே அரசனாக இருக்கும்படியாக உன்னையும் அவ்விடத்திற்கு அனுப்பிவைக்கிறேன் அஞ்சவேண்டாமென்று ஜானகியம்மன்சொல்ல, அவைகளனைவற்றையும் சதகண்ட ராவணன்கேட்டு

அதிககோபங்கொண்டு கொவ்வைகனியையொப்ப விழிகள் சிவந்து
அழற்சுவாலையெழ பெருமூச்செறிந்துவடவாயைப்போலச்சீறி தன
துவில்லினிடமாக விஷங்களைக்கக்கவல்ல தீட்சண்யமுள்ளபாணவரு
ஷங்களை அபரிமிதமாகப்பூட்டி ஜானகியம்மன்மீதும் அவளேறியிரு
க்கின்ற இரதத்தின்மீதும்உதயகிரியைப்பனிப்படலமூடுவதைப்போ
லச்சொரிந்து சிங்கத்தை யொப்பக் கர்ச்சித்தனன். அதனைஜானகிய
ம்மன்கண்டு இவன்வில்வித்தைவெகுநேர்த்தி வெகுநேர்த்தியென்று
நகைத்து கோதண்டமென்னும்வில்லை தன்கரத்திலெடுத்துவளைத்து
அதிலே கணக்கிராத பாணஙகளைத் தொடுத்து விட்டு தீயையிறைத்
துக் குமுறிக்கொண்டு மேலிட்டுவருகின்ற சதகண்டன்விட்ட அஸ்
திரங்களையெல்லாம் சின்னபின்னப்படவாட்டிப்பின்னர்இரண்டுகணை
யினால் அவனுடையதூணியையும்வில்முதலிய ஆயுதங்களையும்பொடி
படுத்தினள் உடனேசதகண்டன் தனது கரங்களினால் நூறுவில்லுக
ளைத்தாங்கி அம்மனுடைய தேரின்மீதுமிகவுந்தீட்சண்யமுள்ள ஆயி
ரம்பாணங்களைப் பிரயோகித்தான். அப்போதுஜானகியம்மன் அவ்
வஸ்திரங்களைவிடுத்து அவைகளனைத்தையும் பொடிபடுத்தி வேறே
மூன்று பாணத்தினால் அப்பாதகனுடைய தேரையும் தேர்ப்பாகனை
யும் குதிரைகளையுந்துண்டித்துநாசமாக்கினள். அதற்குசதகண்டன்
சற்றுமிளையாது உடனேமற்றொருதேரிலேறிவந்து தனதுவில்லில்ப
தினாயிரங்கணைகளை ஒரேதடவை பூட்டிப் பிரயோகித்தனன். அக்க
ணைகளுக் கெதிராக ஜானகியம்மன் பற்பல அஸ்திரங்களைத் தொடு
த்து அதஞ்செய்துபின்னுஞ்சிலகணைகளினால் அவனுடையநூறுதலை
களிலு மிருக்கும் கிரீடங்களையும் நறுக்கிப் பொடி படுத்தினள் பின்
புசதகண்டனானவன் மதிமயங்கி வேறே விற்களை நூறு கரங்களினு
ந்தாங்கி அக்கினியாஸ்திரம் பிரமாஸ்திர நாகாஸ்திர முதலியதெய்
வப்படைகளைப்பூட்டி இதனால் ஜானகியம்மன்கண்டு தனதுவில்லில்
இராமபாணங்களைப் பூட்டி அவன் விட்ட அஸ்திரங்களை யெல்லாங்
கண்டித்துப் பின்னும் இருபது பாணங்களைவிட்டு சதகண்டனு
டைய இருபதுகரங்களைவெட்டி யெறிந்தனள். அதனால் சதகண்ட
ன்மிகுந்த கோபாக்கிராந்தனாய் நாகத்தைப்போலச்சீறிவிழிகளில் அ
னற்பொறிபறக்கப்பார்த்துநமதுகரங்கள் இந்தமானிடப்பெண்ணின்

அஸ்திரங்களினாலே வெட்டுண்டுபோச்சுதே எனத்திரேகம்வேர்த்து மற்றகரங்களினால் இருக்கின்றவில்லுகளில் அனேக அஸ்திரங்களைப் பூட்டி கோடைகாலத்து மழையைபோல்பொழிந்தான் உடனேஜானகியம்மன் தனதுவில்லில் அக்கினியாஸ்திரத்தைத்தொடுத்து சதகண்டன்விட்ட அஸ்திரங்களையெல்லாங் கண்டித்து உடனேமுப்பது பாணத்தைவிடுத்து அவனுடையமுப்பதுகரங்களையும் வெட்டியெறிந்தாள் அதனால்சதகண்டன்மிகுந்த வருத்தத்தையடைந்து திரிமூர்த்திகளையும் அஷ்டத்திக்குப்பாலகரையும் ஜெயிக்கவல்லபராக்கிரமத்தையுடைய நாம் இன்றையதினம் இந்தமானிடப்பெண்ணினிடத்தில்ஐம்பதுகரங்களைப்பறிகொடுத்தோம் இனிஎவ்வாறுகமுடியுமோவென்று யோசித்து தனதுகரங்களி லிருக்கின்ற விற்களில் வாய்வாஸ்திரம் வருணாஸ்திரம் இயமாஸ்திரம் பாசுபதாஸ்திரமுதலிய தெய்வப்படைகளைத்தொடுத்து பிரயோகஞ்செய்தான் அவ்வஸ்திரங்கள் வெளிப்பட்டுச்சீறிவருவதைஜானகியம்மன்கண்டு புன்னகைசெய்து தனதுவில்லில் பத்துபாணங்களைதொடுத்து இந்தபாணங்கள் பகைவன்விட்ட அஸ்திரங்களைத்துண்டித்து அவன் ஐம்பதுகரங்களையும் கண்டித்து மீளக்கடவதென்றுவிடுத்தாள் அவ்வஸ்திரங்கள் புறப்பட்டு வடவைக்கனலையொப்பச்சீறி சதகண்டன்விட்ட அஸ்திரங்களையெல்லாம் கண்டித்தெறிந்து அவனுடையஐம்பதுகரங்களையும் கண்டித்தும் மீளக்கடவதென்றுவிடுத்தான் அவ்வஸ்திரங்கள்புறப்பட்டு வடவைக்கனலையொப்பச்சீறி சதகண்டன்விட்ட அஸ்திரங்களைஎல்லாம்கண்டித்தெறிந்து அவனுடையஐம்பதுகரங்களையும்அறுத்தெறிந்துமீண்டும் ஜானகியம்மன் அம்புறாத்தூணியிலே வந்தடைந்தது உடனேசதகண்டன்வெட்டுவிழுந்தகரங்கள்போகமற்றநூறு கரங்களில் வில்லுகளைத் தாங்கி அஸ்திரங்களை யெடுத்துச்சோனை மாரிபோலச் சொரிந்தான் ஜானகியம்மன் தனதுகோதண்டத்தில் மூன்று அர்த்தசந்திர பாணங்களை யெடுத்து அபிமந்திரித்து பின்னும் பத்து ராமபாணத்தைத்தொடுத்து அவனுடைய கரங்களையெல்லாம் வெட்டுவரக் கடவதென்று ஆக்கியாபித்து விடுத்தாள் அவ்வஸ்திரங்கள் கோடையிடியினை யொப்பக் குமுறி சதகண்டன் விடும்பாணங்களைக்கண்டித்து யவனுடைய நூறுகரங்களையும் வெட்டியெறிந்து

மீண்டும் ஜானகியம்மன் அம்புறாத்தூணியில் வந்தடைந்தது அதைக்கண்ட சதகண்டன் மிகுந்த கோபமுடையவனாய்த் தேரினின்றுந் தரையிற் குதித்து நம்முடைய இருநூறு கரங்களையும் வெட்டிய இந்தமானிடப் பெண்ணின் தொண்டையைக் கடித்து உதிரத்தைக்குடித்து கோபமாறுவோமென்று வேகமாக வருவதை ஜானகியம்மன்கண்டு ஐந்து இராமபாணத்தை யெடுத்து தூபதீப நைவேத்தியங்கொடுத்து மந்திரவுபதேசம் பண்ணிவிட்டுவிட்டாள் அந்தப்பாணங்கள் புறப்பட்டு சதகண்டனுடைய நூறுதலைகளையும் வெட்டிக்கொண்டுபோய் சமுத்திரத்தி லெறிந்து ஸ்நானஞ்செய்து மீண்டும் ஜானகியம்மனுடைய அம்புறாத் தூணியில் வந்தடைந்து அப்போது ஆகாயத்தினிடமாக நின்று பார்த்துக்கொண்டிருந்த பரமசிவனும் பார்வதாதேவியும் பிரம்மாவும் சரஸ்வதியும் தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிஸ்வரர்களுஞ் சந்தோஷப்பட்டு ஸ்ரீ மகாலட்சுமியாகி சீதாதேவி யம்மனாலே இராட்சசர்க ளெல்லாம் நாசமாய்ப்போனார்கள் இனிமேல் தேவர்கள் முனிவர்கள் மானிடர்கள் முதலான சகலருக்கும் யாதொருபயமு மில்லையென்று புஷ்பமாரிபொழிந்து ஆசீர்வாதஞ்செய்து அவரவர்கள் தங்கள் தங்களிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

பத்தாநாட்காலையில் மகாமாய னென்பவன் நமது தமையனாகிய சதகண்ட னிறந்தானென்றறிந்து கோட்டையிலிருந்து புறப்பட்டு இரணக்களத்திற்கு வந்து ஜானகி யம்மனுடைய பாதத்தில் விழுந்து எழுந்து கைகட்டி வாய்புதைத்து தாயே அடியேனை இரட்சித்தருள வேண்டுமென்று சொன்னான். அப்போது மனோன்மணியாகிய சீதாதேவியம்மன் சந்தோஷப்பட்டு உனக்கென்ன வரம்வேண்டுமென்று கேட்க மகாமாயன் சொல்லுகிறான். தாயே என்னுடையதமையன் சகோதரரும் பிள்ளைகளும் முதலான யாவர்களும் துன்மார்க்கர்க ளானதால் நீ விடுத்த இராமபாணங்களினாலே வெட்டுண்டு விழுந்துபோனார்கள் அவர்களுக்கு வீரசொர்க்கங் கொடுக்கவேண்டும் அவர்களுடைய ஸ்திரீ ஜனங்களையும் அக்கினிப்பிரவேசம் பண்ணி வைக்க வேண்டும் சொர்க்க பதவியுங் கொடுக்க வேண்டுமென்று கேட்டான் அதைக்கேட்ட சீதாதேவியம்மன் மிகவுஞ் சந்தோ

ஷ்டிட்டு அப்படியே வரங் கொடுத்தேனென்று அநுமாரையுங் கூட அனுப்பி இராட்சச ஸ்திரீகளெல்லாரையம் அக்கினியில் தள்ளும்படி ஆக்யாபித்தாள் உடனே அனுமாரும் மகாமாயனும் கோட்டைக்குட் சென்று இரண்டு பனை உயரம் ஆழமுள்ள குழிவெட்டி அக்குழியில் சந்தனக்கட்டை முதலிய பலவித கட்டைகளை நிரப்பிக் கொளுத்திக் கொழுந்துவிட் டெரியும்போது கணவனை யிழந்த இராட்சச ஸ்திரீயெல்லாம் பிடித்துக் கொண்டுபோய்த் தள்ளினார்கள்.

தள்ளினவுடனே இராட்சச ஸ்திரீகளெல்லாம் வெந்து சாம்பலாய் வீரசொர்க்கத்தில் தங்கள் கணவனுடன் சுகித்திருந்தார்கள் உடனே அனுமாரானவர் மகாமாயனை அழைத்துக் கொண்டுபோய் திருப்பாற் கடலிலே ஸ்நானஞ் செய்யச்சொல்லி ஜானகியம்மன் முன் அழைத்துவந்து விட்டார் மகாமாயன் ஜானகியம்மனைக்கண்டு இடப்புரிவலம்புரியாய் பிரதட்சணஞ் செய்து கீழேவிழுந்து எழுந்து கைகட்டி வாய்புதைத்து பயபத்தி விசுவாசத்துடனே நின்றான் கேளும்பிள்ளாய் மகாமாயா உன் தமையனாகிய சதகண்டன் துன்மார்க்க நடத்தையினால் புத்திரமித்திர களத்திராதிகளுடனே ரணக்களத்தில் வெட்டுண்டு விழுந்துபோனான் அவனைக்குறித்து நீ விசனப்பட வேண்டியதில்லை விபீஷணர் உடன்பிறந்த இராவணேசுரனுடைய துன்மார்க்க நடத்தையைக்கண்டு உடனே அவனைவிட்டு நீங்கி எங்களிடத்தில் வந்தடைந்து சுகப்பட்டார் அதுபோல நீயும் மகாபுத்திமானாகையால் உனது தமையனுடனே சேர்ந்துயுத்தஞ்செய்து எங்களைப் பகைத்துக்கொள்ளாமல் சரணாகதி யடைந்தமையால் சுகப்பட்டாய் நீ இப்போதே உனது தமையன் அரசுசெலித்திய கோட்டைக்குட் சென்று அவனுடைய மகுடத்தை யணிந்துகொண்டு சுகமாகச் செங்கோல் செலுத்தும் பிள்ளாயென்று விடைகொடுத்தாள் அவ்வாக்கியத்தை மகாமாயன் சிரமேற்கொண்டு நல்லது தாயேயென்று கோட்டைக்குட்போய் சதகண்டனுடைய இராச்சியங்களை யனுபவித்துக் கொண்டு சுகமாக யிருந்தான்.

பதினோராநாட் காலையில் சீதாதேவியம்மன் ஆஞ்சநேயனை யழைத்து கேளும் ஸ்ரீராமசுவாமியுடனே நான்பிரதிக்கினை செய்தபி

ரகாரம் உன்னாலல்லவோ முடிந்தது நீ மகா சாமர்த்தியவான் மகா பரரோபகாரி உனது பெருமையை என்னாற் சொல்லக்கூடுமோ நாம் அயோத்தியா புரிக்குப் போகவேண்டுமென்று சொல்ல அனுமார் அதைக்கேட்டு மகா சந்தோஷத்துடனே ஜானகியம்மனுடைய பாதத்தில் விழுந்து சேவித்து நல்லது தாயேயென்றுசொல்லி ஸ்ரீராமரும் சீதாதேவியும் ஆரோகணித்திருக்கின்ற இரதத்தை ஒருகையிலும் இலட்சுமணர் பரதர் சத்துருக்கர் இவர்களேறியிருக்கும் இரதத்தை மற்றொருகையிலும் மற்றசுக்ரீபன் முதலிய சேனாதிபதிகளும் வானரசேனைகளும் அடங்கி மேருகிரியைப் போலப் பருத்திருக்கின்ற இரதத்தை தனது வாலினால் சுற்றித் தூக்கிக்கொண்டு புறப்பட்டு ஆகாயமார்க்கமாய் மேகம்போலக் கிளம்பி சப்தசமுத்திரங்களைத்தாண்டி அயோத்தியாபுரி பட்டணத்திற்கு நேராகவந்து இரதங்களைப் பூமியிலிறக்கினார். அப்போது ஸ்ரீராமரும் ஜானகியம்மனும் மிகுந்த சந்தோஷத்துடனே தேவர்கள் பூமாரிபெய்ய காந்தருவர் கின்னரிமுதலிய வாத்தியங்களை முழங்க இரதத்தைவிட்டிறங்கினார்கள் உடனே அனுமாரானவர் ஸ்ரீராமமூர்த்தியையும் ஜானகியம்மனையும் நமஸ்கரித்து கைகட்டிக்கொண்டு எதிர்நின்றார்.

ஸ்ரீராமசுவாமியானவர் மனக்களிப்புடனே அனுமாரைப் பார்த்து உனக்கு என்னவரம் வேண்டுமென்ன அனுமார் கைகுவித்து நின்று சொல்லுகிறார் கேளும் லோக ரட்சகா எனக்கு பிரம்மபட்டம் கொடுக்கவேண்டுமென்று கேட்டார் ஸ்ரீராமமூர்த்தி சந்தோஷப்பட்டு கேளும் ஆஞ்சநேயரே அந்தப் பிரம்மாவுக்கு நூறு வயதானவுடனே பிரம்மபட்டத்தை உனக்கே கொடுப்பேனென்று வரங்கொடுத்து சீதா சமேதராய் மகுடம் புனைந்துகொண்டு இலட்சுமணர் பரதர் சத்துருக்கரென்று சொல்லப்பட்ட மூன்று தம்பிமார்களும் பக்கத்தில் நின்று கவரிவீச சலீதசத் தரசர்களும் கொலுக்கூடத்தில் நிறைந்திருக்க வேதியர்கள் வேதாகமங்களை யோத கட்டியக்காரர்கள் எச்சரிக்கைகூற மனுநீதி தவறாமல் இராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டு சுகமாய் வாழ்ந்திருந்தார்கள் சுக்ரீபன் ஸ்ரீராமப் பிரபுவினிடத்தில் விடைப்பெற்றுக் கொண்டு வானரசேனைக

ளுடனே புறப்பட்டுப் போய் கிஷ்கிந்தை பட்டணத்தையடைந்துயா தொருபயமுமில்லாமல் செங்கோல் செலுத்திக் கொண்டிருந்தான் இந்தக்கதையைக்கேட்டவர்களும் படித்தவர்களும் எழுதினவர்களும் எழுதியதைவைத்திருந்தவர்களும் உருக்கமாய்க் கேட்டு வேறொருவருக்குச் சொன்னவர்களும் ஊழ்வினையினின்றும் நீக்கப்பட்டவர்களாம் அஷ்ட ஐஸ்வரியங்களையும் பெற்று இம்மையில் இன்பத்தையும் மறுமையில் சுவர்க்கத்தையும் பெற்று சுகமாக வாழ்ந்திருப்பார்கள்.

சதகண்டராவணன்கதை

முற்றிற்று.

---